வெளியீடு 17-5-2006 | Issued 17-5-2006

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT


வெள்ளிக்கிழமை, ஜனவரி 20, 2006—தொகுதி 88—எண் 2

Friday the 20th January, 2006—Volume 88—No. 2



சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

922
21.9.06

20-1-2006

## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **1. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) பொது நிறுவனங்கள் குழு | 137 |
| (ஆ) மனுக்கள் குழு | 137-138 |
| (இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | 138 |
| **2. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும் பதிலுரையும்—** | 138-236 |
| * மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 156-158, 161-162, 165-166, 180, 183, 184, 189-190, 193, 194, 196-197, 204, 206, 208-234 |
| திரு. ஜி.கே. மணி | 138-148, 151-160 |
| *திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் | 160-184 |
| டாக்டர் க. பொன்முடி | 185-192, 194-198, 202-205, 207-208, 215, 235 |
| **3. இடைக்கால வரவு-செலவுத் திட்டம், 2006-2007, அளித்தல்—** | |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 236-286 |

பக்கங்கள்

4. **முன்பண மானியக் கோரிக்கைகள், 2006-2007, பேரவையில் வைத்தல்—**

* மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 287-290

5. **அறிவிப்பு—**

இடைக்கால வரவு-செலவுத் திட்டம், 2006-2007, வெட்டுத் தீர்மானங்கள் —அளிப்பது 290-291

6. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 291-292

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை**

**தை 7, பார்த்திப — திருவள்ளுவர் ஆண்டு 2037**

**2006 ஜனவரி 20, வெள்ளிக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்*
*நீள்வினையால் நீளும் குடி."*

விடாமுயற்சியும், நிறைந்த அறிவும் என்ற இரண்டினையும் கொண்டு, ஓய்வில்லாமல் ஒருவர் செய்கின்ற செயலால், அவரது குடியானது உயர்வடையும்.

## 1. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். முனைவர் மு. தம்பிதுரை.

**டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2006 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 186 முதல் 190 வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

### (ஆ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கை அளித்தல், திரு. பி.எம். நரசிம்மன்.

[2006 ஜனவரி 20

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2003–2006 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 130–வது அறிக்கையினைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல், திருமதி வளர்மதி ஜெபராஜ்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2006 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 62–வது அறிக்கையினைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 2. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும் பதிலுரையும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும் பதிலுரையும். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு மேதகு ஆளுநர் அவர்களின் பேருரைக்கு நன்றி தெரிவிக்கிற இந்தத் தீர்மானத்தில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் கூற விழைகிறேன். இப்பொழுது 12–வது சட்டமன்றப் பேரவையினுடைய நிறைவுக் கூட்டம். இது நிறைவுக் கூட்டம் என்ற காரணத்தினாலே இந்த 12–வது சட்டமன்றப் பேரவையில் எனக்கு வாய்ப்பளித்த, எந்தப் பதவிக்கும் செல்லாமல், அரசியலிலோ அல்லது கட்சியிலேகூட எந்தப் பதவிக்கும் செல்லமாட்டேன் என்று என் வாழ்வும், வளமும் இந்த மக்களின் உரிமைப் பிரச்சினை என்று போராடிக்கொண்டிருக்கிற சமூக நீதிக் காவலர், மருத்துவர் அய்யா அவர்களுக்கும் (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை. பேசும்பொழுதே ஆரம்பமே சரியாக இருக்காது (குறுக்கீடுகள்).

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227004
சென்னை-600 008



2006 ஜனவரி 20]

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பதவிக்கும் ஆசையில்லை என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். அது அவர்களுடைய குடும்ப வாரிசுகளுக்கும் பொருந்துமா என்ற கேள்வியை நான் இங்கே கேட்க விரும்புகின்றேன். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர் எந்தப் பதவிக்கும் செல்லமாட்டேன். (குறுக்கீடுகள்) கட்சியிலே எந்தப் பதவியும் வகிக்க மாட்டேன். அரசு பதவிகளுக்குச் செல்லமாட்டேன் என்று சொல்லி, மக்களுக்காகப் போராடிக்கொண்டிருக்கிற சமூக நீதிக் காவலர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, அதைப்போல என்னுடைய நம்பிக்கை நட்சத்திரம் பசுமை நாயகர் மருத்துவர் சின்ன அய்யா அன்புமணி அவர்களுக்கும், என்னை இந்த மன்றத்திற்கு அனுப்பி வைத்த தொகுதி மக்களுக்கும், தேர்தலில் வெற்றிக்காக உழைத்த என்னுடைய அணியைச் சேர்ந்த அனைவருக்கும், அதே நேரத்தில் (குறுக்கீடுகள்) சட்டமன்றத்தில் கடமை தவறாமல், கண்ணியத்தைக் காத்து, மரபுகளை, விதிமுறைகளைக் கடைபிடித்து, பா.ம.க.–வுக்கு சட்டமன்றத்தில் பெருமையைத் தேடிக்கொடுத்த எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அதைப்போல இந்த மாமன்றத்தை வழிநடத்திக் கொண்டிருக்கின்ற...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, என்ன பிரிவு உபசாரமா? இன்னும் பேசுவீர்களே.. (சிரிப்பு)

**திரு. ஜி.கே. மணி:** தலைவரே சொல்கிறேன், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அதேபோல் எதிர்க் கட்சி வரிசையிலே நாட்டுப் பிரச்சினைகளுக்கு ஒருமித்த கருத்தை உருவாக்குவதற்கு எதிர்க் கட்சிகளை எல்லாம் ஒருங்கிணைத்து, வழி நடத்திச் சென்றுகொண்டிருக்கின்ற தலைவர் கலைஞர் அவர்களுக்கும், எங்களுடைய கூட்டணிக் கட்சியின் தலைவர்களுக்கும், எதிர்க் கட்சி வரிசையிலே இருக்கிற சட்டமன்றக் கட்சித் தலைவர்களுக்கும், எதிர்க் கட்சி வரிசையிலே அமர்ந்திருக்கிற அத்துணை சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும், நம்முடைய அமைச்சர் பெருமக்களுக்கும், ஆளுங்கட்சி நண்பர்களுக்கும், அதைப்போல அதிகாரி பெருமக்களுக்கும், சட்டமன்றத்தில் பணியாற்றிக்கொண்டிருக்கிற செயலர் அவர்கள், மற்றுமுள்ள அலுவலர்கள், பணியாளர்கள், பத்திரிகை நண்பர்கள், காவல் துறையிலேயிருந்து பாதுகாப்புப் பணியிலே ஈடுபட்டிருக்கிற அத்துணைப் பேர்களுக்கும், ஒட்டுமொத்த தமிழக

D
V214,31'206
06;88.2

மக்களுக்கும் இந்த நிறைவுக் கூட்டத்தில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

2006 ஆம் ஆண்டு தமிழக மக்கள், நன்கு மழை பெய்து, வளம் செழித்து எல்லா வளமோடு நிறைவாக வாழ வேண்டுமென்ற என்னுடைய ஆவலை முதலில் வெளிப்படுத்தி உரையை நான் தொடங்குகிறேன். 'தாய் வளர்த்து நாம் வளர்ந்தோம், தமிழ் வளர்த்து நாம் வாழ்வோம், அன்னை தமிழைக் காப்போம், அனைத்து மொழிகளையும் மதிப்போம்' என்ற எங்களுடைய அய்யா அவர்களின் அறைகூவலை எடுத்து வைத்து

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்ற குறளுக்கேற்ப இந்தச் சட்டமன்றத்தில் எதிர்க் கட்சி வரிசையிலே இருக்கிற நாங்கள் எல்லாம், இந்த அரசு செய்கிற தவறுகளைச் சுட்டிக்காட்டுவது எங்களுடைய கடமை என்ற அடிப்படையிலே சிலவற்றை நாங்கள் இங்கே சுட்டிக்காட்டி வருகிறோம். அதே நேரத்தில் ஆளும் கட்சி, நாட்டுக்குத் தேவையான நல்லவற்றை செய்தபோது நாங்கள் வரவேற்க தவறியதில்லை என்பதையும் இங்கே நான் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, அவை, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) ** தாங்கள் குறிப்பிட்டது எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறை சொல்வதற்காக அல்ல, நடந்தவற்றைச் சொல்கிறேன். ** இப்போதும் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** ** அவைக் குறிப்பில் இருக்கக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசியவற்றில் ** அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மணி, அரை மணி நேரம் இருக்கிறது. நீங்கள் அவைக் குறிப்பில் ஏறக்கூடிய நல்ல செய்திகளைச் சொல்லுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. ஜி.கே. மணி:** அதே நேரத்தில் தமிழர்களுக்கு முக்கியமான நாள் தைத் திருநாள். நான்கு நாட்கள் கொண்டாடுவது வழக்கம். அது தமிழ்நாட்டில் உள்ளவர்கள், உலகெங்கும் வாழக்கூடிய தமிழர்கள் கொண்டாடக்கூடிய திருநாள். இந்த நான்கு நாட்களில் முதல் நாள் போகியிலே சட்டமன்றக் கூட்டம். இடையிலே சனி, ஞாயிறு. திங்கட்கிழமை உழவர் திருநாள், காணும் பொங்கல், கரிநாள் என்று சொல்வது தமிழர்களுக்கு மிக முக்கியமான நாள். அந்த நாட்களிலேகூட எதிர்க்கட்சியிலே எல்லோரும் எடுத்துரைத்தும்கூட இந்தத் தமிழர் திருநாளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், உழவர் திருநாளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இந்த அரசு நடந்துகொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போல, அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள்கூட இந்த உழவர் திருநாளுக்கு விடுமுறைவிட்டார்கள். அதையெல்லாம் நீங்கள் மாற்றிவிட்டீர்கள் என்பதை இங்கே நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, இங்கே நாங்கள் எல்லாம் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சட்டமன்றத்திற்கு வருகிறபோது எங்களுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்கள், எங்களையெல்லாம் அழைத்து, பயிற்சி கொடுத்து, நீங்கள் கடமை தவறாமல் நடந்துகொள்ள வேண்டும், கண்ணியத்தோடு நடந்துகொள்ள வேண்டும், அங்கே மாண்பு இருக்கிறது, மரபுகள் இருக்கின்றன, விதிகளை மீறக் கூடாது என்று பயிற்சியையும் கொடுத்து, வாக்குறுதி எடுத்து வைத்து அனுப்பி வைத்தார்கள். ஆகவே, இந்த 4½ ஆண்டு காலத்தில் அடக்கமாக, விதிமுறைகளை மீறாமல், மரபுகளைக் கடைபிடித்து நாங்கள் நடந்துகொண்டிருக்கிறோம். எங்கள் நடவடிக்கைகள்கூட உங்களுக்குத் தெரியும். ஆனால், இப்படி இருக்கின்ற சூழ்நிலையில் இங்கே அரசுக்கு எதிரான கருத்துகளை நாங்கள் சொல்கின்றபோதுகூட அடக்கத்தோடும், நாகரீகமான, பண்பான வார்த்தைகளை நாங்கள் பயன்படுத்தியிருக்கிறோம். ஆனால், நான் வேதனையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய மருத்துவர் அய்யா அவர்கள், தலைவர் கலைஞர் அவர்களைச் சந்திக்கின்றபோது முதலமைச்சரைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னதாகக் குறிப்பிட்டார்கள். அந்த வார்த்தையையேகூட இங்கே சொல்வதற்குச் சற்று வருத்தமாக இருக்கிறது, வேதனையாக இருக்கிறது. வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன், நான் பதில் சொல்லியாக வேண்டும் என்பதற்காக. ஆகவே, முதலமைச்சர் அவர்களை துகிலுரிய வேண்டுமென்ற வார்த்தையை சொல்லவேயில்லை. இது என்னுடைய

தாய்மீது சத்தியம், என் தாய் மொழி தமிழ்மீது சத்தியம் என்பதை இந்த மாமன்றத்திலே உறுதிபட சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அப்படிப்பட்ட சொல்லாத வார்த்தையை, பழிச் சொல்லாக வேண்டாத ஒரு வார்த்தையைச் சொன்னது, தேவையில்லாத ஒன்று என்பதையும் இந்த நேரத்திலே சொல்லி, அப்படிப்பட்ட வார்த்தையைச் சொல்வதற்கு அவர் பண்புகெட்ட மனிதருமல்ல, அவர் அடக்கத்தோடு பேசக்கூடியவர் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10–10*

அதேபோல, நம்முடைய ஆளுநர் உரையிலே முதலிலே, எடுத்த எடுப்பிலே சொல்லப்பட்டிருப்பது 15 அம்சத் திட்டம். 15 அம்சத் திட்டதைச் சொல்லியிருக்கிறீர்கள். இந்த 15 அம்சத் திட்டம் இதுவரையிலே நிறைவேறாத திட்டமாக இருக்கிறது. ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்லுகிறேன். 2002–லே ஆளுநர் உரையில் பக்கம் 11–லே சொல்லப்பட்டிருப்பது அனைவருக்கும் வளமான வாழ்வு. இதிலே ஒன்று அனைவருக்கும் வேலைவாய்ப்பு, இது வாழ்வாதார பாதுகாப்பு என்பதாகும். அப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இங்கே வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கு என்ன முயற்சி எடுக்கப்பட்டது? எந்த முயற்சியும் இல்லை. ஆனால், அரசுப் பணிகளிலே நியமனம் செய்வதற்குத் தடை விதித்தீர்கள். ஆட்சிக்கு வந்த உடனேயே 2001 ஆம் ஆண்டு வேலை நியமன தடைச் சட்டத்தைக் கொண்டு வந்து எல்லாத் துறைகளிலும் வேலை நியமனம் இல்லாமல் போனது. படித்துவிட்டவர்கள் இன்று 55 இலட்சம் பேர். அதிலே பெண்கள் 17 இலட்சம் பேர். வேலை இல்லை. ஆக, இப்படி வேலை இல்லாமல் இருக்கிற இந்தச் சூழ்நிலையில் (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** நான் இந்தக் கருத்தையொட்டி சொல்கிறேன். (குறுக்கீடு) கருத்தையொட்டி சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இளைஞர்களைப் பொறுத்தவரையில் படித்து முடித்துவிட்டு அரசு வேலை வேண்டும் என்கிற ஒரு மனோபாவம் இருக்கிறது. எல்லோருக்குமே அரசு வேலை தருவது என்றால் எந்த அரசாங்கத்தாலும் நிச்சயமாக முடியாது. எனவேதான், தமிழகத்தினுடைய பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்கின்ற உயர்ந்த மனப்பான்மையுடன் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு தொழிற்சாலைகளை எல்லாம் தமிழ்நாட்டுக்குக் கொண்டுவந்து அதன்மூலம் வேலைவாய்ப்பை



உருவாக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணத்திற்கு, ஒவ்வொரு ஒன்றியத்திலும் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலம் பல்வேறு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு தொழில்வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அதேபோன்று தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறையைப் பொறுத்தவரையிலே இந்த 4 ஆண்டு காலத்தில் 2½ இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஓராண்டு காலத்தில் 2 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படவிருக்கிறது. எனவே, அரசு வேலைதான் என்பதல்ல. அரசு அந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவது அரசினுடைய கடமை என்பதை உணர்ந்து, அந்த infrastructure–ஐ உருவாக்கித் தருவதன் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆனால், மத்தியிலே இருக்கிற நீங்கள், தமிழ்நாட்டுக்கு எத்தனை தொழிற்சாலைகளைக் கொண்டுவருவதற்கு அங்கே நீங்கள் போராடிக் கொண்டு வந்தீர்கள்? அதுதான் எங்களுடைய கேள்வி.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எல்லாத் துறைகளிலும் தடை ஆணை பிறப்பிக்கப்பட்டு வேலைவாய்ப்பு உருவாக்கப்படவில்லை என்று சொன்னார்கள். தேவைப்படுகின்ற துறைகளில் வேலைவாய்ப்புக்குத் தடை தளர்த்தி வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக காவல் துறைக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. மருத்துவத் துறைக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. கிராம நிர்வாக அலுவலர்கள் பணி தோற்றுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** உங்கள் வாதத்திற்கு எடுத்துக்கொண்டாலும்கூட இன்று தமிழக அரசுத் துறைகளிலே, அரசுத் துறைகள், சார்பு நிறுவனங்களிலே இதுவரையிலே காலி ஏற்பட்ட இடங்கள், காலியாக இருக்கிற இடங்கள், புதிதாக காலியாகிற இடங்கள் எல்லாம் சேர்த்து 2 ¾ இலட்சம் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. இதை யாரும் மறுக்க முடியாது. இதை நிரப்புவதற்கு என்ன தயக்கம்? 2 ¾ இலட்சம் பேருக்கு வேலை கிடைத்திருக்கும். காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு மனமில்லை.

அதேநேரத்தில் இன்னொன்றைச் சொல்கிறேன். இங்கே தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக 4 நிலைகளிலே தேர்வு செய்யப்படுகிறார்கள். இதிலே நிலை ஒன்று, Group–I என்று

சொல்லுகிறோம். அதிலே ஒரு ஆண்டுக்கு RDO, கோட்டாட்சியர் அந்தஸ்த்திலே தேர்வு செய்யப்படக்கூடியவர்கள் ஒரு ஆண்டுக்கு 25-லிருந்து 30 பேர் என்று சொல்லலாம். 30-க்கு மேலேகூட வரலாம். இப்படி இந்த 5 ஆண்டு காலத்திலே 30 பேர் என்று சொன்னால் 120-லிருந்து 150 பேர் வரைக்கும் வந்திருக்கிறது. சில ஆண்டுகள் கழித்து இவர்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக வரக்கூடிய வாய்ப்பு. அதேபோன்று காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்படக்கூடியவர்கள் ஐ.பி.எஸ். அதிகாரிகள். ஆக, இப்படி 100-லிருந்து 150-க்கு மேற்பட்டவர்கள் எதிர்காலத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் வருவதற்கு நீங்கள் தடையாக இருந்திருக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டை உங்கள்மீது நான் சுமத்த விரும்புகிறேன். 150-க்கு மேற்பட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தமிழ்நாட்டுக்குக் கிடைக்காமலே போய்விடும். அதற்குக் காரணம் இந்த அரசு. ** இன்றைக்கு 150 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், ஐ.பி.எஸ். அதிகாரிகள் வரமுடியாது. இது ஒன்று. (மணியடிக்கப்பெற்றது) அதைப்போல, இன்னொன்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, நீங்கள் சொன்ன கருத்து சரி. ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக வரவிடாமல் செய்திருக்கிறீர்கள் என்று சொன்னீர்கள் சரி. ** என்று சொல்வது கண்ணியக் குறைவானது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

முற்பகல் 10-15

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, இது எங்களைப் பார்த்து சொன்ன வார்த்தை. அது அப்படியே இருக்கிறது. நான் சொல்லுவேன். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, ** இதை மீண்டும் சொல்வேன். எங்களைப் பற்றி இந்த அவையிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஏன், நான் சொல்லக் கூடாது ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை கண்ணியக் குறைவான வார்த்தைகள். அவை, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, நீங்கள் சொல்லியிருக்கிறீர்களே, முதலமைச்சர் சொன்னார்களே எங்களைப் பார்த்து. இது (குறுக்கீடுகள்) Unparliamentary word-அல்ல, parliamentary word-தான். இதன் முன்னுதாரணம் இருக்கிறது ...

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்று சொன்னதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே பேசியிருக்கிற வார்த்தை. சொல்வதனாலே தப்பில்லை. ஏற்கெனவே பதிவாகியிருக்கிறது. மீண்டும் ஒரு தடவை பதிவாகிறது. ** பதிவாவதிலே தவறே இல்லை என்று சொல்லி இந்த ஆளுநர் உரையிலே மீண்டும் ஒன்றைச் சொல்லியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்பது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. ஜி.கே. மணி:** மோனோ இரயில் திட்டம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னாலே நீங்கள் மெட்ரோ இரயில் திட்டம் கொண்டு வருவதாகச் சொன்னீர்கள். இந்தியாவிலேகூட டில்லி, மும்பை, கொல்கத்தா போன்ற மாநகரங்களிலே இதுபோன்ற திட்டங்கள் இருக்கின்றன. அதன் அடிப்படையிலே சென்னை மாநகரத்திலும் கொண்டு வருவதாகச் சொன்னீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**திரு. ஜி.கே. மணி:** நான் சொல்லிவிடுகிறேன். சொல்லி முடித்துவிடுகிறேன். கொண்டு வருவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இதற்கு ஆய்வையும் நடத்தினீர்கள். ஆனால், நம்முடைய சென்னையைப் பொறுத்தவரையிலே, ஒரு நாளைக்கு 30 இலட்சத்திலேயிருந்து 40 இலட்சம் பேர் பயணம் செய்யக்கூடிய அளவிற்கு மக்கள் நெரிசல், போக்குவரத்து நெரிசல் மிகுந்த நகரம். இங்கே இந்த மோனோ இரயில் திட்டம் என்பது குறைந்த தூரமே செல்லக்கூடிய, குறைந்த பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய திட்டம். இதற்கு கூடுதல் செலவு. ஆகவே, இந்தப் பெருநகரத்திற்கு (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**திரு. ஜி.கே. மணி:** நான் முடித்துவிடுகிறேன். முடித்துவிடுகிறேன். சொல்லிவிடுகிறேன். அப்புறம் நீங்கள் கேளுங்கள். சொல்லிவிடுகிறேன். ஆகவே, இது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு திட்டம். நீங்களே மெட்ரோ

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இரயில் திட்டம் என்று சொல்லிவிட்டு இப்போது மாற்றியிருக்கிறீர்கள். அதிலும்கூட 10-01-2006-லே நீங்கள் பத்திரிகையிலே ஒப்பந்தப்புள்ளிகள் கோரியிருக்கிறீர்கள். டெண்டர் கோரியிருக்கிறீர்கள். 13ஆம் தேதி சட்டமன்றம் நடைபெற இருக்கிறது. இது மிகப் பெரிய திட்டம். கொள்கை முடிவு எடுக்க வேண்டிய திட்டம். 13ஆம் தேதி சட்டமன்றம் கூடுகிற இந்த நிலையில் 10ஆம் தேதி நீங்கள் ஒப்பந்தப்புள்ளி கோரியதன் மர்மம் என்ன? அதே நேரத்தில் இங்கே கூட ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய திரு. ஜி.கே. மணி அவர்கள் அடிப்படையிலேயே தவறான தகவல்களை அவைக்குத் தந்துகொண்டிருக்கிறார்.

ஒன்று. இந்த மோனோ இரயில் திட்டம் கூடுதல் செலவு பிடிக்கக் கூடியது. இரண்டாவது இந்த M.R.T.S. திட்டமானது குறைவான செலவு பிடிக்கக்கூடியது என்று சொல்கிறார். ஒன்றை நான் அவருக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். மோனோ இரயில் திட்டத்திற்கு ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு ஏறத்தாழ 50-லிருந்து 60 கோடி ரூபாய்தான் செலவு வரும். ஆனால், அந்த எம்.ஆர்.டி.எஸ். என்கின்ற அந்த மெட்ரோ இரயில் திட்டத்திற்கு ஒரு கிலோ மீட்டருக்கு ஏறத்தாழ 250 கோடி ரூபாய் செலவு ஆகும். எது குறைவான செலவு உடையது? தயவுசெய்து அடிப்படையிலேயே தவறான தகவல்களைத் தரக் கூடாது.

மற்றொன்று, மோனோ இரயில் திட்டம் குறைவான கால அளவைப் பிடிக்கக் கூடியது. குறைந்த காலத்திலே அதைச் செயல்படுத்த முடியும். ஆனால், மெட்ரோ இரயிலை டில்லியிலே பார்த்திருப்பீர்கள். இப்போது அந்தத் திட்டத்தில் 20 கிலோ மீட்டர் தூரத்தைப் போடுவதற்கு ஏறத்தாழ 12 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. 20 கிலோ மீட்டர் போடுவதற்கு 12 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. ஆனால், இந்த மோனோ இரயில் திட்டத்தை ஏறத்தாழ இரண்டு ஆண்டு காலத்திற்குள் முடிக்க முடியும். இன்றைக்கு உலக அளவிலே அது பழைய concept. இதற்கு முன்னாலே, மோனோ இரயில் வருவதற்கு முன்பாக மெட்ரோ இரயில் சிஸ்டத்தை தேர்வு செய்தார்கள். இப்போது, இந்த மோனோ இரயில் சிஸ்டம் வந்ததற்குப் பின்பு உலக அளவிலே இதுதான் இன்றைக்கு குறைவான செலவு உடையது, நிறைவான வசதிகள் உடையது என்று



எல்லா நாடுகளும் ஏற்றுக்கொண்டு பல நாடுகளிலே, குறிப்பாக ஆஸ்திரேலியாவிலே இதை அமல்படுத்தியிருக்கிறார்கள். மலேசியாவிலே இன்றைக்கு மோனோ இரயில் திட்டம்தான் செயல்படுத்தப்படுகிறது. ஜெர்மனியிலே, அமெரிக்காவிலே இப்படி உலகத்திலே இருக்கின்ற வளர்ந்த நாடுகள் அத்தனையும் இன்றைக்கு மோனோ இரயில் சிஸ்டத்தைத்தான் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஏன் இன்னும் நாம் பழைய பஞ்சாங்கத்திலேயே இருக்க வேண்டும். இன்னும் வெளிநாடுகளுக்கு இணையாக, மற்ற நாடுகளுக்கு இணையாக சென்னை நகரைப் போக்குவரத்துத் துறையிலே இன்றைக்கு அம்மா அவர்கள் எல்லா வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்பதற்காக, இப்படிப்பட்ட அற்புதமான திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதற்குப் பாராட்ட உங்களுக்கு மனம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாறாக, அதை குறை சொல்வது உள்ளபடியே சென்னை நகர மக்கள் மட்டுமல்ல, தமிழக மக்களே உங்களை மன்னிக்க மாட்டார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் மன்னிக்க மாட்டார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். (குறுக்கீடுகள்) நான் உதாரணத்திற்காக, இதற்காக அல்ல. இந்த வார்த்தைக்காகச் சொல்லவில்லை. நீங்கள் நன்றாக கவனிக்க வேண்டும். சத்தம் போடக் கூடாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை. இப்படி ...

**திரு. ஜி.கே. மணி:** அதாவது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. ஜி.கே. மணி:** நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அமைச்சர் சொன்னார். நான் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** நான் சொல்லிவிடுகிறேன். நான் எல்லாம் சொல்லிவிடுகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு அமைச்சர் சொன்னார், இதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனக்கு விளக்கம் சொல்ல வேண்டும். மோனோ இரயில் திட்டம் எத்தனை கிலோ மீட்டர் தொடர்ந்து

போகலாம்? மோனோ இரயில் திட்டத்தில் எத்தனைப் பயணிகளை ஏற்றிச் செல்லலாம்? 60–லிருந்து 80 பயணிகளுக்கு மேலே ஏற்றிச் செல்ல முடியாது. நீங்கள் 300 கிலோ மீட்டர் தொலைவு மாநகரத்தில் (குறுக்கீடுகள்) போக முடியாது. (குறுக்கீடுகள்) போக முடியாது. (குறுக்கீடுகள்)

முற்பகல் 10–20

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** அதையும் சொல்லி விடுகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தில் நுனிப்புல் மேய்ந்து விட்டு தகவல்களைச் சொல்லக் கூடாது. முழுமையாகத் தகவல்களைத் தெரிந்துகொண்டு பேச வேண்டும். கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இருங்கள். குறுக்கே பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) இது முறையில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கத்தைச் சொல்கிறார்கள். விளக்கத்தைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இல்லை, இல்லை, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே-(குறுக்கீடுகள்) இந்த மோனோ இரயில் திட்டம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் விளக்கம் கேட்கிறீர்கள். அவர் விளக்கம் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** ஒவ்வொன்றையும் அப்போதைக்கப்போது சொல்லிக்கொண்டே வந்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) மணி, நீங்கள் முழுவதும் சொல்லிவிட்டீர்கள் அல்லவா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் விளக்கம் கேட்டீர்கள். அவர் விளக்கம் சொல்கிறார். அதிலே தகராறு பண்ணினால் எப்படி? (குறுக்கீடுகள்) நீங்கள் விளக்கம் கேட்கிறீர்கள், அவர் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த மோனோ இரயில் திட்டத்தைக் கொண்டு



வருவதற்கு முன்பாக, – P.T.C.S. – Pallavan Transport Consultancy Services–இடம் ஏற்கெனவே சென்னை நகரில் நாளுக்கு நாள் பெருகி வருகின்ற வாகனப் போக்குவரத்து நெரிசல்களை எப்படிக் கையாளுவது; அதற்கு மாற்று வழிகள் என்ன என்பதைப் பற்றி கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பே நாங்கள் ஆய்வு செய்யச் சொல்லியிருந்தோம். அதனுடைய அடிப்படையிலே ஏறத்தாழ 2 ஆண்டுகாலத்திற்கு முன்பாக இருந்து ஆய்வு செய்து, அவர்கள் பரிந்துரைத்த ஒரு திட்டம்தான். M.R.T.S. திட்டம் மற்றும் மோனோ இரயில் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களையும் அவர்கள் முதலில் ஆய்வு செய்தார்கள். இந்த இரண்டு திட்டங்களையும் ஆய்வு செய்துவிட்டு, Metro Rail திட்டத்தைக்காட்டிலும் மோனோ இரயில் திட்டம்தான் சிறந்தது என்று பல்வேறு ஆய்வுகளின் அடிப்படையில், புள்ளிவிவரங்களின் அடிப்படையில் அவர்கள் பரிந்துரை செய்தார்கள். அதனுடைய அடிப்படையில்தான் இந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதே தவிர, மேலெழுந்தவாரியாக இந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. விரிவான ஆய்வுக்குப் பின்பு விரிவான புள்ளிவிவரங்களின் அடிப்படையிலேதான் இந்தத் திட்டம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொன்றையும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) பயணிகளுடைய எண்ணிக்கை பற்றிச் சொல்கிறேன். பயணிகளின் எண்ணிக்கை — ஒரு carriage இருக்கிறது. ஒரு carriage-க்கு 60 பேர். அதிலே பல carriage-கள் வரலாம். (குறுக்கீடுகள்) போகலாம். போகலாம். அதே மாதிரி, மற்றொன்றையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். முழுவதுமாகச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

மணி, உங்களுக்கு மற்றொரு விவரத்தையும் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மெட்ரோ இரயில் திட்டத்திலே கால அவகாசம் கூடுதலாக ஆகும். ஏறத்தாழ சென்னை நகரத்தினுடைய தேவையைப் பூர்த்தி செய்வதற்கு 20 ஆண்டுகாலத்திற்கு மேலாக ஆகும். (குறுக்கீடுகள்) நான் எவ்வளவோ சொல்கிறேன். ஏன் குறுக்கே பேசுகிறீர்கள்? கேள்விக்குப் பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, கேட்ட கேள்விக்கு அவர் பதில் சொல்கிறார். (குறுக்கீடு) மணி கேள்வி கேட்டார். அதற்கு விளக்கம் சொல்கிறார் அவர். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** என்னைப் பேசவிடுங்கள். முழுவதுமாகச் சொல்ல விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கேட்டதற்குத் தான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) முழுமையாகச் சொல்லிவிடுகிறேன். நீங்கள் கேட்டதற்குப் பதில் சொல்கிறேன். மெட்ரோ இரயில் திட்டத்தில் கால அவகாசம் 20 ஆண்டுகாலமாகும். இந்த மோனோ இரயில் திட்டத்தில் 2 ஆண்டு காலம், கால அவகாசம் குறைகிறது.

இரண்டாவதாக, சென்னை நகரம் Earthquake zone என்ற வரையறைக்குள் இன்றைக்கு வந்திருக்கிறது. புவியியல் நிபுணர்கள் சென்னை மாநகரத்தை Earthquake zone என்று அதாவது பூகம்பம் ஏற்பட வாய்ப்பு உள்ள பகுதி என்று கண்டறிந்து, ஆய்வு அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த மெட்ரோ இரயில் திட்டம், பாதாள இரயில் திட்டம், சென்னைக்குப் பாதுகாப்பானது அல்ல என்பதையும் அந்த P.T.C.S. இன்றைக்கு ஆய்விலே கண்டறிந்து இருக்கிறது.

அதோடுமட்டுமல்ல, 20 ஆண்டு காலம் மட்டுமல்ல. மற்றொன்று, இடம் மற்றும் கட்டடங்களை அப்புறப்படுத்த வேண்டி இருக்கும் அல்லது மிகுந்த இழப்புகள் ஏற்பட வாய்ப்பு இருக்கும். அந்த மெட்ரோ இரயில் திட்டத்தை எடுப்பதால் அரசுக்கு ஏராளமான இடையூறுகள் ஏற்படும், பொதுமக்களுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்வதில் இடையூறுகள் எல்லாம் ஏற்படும் என்று நடைமுறைச் சிக்கல்களை எல்லாம் கண்டறிந்ததற்குப் பின்புதான், இந்த மோனோ இரயில் திட்டத்திலே அப்படிப்பட்ட சிக்கல்கள் இல்லை. இன்னும் ஏற்கெனவே இருக்கின்ற சாலைகளைப் பயன்படுத்தினாலே போதும். Land acquisition problem-மே வராது. நிலம் கையகப்படுத்தும் பிரச்சினைகள் இந்த மெட்ரோ இரயில் திட்டத்திலே இருக்கிறது. மோனோ இரயில்களிலே அந்தப் பிரச்சினைகள் எல்லாம் இல்லை. இப்படி இரண்டு திட்டங்களையும் ஆய்வு செய்து, புள்ளி விவரங்களின் அடிப்படையில் விஞ்ஞான ரீதியாக சாத்தியக்கூறு உள்ளதுதான் இந்த Mono Rail என்று கண்டறிந்துதான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், இதைப் பொறுக்க முடியாதவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நற்பெயர் ஏற்படக்கூடிய எந்தத் திட்டத்தை அம்மா அவர்கள் கொண்டு



வந்தாலும் அதை எதிர்ப்பதே உங்களுடைய இலட்சியமாகவும், குறிக்கோளாகவும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற உங்களைத் தமிழக மக்கள் நிச்சயமாக மன்னிக்கமாட்டார்கள்; நிச்சயமாக 2006 தேர்தலில் உங்களுக்குத் அதைப் பாடமாக தமிழக மக்கள் புகட்டுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-25

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, தலைப்புச் செய்திகளுக்கு வாருங்கள். (குறுக்கீடுகள்) நேரமில்லை. தலைப்புச் செய்திகளுக்கு வாருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பேச விட்டுவிட்டு, முழுவதுமாக அதைப் பற்றி பேசியதற்குப் பின்னால் விளக்கம் சொன்னால்கூட பரவாயில்லை. முழு நேரமும் எடுத்துக்கொண்டால் நாங்கள் எப்படி பேசுவது? ஒட்டுமொத்தமாக அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்ததாகச் சொன்னார்கள். நிபுணர்கள் கொடுத்த கருத்து எங்களிடத்திலே இருக்கிறது. இது முழுக்க முழுக்கப் பயன்படாத திட்டம், பத்திரிகையிலே வந்த தகவல்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** எந்தத் தவறான தகவலையும் சொல்லக் கூடாது. எந்த நிபுணர்கள் கொடுத்தத் தகவல் இது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, நீங்கள் மோனோ இரயிலிலேயே சுற்றிக்கொண்டிருந்தீர்கள் என்றால் நேரம் முடிந்துவிடும். நீங்கள் சொன்னதற்கு அவர் விளக்கம் சொல்லிவிட்டார். அடுத்த Point-க்குப் போங்கள் நீங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இன்னொன்றுகூட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மோனோ இரயிலுக்காக **

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தவித ஆதாரமும் இல்லாமல் வாய்க்கு வந்தபடியாக குற்றச்சாட்டுகள் அடுக்கிக்கொண்டே போய் சொல்கிற அவருடைய குற்றச்சாட்டுகள் அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். ** (குறுக்கீடுகள்) தயவுசெய்து, நீங்கள் சொல்வதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? ஏதோ வாய்க்கு வந்ததை (குறுக்கீடுகள்) என்ன ஆதாரம் இருக்கிறது? (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** என்ன ஆதாரம் இருக்கிறது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், திரு. மணி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரம் இல்லாமல் வாய்க்கு வந்தபடியாக குற்றச்சாட்டு சுமத்துவது மரபுமீறிய செயல். அதனால் இதையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, உங்களுக்கு நேரம் ஒதுக்கீட்டுப்படி 10–30 மணிக்கு நீங்கள் முடிக்க வேண்டும். இன்னும் 3 மணித் துளிகள் இருக்கின்றன. நீங்கள் சொல்ல வேண்டிய வேறு கருத்துகளைச் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குங்குமம் இல்லை. உங்கள் பத்திரிகை, உங்களுக்கு ஆதரவான பத்திரிகைதான், அப்புறம் தருகிறேன். உங்களுக்கு ஆதரவாக, உங்களைப் பாராட்டி எழுதக்கூடிய பத்திரிகைதான் என்னிடத்திலே இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** ஒரு நிமிடம், ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. (குறுக்கீடுகள்) திரு. மணி.

**திரு. ஜி.கே. மணி:** ஒரு நிமிடம், ஒரு நிமிடம்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** எந்த ஆதாரத்திலிருந்து பேசுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) எந்த ஆதாரத்தை வைத்துப் பேசுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) எந்த ஆதாரம் என்று சொல்ல வேண்டும்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நீங்கள் அடுத்த Point–க்கு வாருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** எந்த ஆதாரத்திலிருந்து பேசுகிறீர்கள்? பத்திரிகை என்றால் பத்திரிகைகாரர்களை அடிப்பதும்,



பத்திரிகைகாரர்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்துவதும் உங்களுடைய கொள்கை. நீங்கள் பத்திரிகையை ஆதாரமாகக் காண்பித்தால்.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, உட்காருங்கள் நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள் உட்காருங்கள். நான் சொல்லிவிடுகிறேன் (குறுக்கீடுகள்) திரு. ஜி.கே. மணி அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லுவதற்கு முன்னால் அதற்குரிய ஆதாரத்தை என்னிடத்திலே காட்டிவிட்டு நீங்கள் சொல்லவேண்டும். தாங்கள் என்னிடத்திலே வந்து கேட்கிறபோது சில பத்திரிகைகள் இருக்கின்றன அதை மட்டும் நான் படிக்கப் போகிறேன் என்றுதான் நீங்கள் சொன்னீர்கள். எந்த ஆதாரத்தையும் இதிலே நீங்கள் என்னிடத்திலே காட்டவில்லை. ஆகவே, ஆதாரம் இல்லாமல் சொன்ன காரணத்தால் அவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அடுத்த Subject–க்குப் போங்கள். இன்னும் இரண்டு மணித் துளிகளில் முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கக் கூடாது. (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, It is only a discussion. (குறுக்கீடு) It is only a discussion, குற்றச்சாட்டுக்கு வரவில்லை. Speaker Sir, Point of Order. It is only a discussion. இதில் குற்றச்சாட்டு என்பது வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள் உட்காருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அமைச்சர் உட்காருங்கள். 'ஓர் உறுப்பினர் எழுத்து மூலமாக முன்கூட்டியே பேரவைத் தலைவர், அமைச்சர், சம்பந்தப்பட்ட உறுப்பினர் ஆகியோருக்குத் தெரிவித்திருந்தாலன்றி மற்ற எந்த உறுப்பினர் மீதோ அல்லது அலுவலர் மீதோ அவதூறாகவோ அல்லது தனிப்பட்ட முறையில், அவர் மீது குற்றஞ்சாட்டக் கூடாது. அவ்வாறு முன்னறிவிப்பு கொடுப்பது, குற்றஞ்சாட்டப்பட்ட உறுப்பினரோ அல்லது அமைச்சரோ அதனைப் புலனாய்வு செய்து பதில் அளிப்பதற்கு ஏதுவாக இருக்கவேண்டும்.

மேலும் அவ்வாறான முன்னறிவிப்பினை சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கோ அல்லது அமைச்சருக்கோ, நேரடியாகவோ அல்லது சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் மூலமாகவோ கொடுக்கலாம்.

எனினும், அவ்வாறு சொல்லவிருக்கும் குற்றச்சாட்டுகள் பேரவையின் கண்ணியத்தைக் குறைப்பதாகவோ அல்லது பொது நலனுக்கு ஒவ்வாததாகவோ அல்லது பேரவைமுன் இருக்கும் அலுவல்களைக் குறித்து நேரடியாகத் தொடர்பு இல்லை எனப் பேரவைத் தலைவர் கருதுவாரேயானால் அதனை எந்த நேரத்திலும் எந்த உறுப்பினரையும் தடை செய்யலாம். ஆகவே, அந்த அடிப்படையிலே நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறேன். அடுத்த பாயிண்டுக்கு நீங்கள் போங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10–30*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)* ஒரு நிமிடம் உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குற்றச்சாட்டைக் கூற வேண்டுமென்றால் ஆராய்ந்து, அறிந்து அவைக்குத் தெரிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதைச் சொல்லியாகிவிட்டது. அது முடிந்துவிட்டது.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** வெறும் பத்திரிகைச் செய்தியை வைத்துக் கொண்டு பேசக் கூடாது. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, அடுத்த பாயிண்டுக்கு போங்கள். இன்னும் மூன்று மணித் துளிகளில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** ஒரு பத்திரிகைச் செய்தியை வைத்துக் கொண்டு பேசக் கூடாது. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அதைச் சொல்லி முடித்தாகிவிட்டது. சட்ட அமைச்சர், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* சொல்லியாகிவிட்டது. *(குறுக்கீடுகள்)* இல்லை, அவரை உட்காரச் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* சொல்லியாகிவிட்டது. அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. *(குறுக்கீடு)* மணி, அடுத்த பாயிண்டுக்கு



போங்கள். இன்னும் 5 மணித் துளிகள் இருக்கின்றன. அடுத்த பாயிண்டுக்கு போங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது குற்றச்சாட்டு அல்ல. *(மணியடிக்கப்பெற்றது.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. செத்த பிணத்திற்கு எதற்கு வைத்தியம் பார்த்துக்கொண்டு இருக்கிறீர்கள்? முடிந்துவிட்டது. *(குறுக்கீடு)* அடுத்ததைப் பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது குற்றச்சாட்டு அல்ல. 13 ஆம் தேதி சட்டமன்றம் கூடுகிறது. 11 ஆம் தேதி பத்திரிகையிலே விளம்பரம். இது கொள்கை முடிவு. மிகப் பெரிய திட்டம். இந்தத் திட்டத்தைப் பற்றி எதிர்க் கட்சி வரிசையிலே விவாதிக்கக் கூடாதா? இருக்கிற திட்டத்தைப் பற்றி விளக்கம் கேட்கக் கூடாதா? *(மணியடிக்கப்பெற்றது)* ஏன், விளக்கம் கேட்கலாமே? தவறே கிடையாதே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, இதற்கெல்லாம் நிறைய முன்னுதாரணங்கள் இருக்கின்றன. சட்டமன்றம் கூடுவதற்கு முன்னால் இதையெல்லாம் அறிவிக்கலாம். அதைப்பற்றியெல்லாம் கவலையில்லை. *(குறுக்கீடு)* நீங்கள் வேறு பாயிண்டுக்கு, அடுத்த பாயிண்டுக்கு போங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பற்றி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, 10-36–க்கு உங்களுடைய பேச்சு முடியும். நான் இந்த மணியை அடித்துவிடுவேன். வருத்தப்படாதீர்கள். வேறு பாயிண்டுக்கு போங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் விளக்கம் சொல்லியிருக்கிறார். ஆதாரங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் பற்றி நன்மை பயக்கக்கூடிய திட்டம் என்பதை அவைக்கு வெளிப்படையாக வைக்க வேண்டுமன்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தினால் என்ன பயன் என்பதை இந்த அவைக்கும், நாட்டு மக்களுக்கும் வெளிப்படுத்த வேண்டும். *(குறுக்கீடு)* நான் பேசிவிடுகிறேன். நான் பேசிவிடுகிறேன். அதோடு நான் முடித்துவிடுகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 5 ஆண்டு கால ஆட்சியில் இந்த அரசு நிறைய சாதனைகளைச் செய்து கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உறுப்பினர் பேச்சை முடித்துவிடட்டும். (குறுக்கீடு) உறுப்பினர் பேச்சை முடித்துவிடட்டும்.

**திரு. ஜி.கே. மணி:** இந்த ஐந்து ஆண்டு காலத்தில் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறீர்கள். அந்தத் திட்டங்களிலே பலவற்றை நீங்கள் திரும்பப் பெற்றிருக்கிறீர்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 4¾ ஆண்டு ஆட்சிக் காலத்தில் பல்வேறு திட்டங்களை அறிவித்தீர்கள். அவற்றில் சிலவற்றை நிறைவேற்றினீர்கள். சிலவற்றை நீங்கள் திரும்பப்பெற்றீர்கள். இருந்தாலும்கூட இது இறுதிக் கூட்டம் என்கிற காரணத்தினாலே சில அறிவித்த திட்டங்களை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்த மதமாற்றத் தடைச் சட்டம், ஆடு, கோழி பலியிட தடைச் சட்டம், மூன்று ஆண்டு காலத்தில் இலவச வேட்டி, சேலை இரத்து...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆடு, கோழி பலி தடைச் சட்டம் என்பது இந்த அரசு கொண்டு வந்த சட்டம் அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்தது. இந்த அரசுதான் அதை நடைமுறைப்படுத்த முன்வந்தது. பின்பு திரும்பப் பெற்றது. நான் திரும்பப் பெற்றது என்று சொல்கிறேன். இந்த ஆட்சிக் காலத்திலே அறிவித்தவைகளைச் சொல்கிறேன். விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்த இலவச மின்சாரம் இரத்து, குடிசை வீடுகளுக்கு வழங்கப்பட்டு வந்த ஒரு விளக்கு மின்சாரம்.. (குறுக்கீடு) ஆட்சியிலே இரத்து என்று சொல்லிவிட்டுத்தான் சொல்கிறேன். அதைப்போல மின் கட்டணம் கிடுகிடு உயர்வு. ரேஷன் அரிசி வாங்குவதற்கு கூப்பன்.

* **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் இல்லாததைச் சொல்லி பதிவு செய்ய வேண்டுமென்று எண்ணினால் அதை நாங்கள் அனுமதிக்க முடியாது. குடிசைகளுக்கு இலவச மின்சாரத் திட்டமும், விவசாயிகளின் பம்ப் செட்டுகளுக்கு இலவச மின்சாரத் திட்டமும் எந்தக் காலத்திலும் எங்கள் அரசால் நிறுத்தப்படவில்லை.



அது தொடர்ந்து இலவசமாக வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டு வந்த இலவச பஸ் பாஸ் இரத்து செய்யப்பட்டது, மீண்டும் வழங்கப்பட்டது. அரசு ஊழியர் 1¾ இலட்சம் – 1,70,000 பேர்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துவிடட்டும். பேச்சை முடித்துவிடட்டும்.

**திரு. ஜி.கே. மணி:** அதைப்போல, எதிர்க்கட்சித் தலைவர்கள்மீது வழக்கு. அதிலும் குறிப்பாக வைகோ, நெடுமாறன், நக்கீரன் கோபால் ஆகியவர்கள்மீது பொடா சட்டம். 'இந்து', 'முரசொலி', 'தினகரன்' நாளிதழ்கள்மீது வழக்கு, 'இந்து', 'முரசொலி' ஆசிரியர்களுக்குச் சிறைத் தண்டனை.

கச்சத் தீவு மீட்பு என்ற பிரச்சினையில் கச்சத் தீவை மீட்பதாகச் சொன்னீர்கள். இப்போது குத்தகைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருப்பதாகச் சொல்கிறீர்கள். இது முன்னுக்குப்பின் முரண்பாடாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக நம்முடைய மாநில அரசு குத்தகை என்று சொல்கிறபோது, நம்முடைய உரிமையையே விட்டுக்கொடுத்ததாகப் பொருள். ஆகவே, இந்த நிலையை மாற்றிக்கொண்டு, உரிமையைப் பெறுவதற்கு நாம் முயற்சிக்க வேண்டுமென்று இங்கே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போல (குறுக்கீடு) கடிதம் எழுதியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதைப்போல, நெசவாளர் பிரச்சினை. இந்த ஆட்சிக் காலத்தில்தான் கஞ்சித் தொட்டி வைக்கப்பட்டது. (குறுக்கீடுகள்) அதைப்போலவே, 10 ஆயிரம் சாலைப் பணியாளர்கள் நீக்கம். மக்கள் நலப் பணியாளர்கள் நீக்கம். அதைப்போல, அங்கன்வாடிப் பணியாளர்கள், கூட்டுறவுப் பணியாளர்கள்...

முற்பகல் 10-35

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அர்த்தமற்ற அடிப்படை இல்லாத குற்றச்சாட்டுகளை திரு. மணி அவர்கள் தொடர்ந்து கூறி வருகிறார். அவருடைய நடவடிக்கைகளைக் கடந்த 5 ஆண்டு காலமாக இந்தச் சபையில் நான் கவனித்துக் கொண்டுதான் வருகிறேன். ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத் தொடரின்போதும் அவர் பேசுவதைப்

பார்க்கும்போது ஒரு உண்மை புலப்படுகிறது. அது என்னவென்றால் அவருக்கு வேறு பல வேலைகள் இருக்கின்றனவோ என்னவோ? ஆகவே, சட்டமன்றக் கூட்டத் தொடருக்கு வருவதற்கு முன்னால் அவருக்கு தன் உரையைத் தயார் செய்து கொள்ள நேரம் கிடைப்பதில்லை போலும். ஆகவே, 2001–ல் எந்த உரையைத் தயார் செய்து கொண்டு வந்தாரோ, கடந்த 5 ஆண்டுகாலமாக ஒவ்வொரு கூட்டத்தொடரின்போதும் அதையே பேசிக் கொண்டு இருக்கிறார். அதே குற்றச்சாட்டுகளைத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 5 ஆண்டு உரையை படித்து வருகிறேன். தயாரித்து வருகிறேன். நிறைய வைத்திருக்கிறேன். ஆளுநர் உரை 5 வருடத்திற்கு ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பேச்சை நிறைவு செய்யுங்கள். ஒரு மணித் துளியில் பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** நிதிநிலை அறிக்கை 5 வருடத்திற்கு– இராத்திரி 3 மணிக்குதான் படுத்தேன். 4¾–க்குத்தான் எழுந்தேன். படித்து விட்டுதான் வந்தேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை, அவ்வளவு நேரம் படித்து தயார் பண்ணி கொண்டு நேற்று இராத்திரி, நாளை பேச வேண்டுமென்று, நான் படிக்காமல், தயாரிக்காமல் வருவதேயில்லை. படித்து விட்டுதான் வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். இதோடு முடிந்தது. திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இதோடு பேச்சை நிறைவு செய்யுங்கள். இன்னும் 2 தலைவர்கள் பேச வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்களிடமிருந்து பறிக்கப்பட்ட சலுகைகள் எல்லாம் வழங்கப்படாமல் இருக்கின்றன. அவர்களுக்கு இதுவரையில் இருந்த சரண் விடுப்பு, அகவிலைப்படியை குறித்த நேரத்தில் வழங்குவது, அடிப்படை ஊதியத்துடன் 50 சதவிகிதத்தைச் சேர்த்து வழங்குவது போன்ற பல்வேறு கோரிக்கைகள் எல்லாம் இன்னும் வழங்கப்படாமல் இருக்கின்றன. அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு பேச்சை முடித்து விடுங்கள். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்..

**திரு. ஜி.கே. மணி:** தருமபுரி மாவட்டத்தினுடைய மிக முக்கியமான பிரச்சினை ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். இது நீண்டநாளைய நிலுவைத் திட்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல, இதையும் நீண்ட நாளாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். இதோடு பேச்சை முடித்து விடுங்கள். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிலுவையில் இருக்கிற திட்டம். முக்கியமான திட்டம். தொடர்ந்து அந்த மக்களைப் புறக்கணித்து வருகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றதை பட்ஜெட் உரையில் ஐ. கணேசன் பேசுவார்.

**திரு. ஜி.கே. மணி:** அதை நிறைவேற்ற வேண்டும். இல்லை, அந்த மாவட்டத்து மக்கள் என்ன பாவம் செய்தார்கள். தொடர்ந்து நீதிமன்றத்திலேகூட வழக்கு அரசுத் தரப்பிலே கூட ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதோடு பேச்சை முடியுங்கள். திரு. ஜி.கே. மணி அவர்களுடைய பேச்சு நிறைவுற்றது. திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** 2008–க்குள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதாக உயர் நீதிமன்றத்திலே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், இன்னும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றவே இல்லை. அதைப்போல, நான் இறுதியாகக் கேட்டுக்கொள்கிறேன். இந்த மோனோ இரயில் திட்டம், மிகப்பெரிய பாதிப்பான திட்டம். அந்தத் திட்டத்தை கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய பேச்சு நிறைவுற்றது. இனிமேல் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. இனிமேல் ஜி.கே. மணி பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, நான் பேச்சை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, உங்களுக்கு கொடுத்த நேரம் எல்லாம் தாண்டி விட்டது.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இந்தப் பேரவையில் உவந்து உரை நிகழ்த்தியதற்காக அவருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் தீர்மானம் ஆளுங்கட்சியின் தரப்பில் முன்மொழியப்பட்டு இருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** ஒரு நிமிஷம் கொடுங்கள், பேச்சை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதன்மீது காங்கிரஸ் கட்சியின் கருத்துகளை எடுத்து வைப்பது என் கடமையாக இருக்கிறது. ஆளுநருடைய உரை முதலமைச்சரின் தலைமையிலான அமைச்சரவையால்தான் இறுதி செய்யப்படுகிறது என்பது எல்லோரும் அறிந்த ஒன்றுதான். பொதுவாக ஆளுநர் உரையும், பட்ஜெட் உரையும் ஒன்றாக இருப்பதில்லை. அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் இடம்பெறும் ஆளுநருடைய உரை ஒரு மரபாக மட்டுமே அமைந்திருக்கிறது. இதில், வரும் நிதியாண்டில் இந்த அரசு மேற்கொள்ளக் கருதியுள்ள திட்டங்கள் குறித்த கொள்கைக் குறிப்புகள் மட்டுமே இடம் பெற்றிருக்கும். செயல்படுத்தப்படவிருக்கும் திட்டங்கள் குறித்த விரிவான விவரங்கள் பட்ஜெட் உரையில் இடம் பெறும்.

(பாட்டாளி மக்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

ஆனால், பட்ஜெட் போடும் அளவுக்கு ஆட்சிக் காலம் அமையாததால் வருங்காலத்தில் நிறைவேற்றப்படவிருக்கும் திட்டங்கள் குறித்து ஆளுநர் உரையில் குறிப்பிட முடியவில்லை. எனவே, கடந்த ஆண்டுகளில் கூறியவற்றையே திரும்பவும் கூறியிருக்கிறார். அத்துடன் பட்ஜெட்



உரையில் இடம் பெற வேண்டிய விவரங்களை எல்லாம் ஆளுநர் உரையில் கூறியிருக்கிறார். எனவே, இந்த உரை மரபுக்கு மாறாக அமைந்திருக்கிறது. ஆனால், ஆளும் கட்சியின் வாக்குறுதிகளையும், சாதனைகளையும் அடுக்கிக் கூறும் ஒரு தேர்தல் அறிக்கையாகத்தான் இந்த அறிக்கை அமைந்திருக்கிறது. அந்த வகையில் ஆளுநர் உரையையே இந்த அரசு முறைகேடாகவும், மரபுக்கு மாறாகவும் பயன்படுத்திக்கொண்டிருக்கிறது. மொத்தத்தில் இது ஒரு மரபு மீறிய செயலாகவும், இலக்கணம் மீறிய கவிதையாகவும் அமைந்திருப்பதாக நாங்கள் கருதுகிறோம்.

இந்தியாவிலேயே சட்டம் ஒழுங்கு உள்ளிட்ட அனைத்து அம்சங்களிலும் தமிழகம் முதலிடம் என்றும், சட்டப் பேரவை...

முற்பகல் 10-40

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை என்றால் அதில் மாநில அரசின் சாதனைகள்தான் இருக்கும். மாநில அரசின் திட்டங்கள்தான் இருக்கும். மாநில அரசு இன்னும் என்னென்ன செய்ய உத்தேசித்துள்ளது என்றுதான் இருக்கும். அவையெல்லாம் இந்த ஆளுநர் உரையில் இருக்கின்றன. இது மரபு மீறிய செயல் என்று கூறுகிறார் எஸ்.ஆர்.பி. அப்படியானால், அவருடைய இலக்கணப்படி ஆளுநர் உரையில் வேறு என்ன இருக்கவேண்டும்?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இந்த ஆண்டு நிறைவேற்றப்படவிருக்கின்ற திட்டங்கள் குறித்து ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருக்க வேண்டும். அதற்குப் பதிலாக கடந்த காலத்தில் என்ன நடைபெற்றது என்பதைப் பற்றித்தான் இருக்கிறதே தவிர, வேறு எதுவும் இந்த அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை. காவல் துறைக்காக இந்த அரசு செலவிட்டு வரும் தொகை அதிகமானது என்பதையும், அளித்து வரும் சலுகைகளும் தனிவகையானவையே என்பதையும் பல நேரங்களிலும் அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் கூடுதலாக நிவாரண நிதிகள் வழங்கப்படுகின்றன. மற்ற அரசு ஊழியர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை. அதேபோன்று...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின்போதும் இதே குற்றச்சாட்டுக்களை திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் சொன்னார். காவல் துறைக்கு அதிகப்படியான நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று

அரசே ஒப்புக்கொண்டுள்ளது என்று கூறுகிறார். எந்த ஒரு காலகட்டத்திலும் அரசு அப்படிக் கூறவில்லை, ஒப்புக்கொள்ளவும் இல்லை. அவர் அந்தக் குற்றச்சாட்டைக் கூறினார். அதைத் திரும்பக் கூறிக்கொண்டிருக்கிறார். அவ்வளவுதான்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதேபோன்று, காவல் துறைப் பணிக்கு ஆள் எடுப்பதற்கு வேலை நியமனத் தடைச் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. 10,000-க்கும் மேல் அவர்களுக்குப் புதிய குடியிருப்புகள் கட்டித் தரப்படுகின்றன. இந்த ஆண்டு மட்டும் 1,500 பேருக்குமேல் முதலமைச்சர் விருது வழங்கப்படுகிறது. ஏற்கெனவே வீரப்பனை வீழ்த்தியதற்காக ஏராளமான பேருக்கு தாராள உதவிகளும், பதவி உயர்வுகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், 1,76,000 அரசுப் பணிகள் நிரப்பப்படாமல் இருந்து வருவது ஏற்கத்தக்கதாக இல்லை. புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியாவிட்டாலும், இருக்கின்ற காலி இடங்களுக்குப் புதியவர்களை நியமிப்பதற்கு இந்த அரசு கவனம் செலுத்தியிருக்கவேண்டும்.

பாவப்பட்ட 10,000 சாலைப் பணியாளர்களையாவது மீண்டும் வேலையில் அமர்த்தியிருக்க வேண்டும். அதேபோன்று கூட்டுறவுத் துறையில் வேலையிலிருந்து தூக்கி எறியப்பட்டுள்ள ஊழியர்களுக்காவது மறுவாழ்வு அளித்திருக்க வேண்டும். அதற்கு மாறாக கூட்டுறவு இயக்கத்தையே குழி தோண்டிப் புதைக்கும் படுபாதகச் செயல்களைத்தான் இந்த அரசு செய்து வருகிறது. ஐந்து ஆண்டுகளாக ஆட்சிப் பொறுப்பில் இருந்தும் கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தலே நடத்த முடியாத அவல நிலைதான் தொடர்கிறது. நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளைக் காரணம் காட்டி தனது பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் நிலையில்தான் இந்த அரசு இருந்து வருகிறது. தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் இருக்க வேண்டிய இடத்தில் தாங்கள் விரும்பும் அதிகாரிகளை நியமித்து தவறான நிர்வாகம்...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையிலிருந்து இதுவரையில் எந்தப் பணியாளரும் பணியிலிருந்து தூக்கி எறியப்படவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் தவறான தகவலை இங்கே பதிய வைக்க விரும்புகிறார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பணியிலிருந்து நீக்கப்பட்டவர்களை மீண்டும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை.



**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள், யாரும் பணியிலிருந்து நீக்கப்படவில்லை என்று நான் சொன்னதற்குப் பிறகும், பணியிலிருந்து நீக்கப்பட்டவர்களைப் பணியிலே சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்கின்ற தவறான தகவலை இங்கே தருகிறார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** உள்ளாட்சி அமைப்புகளைப் போல, கூட்டுறவு அமைப்புக்களுக்கும் கட்டாயமாகத் தேர்தல் நடைபெறுவதற்குத் தேவையான சட்டத் திருத்தம் கொண்டு வரப்படவேண்டும். ஆனால், இந்த அரசுக்கு அதில் அக்கறை இருப்பதாகவே தெரியவில்லை. 50,000-க்கும் மேல் ஆசிரியப் பணியிடங்கள் நிரப்பப்பட்டிருப்பதாக ஆளுநர் உரையில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த நியமனங்கள் எல்லாம் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் உட்பட்ட முறையில்தான் செய்யப்பட்டிருக்கின்றனவா என்பதற்கு இந்த அரசு உரிய விளக்கம் அளிக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 5 ஆண்டுகாலமாக தமிழகத்திலே ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக மிக நியாயமான முறையிலே எந்த ஒரு அரசியல் குறுக்கீடும் இல்லாமல்-நியாயமான முறையிலே ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். 62,608 ஆசிரியர்கள் இந்த ஐந்து ஆண்டுகாலத்திலே நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தொகுப்பு ஊதியம் என்ற அடிப்படையில் மிகவும் குறைவான ஊதியத்தைப் புதியதாக நியமனம் பெற்றவர்களுக்கு அரசு வழங்கி வருகிறது. ஒரே தகுதி உடையவர்களாகவும், ஒரே பணியை ஆற்றக்கூடியவர்களாகவும் இருப்பவர்களுக்கிடையே இரு வேறு வகையான ஊதியங்களை இந்த அரசு வழங்கி வருகிறது. சம வேலைக்கு சம ஊதியம் என்ற கோட்பாட்டையும், நியாய ஊதியம், வாழ்வூதியம் என்ற கோட்பாடுகளை ஆழ குழி தோண்டிப் புதைத்துவிட்டு சட்டத்தின் ஆட்சியைப் பற்றி உயர்வாகப் பேசிக்கொண்டிருக்கிறது. உயர் நீதிமன்றமே தீர்ப்பு அளித்துவிட்ட பிறகும், சாலைப் பணியாளர்களுக்கு நியாயம் வழங்குவதற்குப் பதிலாக, உச்ச நீதிமன்றத்திற்கு ஓடிச் செல்கிறது. ஏழைகளுக்கு உச்ச நீதிமன்றம் இன்னும் எட்டாக் கனியாகவே இருந்து வருகிறது என்ற சூழ்நிலையை இந்த அரசு பயன்படுத்தி வருகிறது.

அல்லல்பட்டு ஆற்றாது ஏழை அழுத கண்ணீர் எத்தகைய சக்தி வாய்ந்தது என்பதை இந்த அரசு எண்ணிப் பார்க்கவில்லை. ஏழையின் சிரிப்பிலேதான் இறைவனைக் காணவேண்டும் என்று எடுத்துக்கூறிய அண்ணா அவர்களையும் இந்த அரசு எண்ணிப் பார்க்கவில்லை. இருந்தாலும், அந்த அண்ணாவின் பெயரைத்தான் இந்த அரசு இறுகப் பற்றிக் கொண்டிருக்கிறது.

முற்பகல் 10-45

இரண்டு ஆண்டுகளில் 480 நாட்கள் ஒருவர் பணியாற்றி இருந்தாலே, அவருக்கு நிரந்தர ஊழியர் என்ற நிலையினை வழங்கவேண்டும் என்ற சட்டத்தை எம்.ஜி.ஆர். அரசு கொண்டு வந்தது. அதற்கு முன்னரே தொழிற்சாலைகள் சட்டப்படி, ஒரு வருடத்தில் 240 நாட்கள் ஒருவர் பணியாற்றியிருந்தாலே, அவரைப் பணி நிரந்தரம் செய்யவேண்டுமென்று இருக்கிறது. அதேபோன்று ஒப்பந்தத் தொழிலாளர்கள் ஒழுங்குமுறைச் சட்டமும், குறைந்தபட்சக் கூலிச் சட்டமும் இருக்கின்றன. ஆனால், அவையெல்லாம் ஏட்டுச் சுரைக்காயாகவும், தொழிலாளர்களுக்கு எட்டாக் கனியாகவும் மட்டுமே இருந்து வருகின்றன. கந்துவட்டி தடைச் சட்டம் கண்மூடித் தூங்குவதைப் போலவே, இந்தச் சட்டங்கள் அனைத்தும் மீளாத நித்திரையில் ஆழ்ந்து கிடக்கின்றன. இவற்றை அமல்படுத்தவேண்டிய தொழிலாளர் நலத் துறையும், காவல் துறையும் வேறு வகையில் செயல்களைத் தொடர்ந்து வருகின்றன.

பல்கலைக்கழகங்களில்கூட தற்காலிக அடிப்படையில் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு கடுமையான சுரண்டலுக்குப் பட்டதாரி இளைஞர்கள் ஆளாகி வருகிறார்கள். திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில்கூட இந்த நிலைதான் வெளிப்படையாகவே இருந்து வருகிறது. இவ்வாறு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் தொழிலாளர்கள் போன்ற அனைத்துப் பிரிவினரின் உரிமைகளும் காற்றில் பறந்து கொண்டிருக்கின்றன. 'சோகச் சுழலிலே ஏழைச் சருகுகள் சுற்றுதடா, கண்ணீர் கொட்டுதடா' என்னும் சோக கீதம் இசைக்கும் சூழ்நிலைதான் பெருகி வருகிறது.

தொழிலாளர் நலத் துறையின்மீது இந்த அரசு கொண்டிருக்கும் அணுகுமுறை அதிர்ச்சி அளிப்பதாக இருக்கிறது. அந்தத் துறையின் அமைச்சர்களாகப் பொறுப்பேற்றவர்கள் அடிக்கடி மாற்றப்பட்டதும், பந்தாடப்பட்டதும் ஏன் என்பதற்கான விளக்கத்தை இந்த அரசு எப்போதுமே அளித்ததில்லை. பணியிலிருந்து ஓய்வு பெற்றுச்



சென்றவர்களைக்கூட ஒப்பந்த அடிப்படையில் உயர்ந்த பதவிகளிலே நியமிக்கிறார்கள்.

அதேபோன்று, இந்த அரசு வேண்டியவர்கள் என்று கருதப்படுபவர்களுக்கு வயது வரம்பு இல்லாமலே புதிய பதவிகளை வழங்குகிறார்கள். அதற்காகச் சட்டத்தையே வளைக்கிறார்கள். ஓய்வு பெற்றுச் சென்றவர்களை உயர் பதவிகளில் தேடிப் பிடித்து அமர்த்துகிறார்கள். அதேபோன்று நீதி விசாரணைக் கமிஷனுக்கென்றே நிலைய வித்வான்களை வைத்திருக்கிறார்கள். இருந்தாலும் அடித்தளத்தில் இருக்கும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் போன்ற பகுதியினரை மட்டும் தங்களுடைய வர்க்க எதிரிகளாகக் கருதி வஞ்சம் தீர்க்கிறார்கள்.

வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் போன்றவற்றை எதிர்த்துப் போராடுவதற்குப் பதிலாக, அதற்கு இரையாகி இருப்பவர்களை அடக்கி ஒடுக்குவதற்காகவே அரசு இயந்திரம் முடுக்கி விடப்படுகிறது. புதிய அவசரச் சட்டங்களும் பிறப்பிக்கப்படுகின்றன. வழக்குகள், சிறைக் கொடுமை, ஊதிய இழப்பு, வன்கொடுமை போன்ற எல்லாவிதமான துன்பங்களுக்கும் அந்தப் பிரிவினரே இரையாகி வருகிறார்கள். இந்தப் பின்னணியில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி., ஏதாவது புள்ளி விவரத்தைச் சொல்லிச் சொல்லுங்கள். திரைப்பட வசனம் மாதிரி அப்படியே சொல்லிக்கொண்டே போகிறீர்களே?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, அரசு ஊழியர், ஆசிரியரைப் பற்றித் தெரியாதா? டெஸ்மா வரவில்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** டெஸ்மாவைப் பற்றிச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** டெஸ்மாவைத்தான் சொல்கிறேன். வேறு எதையும் சொல்லவில்லை. சொல்லாமலேயே அது புரியும். அதற்காகத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வு பெற்றுச் சென்றவர்களையெல்லாம் அழைத்து

இந்த அரசு உயர் பதவிகளைத் தந்து வருகிறது என்றார் எஸ்.ஆர்.பி. அப்படி யாரை அழைத்து உயர் பதவி கொடுத்தோம் என்று தெரியவில்லை. ஆனால், உடனடியாக நினைவுக்கு வருவது, இந்த காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு ஆட்சிக்கு வந்தவுடனேயே, 18 ஆண்டுகளுக்கு முன்னால் ஓய்வு பெற்றுச் சென்ற I.B. Director திரு. எம்.கே. நாராயணன் அவர்களை மீண்டும் அழைத்து, இன்றைக்கு Principal Security Advisor to the Prime Minister என்று ஒரு மிக உயர்ந்த பதவியைக் கொடுத்திருக்கிறார்களே, அதை திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் மறந்துவிட்டாரா? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவர் வெறும் Advisor–தான். அதற்குமேலே அவர் இல்லை. (குறுக்கீடுகள்) இந்தப் பின்னணியில் புதிய புதிய சிறைச்சாலைகளை...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எம்.கே. நாராயணன் அவர்கள் வெறும் Advisor அல்ல. இன்றைக்கு I.B., C.B.I., R.A.W. போன்ற அனைத்து சக்திவாய்ந்த அமைப்புகளும் அவருடைய நேரடிப் பார்வையின்கீழ்தான் இயங்குகின்றன என்பது திரு. எஸ்.ஆர்.பி. போன்றவர்களுக்குத் தெரியாதா?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவருடைய நேரடிப் பார்வையிலே இயங்குவதாக நான் கருதவில்லை. காரணம், அவற்றையெல்லாம் பார்த்துக்கொள்வதற்குப் பிரதமர் இருக்கிறார், சம்பந்தப்பட்ட இலாகா அமைச்சர்கள் இருக்கிறார்கள். அவர்களை மீறி யாரும் தனிப்பட்ட எந்த நபராலும் எதையும் செய்ய முடியாது.

உலக வங்கியிடமும், ஆசிய வளர்ச்சி வங்கியிடமும், மற்ற நிதி நிறுவனங்களிடமிருந்தும் பல்லாயிரக்கணக்கான கடன்களைப் பெற்று திட்டப் பணிகளுக்குச் செலவிடுவதாக இந்த அரசு தெரிவித்திருக்கிறது. அதேநேரத்தில் மக்களுடைய வறுமையைப் போக்கவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், மூடிய தொழிற்சாலைகளைத் திறக்கவும் எந்தவிதமான முயற்சியிலும் இந்த அரசு இறங்கவில்லை.

திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் மாதா கோயில்களுக்கும், மசூதிகளுக்கும் விரிவுபடுத்தப்படுகிறது. ஏற்கெனவே உள்ள இலவச மதிய உணவுத் திட்டம், இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம், இலவச சைக்கிள் வழங்கும் திட்டம், இலவச பாடப் புத்தகங்கள் மற்றும் சீருடை வழங்கும் திட்டம் ஆகியவற்றுடன் இப்போது அன்னதானத் திட்டமும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.



கிராமப்புறங்களில் வேலைவாய்ப்புகளை இழந்துவிட்ட மக்கள் நகர்ப்புறங்களை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். நகர்ப்புறங்களில் கடுமையான நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. திருப்பூர் போன்ற தொழில் நகரங்களில் மக்கள் தொகை அளவுக்கு அதிகமாக உயர்ந்துவிட்டதால் அடிப்படை வசதிகள்கூட செய்து கொடுக்கமுடியாமல் நகராட்சி நிர்வாகம் திணறிக் கொண்டிருக்கிறது. சென்னை, மதுரை, கோவை, திருச்சி போன்ற மாநகரங்களைப் பற்றி கேட்கவேண்டியதில்லை. குடிசைப் பகுதிகளும், ஆக்கிரமிப்புகளும், குற்றச்செயல்களும் இந்தப் பகுதிகளில் பெருகி வருகின்றன. உலக வங்கி உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களிடமிருந்தும் கடன்களைப் பெற்று அரசு செலவிடுகிறது. வருவாய் இல்லாமலும், வேலைவாய்ப்பு இல்லாமலும் துன்பப்படும் மக்களின் தொகை வேகமாகப் பெருகிவிட்டது.

*முற்பகல் 10–50*

வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் மக்களுக்கு வழங்கப்படும் இலவச வேட்டி–சேலைகள் வழங்கும் அளவு 3.28 கோடியை எட்டிவிட்டது. நியாய விலைக் கடைகளுக்கு வழங்கப்படும் அரிசிக்கு அரசு வழங்கும் மானியமும் ரூ. 1,500 கோடியை எட்டிவிட்டது. உழவர்களுக்கு ஏதேனும் செய்யவேண்டும் என்ற கட்டாயத்தில் சில இலவசங்கள் கூடுதலாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு இலவசங்களை விரிவுபடுத்துவதன் மூலமாகவும், போலீஸ் இயந்திரத்தை மேலும் வலுப்படுத்துவதன் மூலமாகவும், புதிய சிறைச்சாலைகள் கட்டுவதன் மூலமாகவும், செலவில்லாத வேறுசில மலிவானத் திட்டங்களை அறிவிப்பதன் மூலமாகவும் மக்களை எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்துவிடலாம் என்று இந்த அரசு கருதுகிறது. இந்த நிலையினைத்தான் ஆளுநர் உரை அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது.

*"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்*
*வாய்நாடி வாய்ப்பச் செயல்"*

என்றார் வள்ளுவப் பெருந்தகை. அந்த அடிப்படையில் நம் சமூகத்தைப் பீடித்துள்ள நோய்களையும், அவற்றுக்கான மூலகாரணங்களையும் இந்த ஆளுநர் உரையில் பட்டியலிட்டுக் காட்டியிருக்கவேண்டும். அதன்பின்னரே அவற்றைக் குறைப்பதற்கான விதிமுறைகளையும் மருந்துகளையும் அறிவித்திருக்க வேண்டும்.

மக்களை வாட்டும் வறுமையைத் தணிப்பதற்கு 360 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்திற்கு ஏற்பாடு செய்திருப்பதாக அறிவித்திருக்கிறது. ஆனால், 6 கோடி மக்களில் 3 கோடிக்கு மேற்பட்டவர்கள்

வறுமைக்கோட்டிற்குக் கீழே வந்துவிட்ட பிறகு அவர்களுக்கு அன்னதானத் திட்டம் வறுமையைப் போக்குவதற்கு ஒரு தீர்வாக முடியுமா என்பதை இந்த அரசு எண்ணிப்பார்க்கவில்லை. இது யானைப் பசிக்கு சோளப் பொரியைப் போட்ட கதையாக இருக்கிறது.

இதேபோன்று நியாய விலைக் கடைகள் மூலமாக குறைந்த விலையில் அரிசி கொடுப்பதற்காக வழங்கப்படும் மானியத்தை ரூ.300 கோடி அதிகரித்து மொத்தம் ரூபாய் 1,500 கோடியை ஆண்டுதோறும் செலவிடுவதாகக் கூறியிருக்கிறீர்கள். ஆனால், அந்தக் குறைந்த விலை அரிசியை விலை கொடுத்து வாங்கும் அளவிற்காகவாவது வருவாய் கிடைப்பதற்கும் வழிவகை செய்திருக்கிறார்களா என்பதைத் தெரிவிக்கவில்லை. அப்படி வருவாயை ஈட்டும் நிலையில் இருந்திருந்தால் இலவச அரிசிக்காகவும், ஒரு லிட்டர் மண்ணெண்ணெய்க்காகவும் உயிரை பணயம் வைத்து மக்கள் முண்டியடித்து ஓடுவார்களா? அதில் மிதிபட்டு, துவைபட்டு பல விலைமதிப்பற்ற, உயிர்களை பலி கொடுப்பார்களா? கைப் புண்ணுக்கு கண்ணாடியைத் தேடுவதைப்போல, சாவுக்குக் காரணம் அப்பட்டமாகத் தெரியும்போது, அதனைக் கண்டறிவதற்காக என்று ஒரு விசாரணைக் கமிஷன் இந்த அரசு அமைக்குமா? வேலையில்லாத மாமியார் மருமகனைத் தொட்டிலில் இட்டு ஆட்டிய கதையைப்போல இது தோன்றவில்லையா? முதலில் வேலையில்லாமல் திண்டாடிய நிலைதான் பெருகி வந்தது. ஆனால், இப்போது வேலையில் இருப்பவர்களுக்கே உரிய ஊதியம் வழங்கப்படாத நிலையும் உருவாக்கப்பட்டிருக்கிறது.

மக்களின் வரிப் பணத்தைக் கோடிக்கணக்கில் வாரிக் கொடுத்தும், தடையில்லா மின்சாரம், தண்ணீர், சாலை வசதி மற்றும் போக்குவரத்து வசதி போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிக் கொடுத்தும், அயல்நாட்டு முதலீட்டாளர்களையும், பன்னாட்டு நிறுவனங்களையும் கட்டியம்கூறி இந்த அரசு வரவேற்கிறது. ஆனால், அந்தத் தொழிற்சாலைகள்மூலம் எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதைப் பற்றி இந்த அரசு எண்ணிப் பார்க்கவில்லை.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துவிட்டு பல ஆண்டுகளாகக் காத்திருப்பவர்களுடைய பட்டியலே 50 இலட்சத்திற்கும் மேல் சென்றுவிட்டது. ஆனால், நூற்றுக்கணக்கில் மட்டுமே வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய நிறுவனங்களுக்குச் செலவிடப்படும் தொகை வியப்பூட்டுவதாக அமைந்திருக்கிறது. எந்த வகையில் பார்த்தாலும் வேலையின்மை என்ற நோயைத் தீர்ப்பதற்கு ஏற்ற மருந்தாக இது அமைய முடியாது.



அநியாய வட்டி, அபராத வட்டி, கூட்டுவட்டி, மீட்டர் வட்டி, கந்து வட்டி போன்ற கொடுமைகளை ஒழிப்பதற்காக ஒரு சட்டத்தை இந்த அரசு கொண்டு வந்தது. 9 சதவிகிதத்திற்கு மேல் வட்டி வசூலிக்கக் கூடாது என்று பல ஆண்டுகளுக்கு முன்பே ஆணை பிறப்பித்தது. அதனை அமல்படுத்தும் அதிகாரத்தை வருவாய்த் துறையிடமும், காவல் துறையிடமும் ஒப்படைத்தது. ஆனால், நகரத்தில் உள்ள லேவாதேவிக்காரர்கள் எப்போதும் போலவே அநியாய வட்டியைத்தான் வசூலித்து வருகிறார்கள். 14 சதவிகிதத்திற்கு மேல்தான் வட்டி வசூலிக்கப்படுகிறது. உண்மையை மறைப்பதற்கு இரண்டுவிதமான கணக்குகள் வைத்துக்கொள்ளப்படுகின்றன. இதற்கு அதிகார வர்க்கமே துணையாக இருந்து வருகிறது.

வேளாண்மைக்காக நபார்டு வங்கியிடம் குறைந்த வட்டிக்கு வாங்கப்படும் பணம் விவசாயிகளுக்கு வழங்கப்படும்போது வட்டி பல மடங்கு அதிகரித்துவிடுகிறது. அதைத் திருப்பிச் செலுத்தமுடியாத அவல நிலைக்கு விவசாயிகள் தள்ளப்படுகிறார்கள். கூட்டுறவுச் சங்கங்களும் நொடித்துப் போகின்றன. அந்த நிலையில்தான் கூட்டுறவுக் கடன்களுக்கான வட்டியை செலுத்தும் பொறுப்பை அரசாங்கம் ஏற்கிறது. இறந்து போனவர்களுக்கு நிவாரணம் வழங்கினால் அதைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் எழுந்துவரப் போவதில்லை. ஆக, இறந்துவிட்ட குடும்பங்களுக்குத்தான் அந்த நிவாரணம் போய்ச் சேருகிறது. அதேபோன்று அதிக வட்டி வசூலிக்கப்படுவதால் நொடிந்து, மடிந்து போகும் விவசாயிகளுக்கோ, கூட்டுறவுச் சங்கங்களுக்கோ எந்தவித நன்மையும் ஏற்படப்போவதில்லை. அரசு கொடுக்கும் பணம் விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கப்போவதில்லை. எனவே, அவர்களுக்குக் கிடைக்கும் வகையில் கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கு இந்த அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாங்களும் உறுதுணையாக இருப்போம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசாங்கம் 31-3-2004 தேதி நிலுவைநின்று மறுசீரமைப்பு கடனாக மாற்றத் தகுந்த பயிர் கடன்கள் மீதான வட்டியை முழுவதுமாக 31-3-2004 வரை சேர்ந்துள்ள வட்டி தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்திருக்கிறது. அறிவித்த தேதி 21-9-2005. ஓராண்டுக் காலம், ஒன்றரை ஆண்டுக்காலம் கழித்து அறிவித்திருக்கிறது. எனவே, 31-3-2004-க்கும் அது அறிவிக்கப்பட்ட தேதிக்கும் முன்னரே முழுமையாகக் கடனைத் திருப்பிச் செலுத்தியவர்களுக்கு சலுகையைப் பெறுவதில் குழப்பம் இருக்கிறது. இதைத் தெளிவுபடுத்த வேண்டும். அச்சலுகை அனைவருக்கும் கிடைக்கச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கோவை டாடாபாட் ஹட்கோ காலனி வீட்டுவசதி வாரியம் மின்வாரிய ஊழியர்களுக்காக 1977-ல் கட்டிக்கொடுத்தது. அங்கே 144 வீடுகள் 350 சதுர அடி பரப்பில் இரண்டேகால் சென்ட் இடத்தில் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த இடத்திற்கு அன்றையதினம் செலுத்தப்பட வேண்டுமென்று கேட்ட தொகை ரூபாய் மூவாயிரம். அந்தத் தொகை 1974-லே கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. 1984-ல் நீதிமன்றம் ஒரு உத்தரவு பிறப்பிக்கிறது. அந்த இடத்திற்கு ரூபாய் 3,000 என்பது குறைவு, 5,200 ரூபாய் என்று நிர்ணயித்திருக்க வேண்டும். எனவே, 2,200 ரூபாய் இன்னும் பாக்கி இருக்கிறது என்று தீர்ப்பிலே சொல்லப்பட்டது. அந்த நேரத்திலே வீட்டு வசதி வாரியம் எந்த demand notice-ம் அவர்களுக்கு அனுப்பவில்லை. அதற்குப் பதிலாக 1989-ல் ஒரு demand notice அனுப்புகிறது. எல்லோரும் இன்னும் 17,500 ரூபாய் கட்ட வேண்டுமென்று demand notice அனுப்புகிறது. அந்த demand notice நியாயம் இல்லை என்று அவர்கள் குரல் கொடுக்கிறார்கள். பதிலே இல்லை. இப்போது திடீரென்று அவர்கள் எல்லாம் ஒன்றே கால் இலட்சம் ரூபாய் கட்ட வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. சாதாரணமான தொழிலாளர்கள்தான் அந்த வீடுகளிலே குடியிருக்கிறார்கள். அவர்கள் ஒன்றேகால் இலட்சம் ரூபாய் கட்ட வேண்டுமென்றால் அது முடியக் கூடியதா என்று பார்க்க வேண்டும். பலரும் ஓய்வு பெற்றுவிட்டார்கள். அவர்களால் இயலாத நிலை இருக்கிறது. எனவே, நியாயமான தொகையை நிர்ணயித்து, அரசாங்கம் அதனைப் பரிவுடன் பரிசீலித்து அவர்களுக்கெல்லாம் கிரயப் பத்திரம் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கோவை கணபதி பகுதியிலே வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் பல இருக்கின்றன. 15 முதல் 30 ஆண்டுகளாக அங்கே குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் கிரயப் பத்திரம் வழங்கப்படவில்லை. அது குறித்து ஏற்கெனவே இந்த அவையிலே பேசியிருக்கிறேன். அந்த இடங்களைப் பொறுத்தவரையில், அங்கே வழக்கு இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். வழக்கு இருந்தாலும்கூட சில பேருக்கு ஏற்கெனவே அங்கே கிரயப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. பெயர்களைக்கூட நான் கொடுத்திருக்கிறேன். அந்தச் சான்றுகளைக்கூட நான் கொடுத்திருக்கிறேன். 1994-லே ஒருவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 2002-லே கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பலருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்றாலும்கூட மற்றவர்களுக்குக்



கொடுக்கவில்லை. வேண்டுமானால் அதனுடைய சான்றுகளை அமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்துவிடுகிறேன். அவர்களுக்கு எல்லாம் கிரயப் பத்திரம் வழங்குவதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைப் பிரச்சினையைப் பொறுத்தவரை அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அந்த ஆணை ஏற்கெனவே இருக்கின்ற நிலைமைகளைத்தான் தெளிவுபடுத்துகிறதே தவிர, புதிதாக எந்தவிதமான சலுகையும் அதிலே அறிவிக்கப்படவில்லை. அவர்களுக்கு அடிப்படை வசதிகளே கிடையாது. குடிநீர் வசதி கிடையாது. சாலை வசதி கிடையாது. விளக்கு வசதி கிடையாது. சாக்கடை வசதி கிடையாது என்கிற நிலைமை எல்லாம் இருக்கிறது. அங்கே தெருக்களிலே நடக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அரசாங்கமும் நிதி ஒதுக்குவதில்லை, நகராட்சிகளும், உள்ளாட்சிகளும் நிதி ஒதுக்குவதில்லை, சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் நிதி ஒதுக்க முடியாத நிலை இருக்கிறது. எனவே, அவர்களுக்கு உரிய பரிகாரம் கிடைக்கின்ற வகையில் அங்கே மற்ற பணிகள் நடைபெறுவதற்கு ஏதுவாக அரசாங்கம் தெளிவாக ஒரு ஆணை பிறப்பிக்க வேண்டும். அந்தப் பகுதிகளிலே அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சென்ற முறை துடியலூர் கிராமம், சுப்பிரமணியம்பாளையத்தைப் பற்றி நான் சொன்னேன். இந்தப் பிரச்சினை பல காலமாக இருப்பது. ரெக்கார்டுகளிலேகூட 200 ஆண்டுகளுக்கு முன்பே அங்கே ஊர் குடியிருப்புகள் இருந்திருக்கின்றன. எல்லாவிதமான சான்றுகளும் இருக்கின்றன. வரைபடத்தை நான் இங்கே காட்டியிருக்கிறேன். வரைபடத்தை அமைச்சரிடத்திலே நான் கொடுத்தேன். அங்கே அந்த இடத்தை வண்டிப்பாதை என்றும் மந்தை என்றும் தவறாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது வண்டிப்பாதையும் அல்ல, மந்தையும் அல்ல. அது ஏற்கெனவே பல காலமாக, 200 ஆண்டுகளுக்கு மேலாக அங்கே மக்கள் குடியிருந்து வருகிறார்கள். அந்தப் பகுதியிலே இன்றையதினம் அது வண்டிப்பாதை என்று காட்டப்பட்ட காரணத்தினாலே பதிவாளர் அலுவலகத்திலே எதையுமே பதிவு செய்ய முடியவில்லை. கிரயம் செய்ய முடியவில்லை, ஒப்படைவு செய்ய முடியவில்லை, எதையுமே செய்ய முடியாத நிலை இருக்கிறது. பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய மறுக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் கிடைக்கின்ற வகையில் அந்த துடியலூர் கிராமத்தில் இருக்கிற

சுப்பிரமணியம்பாளையம் என்கிற ஊர் முழுவதும் பழைய ஊர், எனவே அது. நத்தம்தான் என்று அரசு அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல. விவசாயிகளைப் பொறுத்தவரையில் பட்டா பாஸ் புக் இருந்தாலொழிய கிரயம் செய்யக் கூடாது என்று ஒரு சட்டம் வந்தது. அதில் தவறு இல்லை. வந்து நீண்ட நாள் ஆகிவிட்டது. 1989 ஆம் ஆண்டுக்குப் பிறகு பதிவு செய்யக் கூடாது என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அந்த ஆணை பிறப்பித்த பிறகும், இன்று பலருக்கு பட்டா பாஸ் புக் கிடைப்பதில்லை. பட்டா பாஸ் புக் இல்லை, அதுதான் உண்மை. ஆனால், சில இடங்களில் பட்டா பாஸ் புக் இருப்பதாகச் சொல்லி சிலருக்கு மட்டும் தருகிறார்கள். அதிலே முறைகேடுகள் நடைபெறுவதைக் கண்டுபிடித்து மாவட்ட நிருவாகம் இனி பட்டா பாஸ் புக் வழங்கக் கூடாது என்று சொல்லிவிட்டது. நான் அதில் குறை கண்டுபிடிக்கவில்லை. ஆனால், அதன் விளைவு என்ன என்று சொன்னால் விவசாயிகளோ அல்லது மற்றவர்களோ இன்றையதினம் அதைக் கிரயம் செய்ய முடிவதில்லை. அதை மீறி எந்தப் பதிவும் செய்ய முடியாத ஒரு நிலை இருக்கிறது. எனவே, நீங்கள் இங்கிருந்து அரசாணை பிறப்பித்தால்தான் முடியும். ஏனென்றால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், வருவாய்த் துறை அலுவலர்கள் கொடுத்தால் போதும் என்று சொல்லுகிறார்கள், சிட்டா நகல் கொடுத்தால் போதும் என்று சொல்லுகிறார்கள். சிட்டா நகல் கொடுத்தாலும் நாங்கள் செய்யமாட்டோம் என்று பதிவாளர்கள் சொல்லுகிறார்கள். காரணம், எங்களுக்கு ஆணை அப்படி இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். எனவே, அரசுதான் ஆணை பிறப்பிக்க வேண்டும். ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மழை நீர் சேகரிப்பு. இது ஒரு நல்ல திட்டம். அதை முறைப்படுத்த வேண்டும். பல கட்டடங்களில் அதைச் செய்யாமலே விட்டுவிட்டார்கள். மழைநீர் சேகரிப்புத் திட்டத்தைச் செயல்படுத்தியிருக்கிறீர்களா என்று கேட்டால், அரசு குடியிருப்புகளிலேகூட இல்லை. அந்த நிலைமைகளையெல்லாம் மாற்றி முறையாக மழைநீர் சேகரிப்பு செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

முற்பகல் 11-00

தடுப்பணைகள் மிக முக்கியம். தண்ணீர் எல்லாம் ஓடிப் போய்விட்டது. பல்வேறு பகுதிகளில் தண்ணீர் வீணாகப் போய்விட்டது. எனவே, தடுப்பணைகள் கட்டினால் நிலத்தடி நீர் மட்டம் உயரும். தடுப்பணைகள்



கட்டவேண்டும். நான் ஏற்கெனவே இங்கே பேசியிருக்கிறேன். தொண்டாமுத்தூர் பகுதியிலே, ஆனைமடுவு என்ற இடத்திலே தடுப்பணை கட்டினால், அங்கே சுற்றுவட்டாரம் முழுவதும் நிலத்தடி நீர்மட்டம் உயரும். அங்கே ஒரு ஏக்கரா காடு இருக்கிறது. காடு என்றால் Reserve Forest அல்ல, நம்முடைய தமிழ்நாடு அரசுக்கு உட்பட்டுத்தான் இருக்கிறது. கோப்பு அங்கே போய் நிற்கிறது. எனவே, அதற்கு அனுமதி கொடுத்து, கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதிலே மதிப்பீடுகளெல்லாம் முடிந்துபோய்விட்டது. நீங்கள் ஆணை பிறப்பித்தால் உடனடியாக நடக்கும். அதேபோல, பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியத்திலே, நஞ்சுண்டாபுரம் என்ற ஊரிலே தடுப்பணை கட்டுவதற்கு மதிப்பீடுகள் முடிந்து, எல்லாம் தயாரிக்கப்பட்டு, பணி தொடங்கப்போவதாகச் சொன்னார்கள். ஆனால், இன்றுவரை தொடங்கவில்லை. உடனடியாகத் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளைப் பொறுத்தவரையில், தென்னை மர விவசாயிகள் மிகவும் சிரமத்திற்கு ஆளான காரணத்தாலே. கொப்பரையை கொள்முதல் செய்யலாம் என்று மத்திய அரசு சொல்லி, 35 ரூபாய் 70 காசு கிலோவிற்குக் கொடுக்கலாம் என்று அறிவித்தார்கள். அதே கொப்பரை, ball–ஆக இருந்தால், பந்தாக இருந்தால், 38 ரூபாய் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். ஆனால், நம்முடைய தமிழகத்திலே, நாங்கள் செய்யப்போகிறோம் என்று நீங்கள் அறிவித்தீர்களே தவிர, கொள்முதலே நடைபெறவில்லை. மொத்தம் ஒரு 600 டன் நடந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை 200 டன்னிற்கு கொப்பரை கொள்முதல் ஆகியிருக்கிறது. 2 கோடி ரூபாய் அளவிற்கு கொப்பரை கொள்முதல் நடைபெற்றிருக்கிறது. கொப்பரைக் கொள்முதலைப் பொறுத்தவரையில், மிகச்சிறப்பாக நடைபெற்று வந்த நேரத்தில், தொடர்ந்து மழை பெய்ததனால், விவசாயிகளால் கொப்பரை தயார் செய்ய முடியவில்லை. விவசாயிகள் கொப்பரையைக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக, பத்திரிகைகளிலே நாங்கள் முழுமையாக, தொடர்ந்து அனைத்துப் பத்திரிகைகளிலும், தேவையான மாவட்டங்களில் விளம்பரம் செய்திருக்கிறோம். யாரெல்லாம் கொப்பரையை, சென்ற காலங்களிலே கொள்முதல் நிலையங்களிலே செலுத்தியிருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் தனிப்பட்ட முறையிலும் கடிதம்

அனுப்பியிருக்கிறோம். தமிழகத்தில் மட்டும்தான் கொப்பரைக் கொள்முதலிலே இந்த அளவிற்கு முன்னேற்றம் காட்டப்பட்டிருக்கிறது என்கிற தகவலைச் சொல்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நீங்கள் விதித்திருக்கிற நிபந்தனைகளை, யாராலும் நிறைவேற்ற முடியாத நிபந்தனைகள் என்று விவசாயிகள் சொல்கிறார்கள். இங்கே நிறைய விவசாயிகள் இருக்கிறார்கள். சட்டப்பேரவை உறுப்பினர்களிலே நிறைய விவசாயிகள் இருக்கிறார்கள். அதிலும், தென்னை மர விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் எங்களிடத்திலே சொல்கிறார்கள். அந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு யாராலும் தயார் செய்து, அதைக் கொண்டுவர முடியாது, கொண்டுபோய்க் கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். நிபந்தனைகளைத் தளர்த்துங்கள். வேறு ஏதாவது வகையில் ஏற்பாடு செய்யுங்கள். கொப்பரை எடுப்பதற்கு விவசாயிகளுக்குக் களம் இருக்காது. விவசாயிகள் 10 டன் அல்லது 5 டன் கொப்பரை எடுக்க வேண்டுமென்று சொன்னால், எல்லா விவசாயிகளும் 10 டன் என்று கொப்பரை எடுப்பது என்பது அவ்வளவு சுலபமான விஷயம் அல்ல. இரண்டு டன், ஒரு டன்கூட எடுக்க முடியாத நிலை இருக்கிறது. எனவே, நிபந்தனைகளைத் தளர்த்தி, நீங்கள் கொள்முதல் செய்தால், இன்றையதினம் தேய்காய் விலை அடிமாட்டு விலைக்கு வந்துவிட்டது. இரண்டு ரூபாய், இரண்டரை ரூபாய்க்கு விற்கிறது தேங்காய். பேராவூரணியிலே கேட்டால், இரண்டு ரூபாய்க்கு விற்கிறது என்கிறார்கள். பட்டுக்கோட்டைக்காரர், இரண்டு ரூபாய், இரண்டரை ரூபாய்க்கு விற்கிறது என்கிறார். குறைந்த விலைக்கு வந்துவிட்டது. நிபந்தனைகளைத் தளர்த்தி, கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, பத்திரிகையாளர்களைப் பொறுத்தவரையில், . . .

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் NAFED நிறுவனத்தினுடைய முகவராகத்தான் தமிழ்நாட்டினுடைய TANFED நிறுவனம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. NAFED நிறுவனம் எந்தெந்த நிபந்தனைகளை விதித்திருக்கிறதோ அந்த நிபந்தனைகளைத்தான் TANFED நிறுவனமானது பின்பற்றுகிறது. வேண்டுமென்றால், மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் NAFED நிறுவனத்திடம் சொல்லி, நிபந்தனைகளைத் தளர்த்தி, யாரிடம் வேண்டுமென்றாலும்—சென்ற ஆட்சிக்காலத்தில் நடைபெற்றதைப்போல, வியாபாரிகளிடமிருந்து வேண்டுமென்றாலும் கொப்பரைகளைக் கொள்முதல் செய்து கொள்ளலாமா என்கின்ற நிபந்தனையைத் தளர்த்துவதற்கு, மாண்புமிகு



எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள், மத்திய அரசிடம் சொல்லி, NAFED நிறுவனத்திடம் சொல்லி, விதிவிலக்கு பெற்றுத் தருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் பலமுறை முயற்சி எடுத்ததன் விளைவாகத்தான் கொள்முதல் செய்யலாம் என்று சொன்னார்கள். அந்தக் கடிதத்திலே நீங்கள் பார்க்கலாம். அந்தக் கடிதத்திலே...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் கொப்பரைக் கொள்முதலைத் தொடங்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு உரிய காலத்தில் கடிதம் எழுதி, பெற்றுக் கொடுத்ததன் மூலமாகத்தான் கொப்பரைக் கொள்முதலானது தொடங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இன்னும் சொல்லப்போனால், அண்டை மாநிலமான கேரளம், கர்நாடகம், ஆந்திரா ஆகிய மாநிலங்களில் கொப்பரைக் கொள்முதலானது இன்றுவரை நடைபெறாத ஒரு சூழ்நிலையில்தான் இருந்துகொண்டிருக்கிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவர் எழுதியிருக்கிறார், நான் மறுக்கவில்லை. நான் பிரதமரைச் சந்தித்தேன். சோனியா காந்தியைச் சந்தித்தேன். சரத்பவாரைச் சந்தித்தேன். மூன்று பேருக்கும் கடிதம் எழுதியிருக்கிறேன். மூன்று பேர்களிடத்திலேயிருந்தும் எனக்கு பதில் வந்திருக்கிறது. சரத்பவார் அவர்கள் எனக்குப் பதிலும் எழுதியிருக்கிறார். அந்த பதிலிலேதான், இந்த விவரங்களெல்லாம் இருக்கின்றன. மற்ற இரண்டு மாநிலங்களைப் பொறுத்தவரையிலும், ஆந்திராவிலே பிரச்சினையில்லை. அதை எடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார். கர்நாடகத்திலே இதைவிட ruling price அதிகமாக இருக்கிற காரணத்தினாலே, கர்நாடகாவிற்குத் தேவைப்படாது. தமிழ்நாட்டிலேதான் இப்போது ஆரம்பிக்கப்படுகிறது. கேரளாவிலே, அந்த விலை எந்த நேரத்திலே குறைகிறதோ அப்போது அவர்கள் தொடங்கலாம் என்று அந்த ஆணையிலேயே இருக்கிறது. நீங்கள் பார்த்தால் தெரியும். அதனாலே, அதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகையாளர்களைப் பொறுத்தவரையில், அரசு ஓய்வூதியம் வழங்குகிறது. ஓய்வு பெற்றதற்குப் பிறகு அவர்களுக்கு 3,000 ரூபாய் கொடுக்கிறார்கள். அதிலே, அவர்கள் மரணம் அடைந்தால், பெண்களுக்கு, மனைவிமார்களுக்கு 500 ரூபாய்தான் மாதம்

கொடுக்கிறார்கள். அந்தத் தொகை மிகவும் குறைவு. இன்று 7 பேர்தான், பெண்கள் அப்படி ஓய்வூதியம் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அருள்கூர்ந்து நான் கேட்டுக்கொள்கிறேன். முழுமையாகக் கொடுக்க முடியாவிட்டாலும்கூட, அதை 2,000 ரூபாயாகவாவது உயர்த்திக் கொடுங்கள். அது மிகவும் நியாயமான கோரிக்கை. அந்தக் கோரிக்கையை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11–05*

அதேபோல, வேலைவாய்ப்பு, கல்வியிலே தங்களுக்குரிய இடம் கிடைப்பதில்லை என்று கேட்டு, சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், இடஒதுக்கீடு செய்து தரவேண்டுமென்று பல ஆண்டு காலமாக கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மிகவும் நியாயமான கோரிக்கை. சிறுபான்மை சமுதாயத்தினருக்குக் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும்....

*** மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் ரூ.500/-லிருந்து ரூ.1500/-ஆக உயர்த்தப்பட்டு அதனை நான்கு பத்திரிகையாளர் குடும்பங்கள் ஓய்வூதியமாகப் பெற்றுவருகிறார்கள் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சிறுபான்மைச் சமுதாய மக்களுக்கும் இடஒதுக்கீடு செய்துதர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய முக்கியமான கோரிக்கை, வெள்ள நிவாரணம். அதிலே நான் சர்ச்சைக்கே போகவில்லை. பல பகுதிகளில் முழுமையாக வெள்ள நிவாரணம் கிடைக்கவில்லை என்று என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். முழுமையாகத் தரப்படாத பகுதிகளுக்கு நீங்கள் தரவேண்டும், தர ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, பட்டுக்கோட்டை, பேராவூரணி, திருவாடானை தொகுதிகள் போன்ற பகுதிகளில் எல்லாம் அங்கே முழுமையாகத் தரப்படவில்லை. நிர்வாகமே 19 ஆயிரம் பேருக்கு தரவேண்டிய இடத்திலே, தருகிறேன் என்று ஒப்புக்கொண்டு சில இடங்களிலே 7 ஆயிரம், 9 ஆயிரம் பேர்களுக்கு மட்டுமே கொடுத்திருக்கிறார்கள். மற்றவர்களுக்கெல்லாம் கொடுக்கவில்லை. அவர்களுக்கெல்லாம் கொடுப்பதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல, அரசியலில் எதிர்மறையான கொள்கைகளைக் கொண்டவர்களாக இருந்தாலும், அரசியல் என்று வரும்போது மத்திய மாநில அரசுகளுக்கிடையே நல்லுறவு காணப்பட வேண்டும். இதற்கு முன்பு இருந்த தமிழகத்தின் முதல்வர்கள் அனைவரும், இத்தகைய இணக்கமானப் போக்கைத்தான் பேணிக் காத்து வந்திருக்கிறார்கள். பீகார் மாநில முதல்வரான நிதிஷ்குமார் அரசியலில் எதிரான போக்கைக் கொண்டவராக இருந்தாலும், மத்திய இரசாயனம் மற்றும் உரத் துறை அமைச்சராக இருக்கும் ராம்விலாஸ் பாஸ்வான் அவர்களை புதுடெல்லியில் நேரில் சந்தித்திருக்கிறார். தன்னுடைய மாநிலத்தின் தேவையை எடுத்துரைத்து இசைவினையும் பெற்றிருக்கிறார். ஆனால், இந்த அரசைப் பொறுத்தவரையில் மத்தியில் உள்ள தமிழகத்தைச் சேர்ந்த அமைச்சர்களை எதிரிநாட்டவர்களைப் போலவே கருதுகிறது. அவர்களாகவே வலிய வந்து திட்டங்களை அறிவித்தாலும், முட்டுக்கட்டை போடுகிறது. சேது சமுத்திரத் திட்டம், கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் போன்ற கனவுத் திட்டங்களைக்கூட, நிறைவேற்றவிடாமல் வல்லடி வழக்குகளிலே ஈடுபட்டு வருகிறது.

போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளித்திருப்பது பற்றி ஆளுநர் உரையில் பெருமையாகப் பேசப்பட்டு இருக்கிறது. குறைந்த கட்டணமே வசூலிக்கப்பட்டு சிறந்த சேவை ஆற்றப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இவற்றிற்கு இந்த அரசு உரிமை கொண்டாடுவதுதான் வேடிக்கையாக இருக்கிறது. முதல்முறையாக அரசு விரைவுப் போக்குவரத்து சேவையை காங்கிரஸ் அரசுதான் கொண்டு வந்தது. அதனைத் தொடர்ந்து அனைத்து பஸ் போக்குவரத்தையும் அரசுடைமையாக்குவது என்ற திட்டத்தை கலைஞர் தலைமையிலான அரசுதான் அறிவித்தது. நாட்டிலே அதிகமான பேருந்துகளை அரசுடைமையாக்கி பல்வேறு போக்குவரத்துக் கழகங்களை நிறுவி, குறைவான கட்டணத்தில் நிறைவான சேவை வழங்கிய பெருமையும், அரசுக்கு புதிய வருவாயைத் தேடிய சாதனையும் அவரையே சாரும். ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட ஊழியர்களுக்குப் பணிப் பாதுகாப்பும், ஊதிய உயர்வும் வழங்கி, வாழ்க்கையில் அவர்களுக்கு உயர்ந்த பெருமையான இடத்தைத் தேடித் தந்த சிறப்பும் அவர்களையே சாரும். ஆனால், இந்த அரசு பொறுப்புக்கு வந்த பிறகுதான் அவர்களுடைய வாழ்வு கீதம், சோக கீதம் கப்பிக்கொள்ளத் தொடங்கியது. அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குவதற்கு சம்பள கமிஷனை அரசாங்கமே நியமிக்கிறது. உரிய விசாரணைக்குப் பிறகு அந்தக் கமிஷன் வழங்கும் பரிந்துரையை ஏற்று ஊதிய உயர்வை அறிவிக்கிறது. ஆனால்,

தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இத்தகைய கமிஷன்களை நியமிப்பது இல்லை. நிர்வாகமும், தொழிலாளர்களும் பேச்சு . . .

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன சொல்கிறார் என்றே புரியவில்லை. போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு இப்போது எதுவும் செய்யவில்லையென்று சொல்கிறார்களா அல்லது அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைத் தெளிவாகச் சொன்னால், அதைப் புரிந்துகொள்ள முடியும். இருந்தாலும் நான் புரிந்துகொண்ட வகையிலே பதில் சொல்கிறேன். அவர் சொல்ல வந்தது, போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு, ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை என்று சொல்கிறாரோ என்று நான் நினைக்கிறேன்.

இந்தியாவிலேயே தமிழகத்திலே பணிபுரிகின்ற போக்குவரத்துத் தொழிலாளர்கள்தான், கூடுதல் சம்பளம் பெறுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஒரு சாதனையை நிகழ்த்தி காட்டியிருப்பவர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு மட்டுமல்ல, இந்தியாவிலேயே குறைந்த பேருந்துக் கட்டணத்தில் கூடுதல் சம்பளம் வழங்கி, 20 சதவிகிதம் போனஸ் வழங்கி, — செட்டில்மென்ட் —இப்போது ஒட்டுமொத்த தொழிலாளர்களும் பாராட்டுகின்ற வகையில், ஊதிய ஒப்பந்தத்தையும், இன்றைக்கு செய்து கொடுத்திருக்கிறார்கள். இப்படி தொழிலாளர்களுடைய நலனுக்காக, அம்மா அவர்கள் செய்திருக்கின்ற சாதனைகளை, நன்றியோடு பாராட்டியிருக்க வேண்டும். மாறாக அதை குறை சொல்வது அர்த்தமற்றது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நிர்வாகமும், தொழிலாளர்களும் பேச்சுவார்த்தை நடத்தி, பேரங்களின்மூலமாகத்தான் ஊதியங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. இருதரப்பு ஒப்பந்தமாகவும், முத்தரப்பு ஒப்பந்தமாகவும், ஊதிய ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்படுகின்றன. ஆனால், இந்த நேரத்தில் . . .

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே எங்கேயும் எந்த முதலமைச்சரும் செய்யாத வகையில் அனைத்துத் தொழிற்சங்க நிர்வாகிகளையும் அழைத்து தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நேரடியாகப் பேச்சு வார்த்தை நடத்தி ஊதிய ஒப்பந்தத்தை (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் மகிழ்கின்ற வண்ணம், அவர்கள் பாராட்டுகின்ற வண்ணம் செய்து முடித்தார்கள். அந்தத் தகவலையும்



மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் மறந்துவிட வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனால், பல தொழிற்சங்கங்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது உண்மை. இங்கேயே பலமுறை...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16 பதிவு பெற்ற தொழிற்சங்கங்களில் 13 சங்கங்கள் அதிலே ஒப்புதலிட்டு கையெழுத்திட்டிருக்கிறார்கள். அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக – உங்கள் சங்கம் – இன்னும் சொல்லப்போனால் உங்களுடைய சங்கமும் அதிலே கையொப்பம் இட்டிருக்கிறது. I.N.T.U.C. அதிலே கையெழுத்திட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், திராவிட முன்னேற்றக் கழகமும், பாட்டாளி மக்கள் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்கங்கள்தான் அதிலே கையெழுத்திடவில்லையே தவிர, I.N.T.U.C.-சங்கமும் அதிலே கையெழுத்திட்டிருக்கிறார்கள் என்பதை உங்களுக்குப் பணிவோடு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** H.M.S. கூட கையெழுத்திடவில்லை. (சிரிப்பு) ஊதிய மாற்றத்தைத் திணிக்கும் வழக்கத்தை இந்த அரசுதான் பின்பற்றி வருகிறது. அண்மையில்கூட கூட்டுறவு சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு குறித்தும், இதேபோன்ற அறிவிப்பைத்தான் இந்த அரசு வெளியிட்டிருக்கிறது. இதற்கு ஊழியர் சங்கங்கள் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றன. தொழிலாளர்களின் வேலைநிறுத்த உரிமையை மறுக்கும் வகையிலும், அரசு ஊழியர்களுக்கு இருந்து வந்த அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் வகையிலும் செயல்பட்டு வந்த இந்த அரசு, இப்பொழுது உழைக்கும் வர்க்கத்தின் பேரம் பேசும் உரிமையையும் தட்டிப் பறிக்கும் தகாத செயலிலும் இறங்கி இருப்பது வேதனைக்குரியதாகும். ஆகவே, இதில் இந்தியாவில் முன்னணி மாநிலமாகவும், முதல் மாநிலமாகவும் தமிழகத்தைக் கொண்டுசென்றிருப்பது பெருமை அளிப்பதாக இல்லை. சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் இந்தியாவிலேயே இந்த அரசுதான் முன்னிலையில் இருப்பது போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்த முற்பட்டிருக்கிறார்கள். ** என்ற குற்றச்சாட்டு தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது. முதலமைச்சருக்கு...

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரம் இல்லாத, கிஞ்சித்தும் உண்மை இல்லாத குற்றச்சாட்டை தயவுசெய்து இங்கே கூறவேண்டாம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** முதலமைச்சருக்கு எதிராக...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், ** என்று சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவசரப்படாதீர்கள். முதலமைச்சருக்கு எதிரான...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது நீக்கிவிடுகிறேன். அதற்குப் பிறகு நீங்கள் ஆதாரத்தைக் கொடுங்கள். அப்புறம் சேர்த்துக்கொள்ளலாம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இதெல்லாம் உள்நோக்கத்தோடு சொல்லப்படுவது. (குறுக்கீடு) இல்லை, இல்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஏங்க?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, அடிப்படை இல்லாமல் இந்த மாதிரி பேசக் கூடாது. அடிப்படை இல்லாமல் நீதிமன்றத்தைக் குறை சொல்வது மாதிரி பேசக் கூடாது. ஆதாரம் இல்லாமல் இந்த மாதிரி பேசக் கூடாது. அவை அனைத்தும் அவைக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. நீங்கள் அடுத்த சப்ஜெக்ட்டுக்கு போங்கள். (குறுக்கீடு) அவை அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. எஸ்.ஆர்.பி. அவர்கள், இன்னும் தொடர்ந்து எந்த ஆதாரமும் இல்லாமல் நீங்கள் பாட்டுக்கு தொடர்ந்து குற்றச்சாட்டுகளாகச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். தாங்கள் இப்பொழுது பேசியது அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீதிமன்றம் தொடர்பாக ** என்று சொன்ன அவ்வளவும் அவைக் குறிப்பிலிருந்து ஒட்டுமொத்தமாக நீக்கப்படுகின்றன. நீங்கள் அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போங்கள். (குறுக்கீடு) இல்லை. நீதிமன்றம் தொடர்பாக ** என்றெல்லாம் நீங்கள் ஆரம்பித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்குத் தந்த விளக்கங்கள் உட்பட அவை அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. திரு. துரைமுருகன், இப்பொழுது கொஞ்சம் திருப்தியாக இருப்பார் என்று நினைக்கிறேன். முதலமைச்சர் சொன்னதையும் நீக்கியாகிவிட்டது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, அவர்களே கேட்டார்கள். அதனால்தான் நீங்கள் நீக்கி இருக்கிறீர்கள். அவர்களே கேட்டார்கள். அவர்கள் கேட்டதால்தான் நீங்கள் நீக்கினீர்கள். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. என்ன இது? திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், நீங்கள் மூத்த உறுப்பினர். என்ன இது? ஆதாரம் இல்லாமல் நீங்கபாட்டுக்கு வரிசையாக அடுக்கிக்கொண்டே போனால் என்ன அர்த்தம் இது? எஸ்.ஆர்.பி. பேசிய நீதிமன்றம் தொடர்புடைய அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. இதற்குச் சம்பந்தம் இல்லாமல் ஏதாவது இருந்தால் பேசுங்கள். நீதிமன்றத்திற்குத் தொடர்பு இல்லாத சப்ஜெக்ட் வேறு ஏதாவது இருந்தால் பேசுங்கள். இன்னும் 5 மணித் துளிகளில் முடியுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(முற்பகல் 11-15

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நீங்கள் சொன்னதற்கே இன்னும் நேரம் இருக்கிறது. நான் நேரத்தில் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாருமே குறுக்கிடவில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதேபோன்று முந்தைய ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டப் பணிகளில் ஏதோ முறைகேடு நடந்திருப்பதாகக் கூறி முதலமைச்சராகப் பொறுப்பு வகித்தவரையும், தலைமைச் செயலாளராக இருந்தவரையும் நள்ளிரவு கைது செய்து சிறையில் அடைத்த கொடுமையையும், மத்திய அமைச்சர்களைக்கூட கைது செய்து சிறையில் அடைத்த வரம்பு மீறிய நடவடிக்கைகளும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் ஏற்கெனவே பலமுறை பேசப்பட்டு, ஏற்கெனவே அதற்கெல்லாம் பதில் சொல்லப்பட்டிருக்கிறது. தயவுசெய்து இந்தச் சிக்கலுக்குரியவற்றையெல்லாம் எதற்குப் பேசுகிறீர்கள் நீங்கள்? வேறு ஏதாவது இருந்தால் பேசுங்கள். இல்லையென்றால், பேச்சை இத்தோடு நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** உங்களிடம் இல்லை என்று சொல்லுங்கள். (குறுக்கீடு) உங்களிடம் ஒன்றும் இல்லை, சரக்கு இல்லை சட்டியிலே. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போங்கள். (குறுக்கீடு) ஞானசேகரன், உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மொத்தத்தில் கடந்த 5 ஆண்டுக் காலத்தில் கடுமையான இயற்கைச் சீற்றங்களையும், கொடுமையான அரசின் நடவடிக்கைகளையும் நம் மக்கள் சந்திக்க நேரிட்டிருக்கிறது. இந்த ஆட்சியாளர்களுக்கு எதிராக தங்களுடைய தெளிவான தீர்ப்பை 2004-ல் மக்களவைத் தேர்தலில் தெரிவித்துவிட்ட பின்னரும், அதற்குப் பின்னரும் சிறிதும் மதிப்பு அளிக்காமல் அதிகார பீடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிற இந்த இலட்சணத்தில், அரசு நிலங்களை ஆக்கிரமித்திருப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூசாமல் கூறுகிறது. பரத நாட்டிய முனிவருக்கு கோயில் எழுப்ப 5 ஏக்கர் நிலத்தை தாராளமாகத் தாரை வார்க்கிறது. பாவப்பட்ட ஏழை மக்களுக்கு வீட்டுவசதி வாரிய வீடுகளை நியாய விலைக்கு ...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன இது? குற்றச்சாட்டுகளை ஆதாரம் இல்லாமல், அடிப்படை இல்லாமல் சட்டமன்ற மரபு தெரிந்த நீங்கள் இப்படிப் பேசிக் கொண்டிருப்பது முறை அல்ல.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டின் கலை, கலாச்சாரம், பாரம்பரியம் இவற்றையெல்லாம் பாதுகாக்க வேண்டியது ஒரு அரசின் கடமை. அந்தக் காலத்தில் மன்னர்கள் கலையையும், கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் காத்து வந்தார்கள். இந்தக் காலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிகள் அந்தக் கடமையைச் செய்து வருகின்றன. தமிழ்நாடுதான் பரதக் கலையின் தாய் வீடு. இதை உலகமே ஏற்றுக்கொள்கிறது, போற்றுகிறது, பாராட்டுகிறது. இந்தப் பரத நாட்டியக் கலையைத் தோற்றுவித்தவர் பரத முனிவர் என்று புராணங்கள் கூறுகின்றன, இதிகாசம் கூறுகிறது. இந்தப் பரத முனிவர் அவர்களுக்கு இந்தோனேஷியா போன்ற நர்டுகளில்கூட கோயில் இருக்கிறது. ஆனால், பரத நாட்டியத்தின் தாய் வீடான இந்தியாவில் அவருக்கு என்று ஒரு கோயில் இல்லை. முக்கியமாக பரதக் கலையின் பிறப்பிடமான தமிழ்நாட்டில் பரத முனிவருக்கு எந்தக் கோயிலும் இல்லை. இதை உலகப் புகழ்பெற்ற நாட்டிய மேதை டாக்டர் பத்மா சுப்ரமணியம் அவர்கள் என் கவனத்திற்குக் கொண்டு வந்து, பரத முனிவருக்கு தமிழ்நாட்டில் ஒரு கோயில் எழுப்ப வேண்டும், அதற்கு அரசு நிலம் ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டார். ஆகவே, அதற்காக 5 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதை அனைவரும் மனமுவந்து பாராட்ட வேண்டுமே தவிர, இதைக்கூட கொச்சைப்படுத்தி குறை கூறுவது துரதிர்ஷ்டவசமானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிகளில் உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன இது? ** என்ன இது?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த issue நீதிமன்றத்தில் இருக்கிறது. அந்த issue சம்பந்தமாகப் பேசியதை எடுத்துவிடுங்கள். (குறுக்கீடு)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் பதில் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள் எதை பொத்தாம்பொதுவாகச் சொல்கிறார், ** என்றெல்லாம் சொல்கிறார் எதைப் பற்றிச் சொல்கிறார் என்று விளக்கமாகச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதை என்று சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இதை நான் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே ஒரு வழக்கறிஞர். அவருக்குத் தெரியாதது அல்ல. ஒரு பிரச்சினை நீதிமன்றத்திற்கு வந்து விட்டபின், அது sub–judice ஆகி விடுகிறது. ஆகவே, இந்த ** பிரச்சினையை தி.மு.க. கோர்ட்டிற்கு கொண்டு வந்துவிட்டது. இப்போது நீதிமன்றத்திற்கு முன்னால் இந்த விவகாரம் இருக்கிறது. ஆகவே, அதைப்பற்றி இந்த அவையில் பேசக் கூடாது, பேச முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றி தாங்கள் குறிப்பிட்டவை அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

முற்பகல் 11–20

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல கரூர் பாலத்தைப்பற்றி இங்கே முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள். வேறு யாரும்.. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** வழக்குகளுக்குள்ளே போகாதீர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நானும் வழக்குகளுக்குள்ளே போகவில்லையே! (குறுக்கீடு) நான் பொதுவாகத்தான் சொல்கிறேன். நானும் வழக்குகளுக்குள்ளேயே போகவில்லை. உச்ச நீதிமன்றம் சொன்னதைச் சொன்னாலும் அதையும் அகற்ற வேண்டும் என்று நீங்கள் கேட்கிறீர்கள். உயர் நீதிமன்றம் சொன்னதைச் சொன்னாலும் அகற்ற

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



வேண்டும் என்று நீங்கள் கேட்கிறீர்கள். நான் வந்து கோர்ட்டிலே இருக்கிற விஷயத்தை—கரூர் விஷயத்தைச் சொன்னார்கள். நான் புதிதாக ஒன்றும் சொல்லவில்லையே!

அதேமாதிரி, தாராபுரத்திற்குப் பக்கத்தில் கொழிஞ்சவாடி.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை நிறைவு செய்யுங்கள், இன்னும் இரண்டு மணித் துளிகளில்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தாராபுரத்திற்குப் பக்கத்திலே கொழிஞ்சவாடிக்கு அருகில் இருக்கிற பாலம், இப்போது புதிதாகக் கட்டப்பட்ட பாலம் முழுவதுமாக அடித்துப் போய்விட்டது. அதற்கு யார் பொறுப்பு? ஏதாவது பதில் சொல்லப்பட்டிருக்கிறதா? இல்லையே! அதனாலே, சுருக்கமாக முடிக்க வேண்டுமென்று சொன்னால், 'படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள் கோவில்' (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** அது பாலம் இல்லை. தண்ணீர் கொண்டு செல்வதற்காகக் கட்டப்பட்ட ஒரு சின்ன கல் தூணே தவிர, பாலம் அல்ல என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சரி. இவர்களைப் பொறுத்தவரையில் 'படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள் கோவில்'. எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் என்று கேட்பதைவிட வேறு என்ன கூற முடியும்? என்ன சொன்னாலும் நீங்கள் அகற்றிவிடப் போகிறீர்கள். ஆக, பேரவைத் தலைவர் கேட்டுக் கொள்வதற்கிணங்க நான் இடம் சார்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் உரையாற்றுவதற்கு வாய்ப்பளித்த தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், எங்கள் தளபதி அவர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியைச் சொல்லி, தங்களுக்கும் என்னுடைய நன்றியைச் சொல்லி இந்த உரையைத் துவக்குகிறேன்.

பொதுவாக ஆளுநர் உரை, அதுவும் இந்த ஆட்சியின் இறுதியாகப் படிக்கப்படுகிற இந்த ஆளுநர் உரையில் 5 ஆண்டுக் காலத்தில் கிட்டத்தட்ட நடைபெற்றவற்றைப் பற்றியும், இன்னும் 3 மாத காலத்திலே நடைபெற இருப்பதாக நீங்கள் கூறியிருப்பவற்றைப் பற்றியும் எதிர்க்கட்சி என்ற முறையில் என்னுடைய கருத்துகளை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, இந்த ஆளுநர் உரைகளைப் பார்க்கிறபொழுது 2001–லே ஆளுநர் உரையில் சொல்லப்பட்டவை எந்தவகையில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்புணர்ச்சியும், கடமையும் எங்களுக்கு இருக்கின்றது. குறிப்பாக, 2001 ஆளுநர் உரையிலே சொல்லப்பட்ட பல்வேறு விஷயங்கள் இன்னும் செய்யப்படாமலேயே இருக்கின்றன. சொல்வது ஒன்று, செய்வது ஒன்று என்ற அடிப்படையிலேயே நடைபெற்றிருக்கின்றன. குறிப்பாக, 2001 ஆளுநர் உரையிலே, 'ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு' என்பதை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு இவ்வரசு செயல்பட்டு அந்நோக்கத்தை எய்தும் வகையில் "வீட்டுமனை விரைவு ஒதுக்கீட்டுத் திட்டம்" ஒன்றை வகுக்கும்' என்று சொல்லப்பட்டிருந்தது. இந்த 4½ ஆண்டுகளில், 'ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு" என்று சொல்லியிருக்கிறீர்களே, அதற்கு எத்தனை வீடுகள் கட்ட வேண்டுமென்று கணக்கெடுப்பாவது எடுத்திருக்கிறீர்களா ? அதிலே எத்தனை வீடுகள் கட்டியிருக்கிறீர்கள் என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, 2001 தேர்தலில், கூட்டுறவுத் தேர்தலை நடத்துவோம் என்று பக்கம் 13–லே சொல்லியிருக்கிறீர்கள். '2001 செப்டம்பர் திங்களில் நடத்தப்பட இருக்கும் தேர்தல்கள்மூலம், இம்மாநிலத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களில் உண்மையான ஜனநாயக உணர்வை ஊட்டவும் இவ்வரசு விழைகிறது' என்று சொல்லியிருக்கிறீர்கள். 4½ ஆண்டுகள் முடிந்த பிறகும் கூட்டுறவுத் தேர்தல்கள் நடைபெறவில்லை. கேட்டால் நீதிமன்றத்திலே இருக்கிறது; (குறுக்கீடு) இது நீதிமன்றத்திலே இருக்கிறது என்று பதில் சொல்லப் போகிறீர்கள். (குறுக்கீடு) அவர் அதைத்தான் சொல்லப் போகிறார். இது நீதிமன்றத்திலே இருக்கிறது என்று சொல்வீர்கள். ஆனால், நீதிமன்றத்திலே ஒருவர் குற்றம் சாட்டிவிட்டால் அடுத்து, இராத்திரியோடு இராத்திரியாக, leave–ஆக இருந்தால்கூட போய், அவர்மேல் appeal போகிற அரசு, இந்தக் கூட்டுறவுத் தேர்தலை நடத்த வேண்டுமென்று அக்கறை காட்டியிருந்தால், இந்தத் தேர்தலை நடத்தியிருக்க முடியும் . . .



**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை கூட்டுறவுச் சங்கங்களுடைய தேர்தலை நடத்துவதிலே இவ்வளவு அக்கறை காட்டுவது எங்களுக்கு மிகவும் வியப்பாக இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கூட்டுறவு இயக்கத்திலே நடத்தப்பட்ட கொள்ளைகள் குறித்த விசாரணை இன்னும் 10 ஆண்டு காலத்திற்கு உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்த விசாரணைகள் எல்லாம் முடிந்ததற்குப் பிறகு உரிய நடவடிக்கைகளை எடுத்ததற்குப் பிறகு— கூட்டுறவு இயக்கத்திலே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவிலே இருக்கின்ற மற்ற எந்தத் தலைவர்களை விடவும் மிகுந்த நம்பிக்கையும், அக்கறையும், ஈடுபாடும் உள்ளவர்கள். உங்களால் கூட்டுறவு இயக்கத்திலே ஏற்பட்டிருக்கின்ற பாதகங்களெல்லாம் சரிசெய்யப்பட்டதற்குப் பிறகு, —உங்களுடைய கட்சியைச் சேர்ந்த பலரும் விசாரணைக்குத் தடையாணை பெற்றிருக்கின்றார்கள். பல கோடிக்கணக்கான ரூபாய் முறைகேடுகள் நடந்திருக்கின்றன. அந்த விசாரணைக்கான தடையாணைகள் நீக்கப்படுவதற்கு இப்போது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இவையெல்லாம் முடிந்த பிறகு, உரிய முறையில் அந்தந்தக் கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தப்படும்.

*முற்பகல் 11–25*

**டாக்டர் க. பொன்முடி:** 5 வருடங்களாக இதையே செய்து கொண்டிருக்கின்ற கூட்டுறவுத் துறைக்கு எனது பாராட்டுகள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு இயக்கத்தின் மீது இவ்வளவு அக்கறை காட்டுகிற மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த முன்னணித் தலைவர்களெல்லாம் விசாரணைக்குத் தடையாணை பெற்றிருக்கின்றார்கள். அவற்றையெல்லாம் நீக்கிக்கொண்டால் உடனடியாக விசாரணையை முடித்து விரைவில் தேர்தல் வைக்கலாம். உயர் நீதிமன்றம் சென்று தடையாணை பெற்றிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நீக்கிக்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று கேட்க விரும்புகின்றேன்.

**டாக்டர் க. பொன்முடி:** கூட்டுறவுத் துறையில் அவர்கள் தடையாணை வாங்கியதற்கும், கூட்டுறவுத் தேர்தல் நடத்துவதற்கும் சம்பந்தமே கிடையாது. ஏதோ செய்ய முடியாத ஒன்றுக்கு ஏன் இதையெல்லாம் பேசிக் கொண்டிருக்கின்றார்கள் என்று தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** ஒவ்வொரு நிறுவனத்திலும் தலைவர்களாக இருந்தவர்கள் செய்த ஊழல்கள்மீது விசாரணை கூடாது என்று இடைக்கால தடை பெற்றிருக்கின்றார்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்பது அமைச்சருக்குப் புரியவில்லை என்றால் நான் அதற்கு எதுவும் செய்ய முடியாது.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுத் தேர்தல் சம்பந்தமாக பலர், தேர்தல் நடத்துவதிலே பல்வேறு வகையான வழக்குகளை உயர் நீதிமன்றத்தில் தொடுத்திருக்கின்றார்கள். புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதிலே பல தடையாணைகள் பெறப்பட்டுள்ளன. இவையெல்லாம் நீக்கப்பட்டவுடன் தேர்தல் உரிய முறையில் நடத்தப்படும்.

**டாக்டர் க. பொன்முடி:** அதைத்தான் நான் முதலிலேயே சொன்னேன். 5 வருடங்களாக இதைத்தான் செய்துகொண்டிருக்கின்றீர்கள். அந்த வேலையைச் செய்துகொண்டிருக்கிற உங்களுக்கு என்னுடைய பாராட்டுகள்.

அடுத்ததாக, 'வெளிநாட்டிலே வாழும் இந்தியத் தமிழர்களின் கட்டமைப்பு' Consortium ஒன்று அமைக்கப்படும் என்று பக்கம் 15, 2001 ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருந்தது. அந்த Consortium உருவாக்கப்பட்டதா? அதன்மூலம் மூலதனங்கள் ஏதேனும் வரவழைக்கப்பட்டு இருக்கிறதா என்பதையும் நான் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல, அரசு ஊழியர்களைப் பற்றி 2001–லே ஆளுநர் உரையிலே சொல்லப்பட்ட வார்த்தைகள். 'எந்தவொரு நிருவாக அமைப்பிற்கும் அரசுப் பணியாளர்களே வலுவான அடிப்படையாக விளங்குகின்றனர். இவ்வரசு தன் பணியாளர்களின் உண்மையான குறைகளைப் பரிவுடன் பரிசீலித்து, அவர்களுடைய நலன் மற்றும் பணி நிலை தொடர்பான பிரச்சினைகளைப் பரிசீலிக்க நடவடிக்கை எடுக்கும்' இது 2001 ஆளுநர் உரையிலே சொல்லப்பட்ட அரசு ஊழியர்களைப் பற்றிய அக்கறையான வாசகங்கள். ஆனால், இதற்குப் பின்னால் நடைபெற்றதையெல்லாம் தமிழ்நாடு அரசு ஊழியர்களும், மற்றவர்களும் மறந்திருக்கமாட்டார்கள். இதற்குப் பிறகுதான் அவர்கள்மீது ESMA, TESMA, இரண்டு இலட்சம் ஊழியர்களுடைய பதவி பறிப்பு. அதுமட்டுமல்ல, அவர்கள் புதியதாகச்



சலுகைகள்கூட கேட்கவில்லை. அவர்கள் கேட்டது, 'எங்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகளை, பெற்றிருந்த சலுகைகளைத் தொடர்ந்து கொடுங்கள்' என்று கேட்டனர். அவர்களுக்கு D.A. மத்திய அரசாங்கம் உயர்த்துகிறபோதெல்லாம், மாநில அரசு ஊழியர்களுக்கும் உயர்த்துவது வழக்கம். இந்த ஆண்டுகூட நீங்கள் உயர்த்தியிருப்பது 4 சதவிகிதம் அவர்கள் எந்தத் தேதியில் சொன்னார்களோ, அந்தத் தேதியில் சொல்லாமல், பிறகுதான் உயர்த்தியிருக்கிறீர்கள். அதேபோல, அரசு ஊழியர்களுக்கு அவர்கள் கேட்டிருக்கின்ற மற்றொரு கோரிக்கை. அந்த உயர்வு. 50 சதவிகிதத்தை அடிப்படை ஊதியத்தோடு சேர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். அதேபோல Earned Leave அந்த ஈட்டிய விடுப்பினை சமர்ப்பித்து 15 நாட்களுக்கான ஊதியத்தை அவர்கள் பெற்றுக்கொள்ள முடியும். அது முதலிலேயே, காலங்காலமாகப் பெற்றிருந்த சலுகை. நீங்கள் வந்தவுடனே அதையும் நிறுத்தினீர்கள். அதற்குப் பிறகு, நாடாளுமன்றத் தேர்தலுடைய முடிவுக்குப் பிறகு, அந்த 15 நாட்களை 7 நாட்களாகக் குறைத்தீர்கள். அவர்கள் அந்த 15 நாட்களை மீண்டும் வேண்டுமென்று கேட்கின்றார்கள். புதிய சலுகைகளை அவர்கள் கேட்கவில்லை, பெற்றிருந்த சலுகைகளைத் திரும்பக் கேட்கின்றார்கள். அதேபோல, ஓய்வு பெறுகின்றபோது கடைசி நாள் பணியில் சம்பளம் எது பெறுகின்றார்களோ அதை வைத்துத்தான் அவர்களுடைய ஓய்வூதியம் காலங்காலமாகக் கணக்கிடப்பட்டு வந்தது. நீங்கள் கடைசி மாதங்களினுடைய சராசரியை எடுத்துச் செய்யவேண்டுமென்று ஒரு புதிய உத்தரவைப் போட்டீர்கள். அதை மாற்றிக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். ஆனால், அரசு ஊழியர்கள்மீது இவ்வளவு அக்கறையாக 2001–ல் சொல்லிவிட்டு, இரண்டரை இலட்சம் ஊழியர்கள் தங்களுடைய கோரிக்கைகளுக்காகப் போராடுகிறபோது, அவர்களது இல்லத்திற்கே சென்று அவர்களையெல்லாம் கைது செய்து, மிரட்டி, ESMA, TESMA சட்டங்களைப் போட்டு, அவர்களுடைய உரிமைகளுக்குக் குரல் கொடுக்க முடியாமல், அவர்களுடைய சங்கங்களைக்கூட கலைத்து, இந்த நான்கரை ஆண்டுகளிலே . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றியெல்லாம் ஏற்கெனவே பலமுறை இந்த அவையிலேயே தெளிவாக விளக்கங்கள் கூறியாகிவிட்டது. அரசு ஊழியர்கள்மீது போடப்பட்ட அத்தனை வழக்குகளும் திரும்பப் பெறப்பட்டுவிட்டன, இரத்து செய்யப்பட்டுவிட்டன. அரசு ஊழியர்கள்மீது எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், disciplinary action எல்லாமே திரும்பப் பெறப்பட்டுவிட்டன, இரத்து

செய்யப்பட்டுவிட்டன. மேலும், அங்கீகாரம் இரத்து செய்யப்பட்டிருந்த அரசு ஊழியர் சங்கங்களுக்கெல்லாம் அந்த அங்கீகாரம் மீண்டும் வழங்கப்பட்டுவிட்டது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் குறிப்பிடுகின்ற இந்தப் பிரச்சினைகள் எதுவுமே இப்போது இல்லை.

*முற்பகல் 11-30*

மேலும் அரசு ஊழியர்களின் பல கோரிக்கைகளை இங்கே அவர் குறிப்பிட்டு, இதற்கெல்லாம் இந்த அரசு எதுவுமே செய்யவில்லையென்று குறிப்பிட்டார். என்னுடைய பதிலுரையின்போது அரசு ஊழியர்களுக்கு என்ன செய்யப் போகிறோம் என்பதைப்பற்றி சில முக்கியமான அறிவிப்புகளை நான் வெளியிட உள்ளேன். வழக்கம்போல தி.மு.க.வினர், குறிப்பாக திரு. பொன்முடி அவர்கள், வெளிநடப்பு என்று ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லி அறிவித்துவிட்டு வெளியே போய்விடக் கூடாது. இந்த அவையில் உட்கார்ந்து என்னுடைய பதிலுரையில் இருக்கின்ற விஷயங்களையெல்லாம் கேட்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் உட்கார்ந்திருப்பது முதலமைச்சர் பேசுகிற பேச்சைப் பொறுத்திருக்கிறது. பொதுக் கூட்டத்திலே அரசியல் கட்சிகளைச் சாடுவதைப்போல இங்கே சாடாமல் பொறுப்பான பதிலைச் சொன்னால் நாங்களும் அமர்ந்திருப்போம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவர், உட்கார்ந்திருப்போம் என்று சொல்கிறார். (குறுக்கீடு) உட்கார்ந்திருப்போம் என்று சொல்கிறார்.

**டாக்டர் க. பொன்முடி:** தரிசுநில மேம்பாட்டைப்பற்றி இந்த ஆளுநர் உரையிலேயும் சொல்லப்பட்டது; மாண்புமிகு முதல்வர் அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், இந்த தரிசுநிலத் திட்டத்திலே 50 இலட்சம் ஏக்கரில் நீங்கள் எந்த அளவிற்கு பழத்தோட்டங்களை உருவாக்கியிருக்கிறீர்கள்? எவ்வளவு நிலங்களை எடுத்திருக்கிறீர்கள் என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் அந்தத் திட்டத்தில்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, பொன்முடி கேட்டதற்கு இவ்வளவு அக்கறையாக, ஆர்வமாக வேளாண்மைத் துறை அமைச்சர் பதில் சொல்கிறார். அதைப் போய் நீங்கள் கிண்டல் செய்யலாமா?

***மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தினுடைய முன்னேற்றத்தைப்பற்றி அறிய விரும்புவதாக இங்கே குறிப்பிட்டு அமர்ந்திருக்கின்றார். மாண்புமிகு அம்மா அவர்களுடைய தொலைநோக்குப் பார்வையாலே, உரிய ஆலோசனைகள் பேரில் 2001-2002 ஆம் ஆண்டு முதல் 2005-2006 இன்று நாள் வரை 88,97,709 எக்டேர்களும், அதன்மூலமாக பயனடைந்தோர் விவரம் 14,26,121 பேரும், அதற்காகச் செலவழிக்கப்பட்டிருக்கின்ற தொகை ரூ.622,67,11,000 என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். குறிப்பாக, விரிவான தரிசுநிலம் என்கின்ற அடிப்படையிலே Comprehensive Wasteland Programme என்கின்ற திட்டத்தினுடைய அடிப்படையிலே, இந்த ஆண்டு மட்டும் 90,000 எக்டேர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதனுடைய அடிப்படையிலே, இந்த ஆண்டு 56,674 எக்டேர் அந்த விரிவான தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தின்மூலமாக மேற்கொள்ளப்பட்டு, அதன்மூலமாக பயன்பெற்றவர்களுடைய எண்ணிக்கை 40,550 என்பதையும், அதற்காகச் செலவழிக்கப்பட்டிருக்கின்ற தொகை ரூ. 1,941.60 இலட்சம் என்பதையும் நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே அறிந்துகொள்ள விரும்புவது, இந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தைப்பற்றி 2002 மார்ச்சிலே முதலமைச்சர் பதில் சொல்கிறபோது, பரிதி இளம்வழுதி அவர்கள் கேட்ட கேள்விக்கு ஒரு பதிலைச் சொன்னார்கள். இளம்வழுதி போன்ற சில மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு கேள்வியை எழுப்பினார்கள். தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் என்பது ஏற்கெனவே நடைமுறையில் உள்ளதுதானே? இதை ஏதோ புதிய திட்டம்போல அறிவித்தீர்களே என்று கேட்டார். இதற்கு முன்னர் தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது, இல்லையென்று சொல்லவில்லை; இது முதலமைச்சருடைய பதில். ஆனால், அந்தத் திட்டங்களில் மேம்பாடு செய்யப்பட்ட தரிசுநிலத்தின் அளவு மிகவும் குறைவு. தமிழகத்திலுள்ள ஒட்டுமொத்த 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலத்தையும் இந்த ஆட்சியில்

மீதம் உள்ள நான்கு ஆண்டு காலத்திற்குள் மேம்பாடு அடையச் செய்வது என்பது இதுவரை முன்னர் எப்போதும் எந்த மாநில அரசுமே செயல்படுத்தாத ஒரு மிகப் பெரிய திட்டமாகும். இந்தத் திட்டத்தில் ஆயிரம் ஏக்கர் முதல் இரண்டாயிரம் ஏக்கர் வரையிலான பழத்தோட்டப் பண்ணைகள், உணவு மற்றும் பழம் பதப்படுத்தும் தொழிற்சாலைகள், குளிர்பதன இருப்பு மையங்கள் ஆகியவை மேம்பட்ட தரிசு நிலங்களில் தனியார் துறையின் முதலீட்டோடும், நிதி நிறுவனங்களின் நிதியோடும் மிகப் பெரிய அளவில் மேற்கொள்ளப்படும் என்று சொன்னதன் காரணத்திற்காக, நான் இந்தக் கேள்வியை எழுப்பினேன். ஆகவே, நீங்கள் இந்த நான்கு ஆண்டுகளில் 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலத்தை மீட்போம் என்ற ஒரு பெரிய திட்டத்தைச் சொல்லி, அதிலே கிட்டத்தட்ட உங்களுடைய கணக்கின்படியே ஏழு இலட்சம், எட்டு இலட்சம்தான் போயிருக்கிறது என்பதை நீங்களே ஒத்துக்கொள்ள வேண்டிய ஒரு கட்டாயத்தில் இருக்கிறீர்கள். ஆகவே, சொல்கின்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருக்கின்றனவா என்ற கணக்கோடு பார்க்கிறபோது, பல திட்டங்களிலே இதுபோன்ற குறைகள் இருப்பதை நம்மால் தெரிந்துகொள்ள முடிகிறது.

*முற்பகல் 11–35*

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுகின்றபோது மிகத் தெளிவாகச் சொன்னேன். இதுவரையில் தமிழகம் முழுவதும் மேம்படுத்தப்பட்டிருக்கின்ற தரிசு நிலங்களுடைய எண்ணிக்கை எக்டேர் என்று சொல்லக்கூடிய அளவிலே 8 இலட்சத்து 97 ஆயிரத்து 709 என்று சொன்னேன். ஆக, அந்த அடிப்படையிலே இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலேயே ஒரு எக்டேர் தரிசு நிலத்தை மேம்படுத்துவதற்காக 8,500 ரூபாய் மானியம் கொடுத்திருக்கின்ற மக்கள் தலைவி, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதையும் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். (குறுக்கீடு) நான் இன்னொன்றையும் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். தொடர்ந்து 3 ஆண்டு காலமாக வறட்சி. வறட்சி இருக்கின்ற காரணத்தாலே இந்தத் திட்டத்தாலே (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, உட்காருங்கள்.



**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** நான் சொல்வதைக் கேளுங்கள். தொடர்ந்து 3 ஆண்டு காலம் தொடர் வறட்சி இருந்தாலும்கூட, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய மேம்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் மூலமாக 2002–2003 ஆம் ஆண்டிலே 21 ஆயிரத்து 771 எக்டேரிலும், 2003–2004 ஆம் ஆண்டிலே 23,600 எக்டேரிலும் 2004–2005 ஆம் ஆண்டிலே 51,386 எக்டேரிலும், 2005–2006 ஆம் ஆண்டைப் பொறுத்தமட்டிலே– ஒரு எக்டேர் என்பது 2 ஏக்கர் 47 சென்ட் நீங்கள் பெருக்கிக்கொள்ளுங்கள். ஆக, 20 இலட்சம் ஏக்கர் என்ற அடிப்படையிலே அதற்காக மட்டும் இன்றைக்குப் பயனடைந்தோருடைய, விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைப் பொறுத்தமட்டிலே பயனடைந்தோர் 10 இலட்சத்து 52 ஆயிரத்து 236 பேர் என்பதையும் நான் உங்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆக, அந்த அடிப்படையிலே தொடர் வறட்சி இருந்தாலும் இந்த ஆண்டு நல்ல மழை பெய்திருக்கின்ற காரணத்தாலே 90 ஆயிரம் எக்டேர் விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக மேற்கொள்ளப்பட்டு, இதுநாள்வரையில் 56,674 எக்டேர் 2005–2006–லே மட்டும் முடிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆக, ஒரு எக்டேர் என்பது 2 ஏக்கர் 47 சென்ட், இரண்டரை ஏக்கர். ஆக இந்த அளவிற்கு...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 8 இலட்சம் எக்டேர் என்று குறிப்பிட்டார்கள். அப்படியானால் 20 இலட்சம் ஏக்கருக்கு மேலாகிறது. அது ஒன்றும் சிறிய சாதனை அல்ல. மகத்தான சாதனைதான். (மேசையைத் தட்டும் ஒலி) பெரிய தொழில் நிறுவனங்கள், பெரிய (Big Industrial Houses) ஒப்பந்த அடிப்படையில் விவசாயிகளோடு ஒப்பந்தம் செய்துகொண்டு தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் ஈடுபடுவார்கள் என்று அறிவித்தீர்களே, என்ன ஆயிற்று என்று கேட்டார். இதற்கு ஒரு திட்டம் தீட்டி அதைப்பற்றி இந்த அவையிலேயே அறிவித்து பத்திரிகைகளில் விளம்பரம் செய்து expression of interest–க்கு call for செய்து பல பெரிய தொழில் அதிபர்களுக்கு Industrial House–களுக்கு இந்த அனுமதியும் கொடுத்து இன்று ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் அவர்களால் Jatropha, sweet sorghum, sugar beet போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. அந்தத் தரிசு நிலங்களும் இப்போது நல்ல விளை நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல இந்த ஆளுநர் உரையைத் தயாரிக்கிறபொழுது எப்பொழுதுமே ஆளுநர் உரை, நிதிநிலை அறிக்கை போன்றவை தயாரிக்கப்படுமானால் அது print ஆகி சட்டமன்றத்திற்கு வருகிற வரையிலே ஆட்சியிலே இருப்பவர்கள், அதைத் தயாரிக்கின்ற அதிகாரிகள் தங்களுடைய காதுகளையும் கவனமாகக் கேட்டு வருகிற செய்திகளைச் சேர்த்துத்தான் உள்ளடக்கி எழுதுவது உண்டு. ஆனால், இந்த ஆளுநர் உரையில் மத்திய அரசு அரிசி விலையை ரூ. 8.30–லிருந்து 9.15 ஆக உயர்த்தி இருப்பது இவ்வரசுக்கு கடும் அதிருப்தி அளித்துள்ளது. இந்த ஆளுநர் உரை இங்கே படிப்பதற்கு 2, 3 நாட்களுக்கு முன்பாகவே மத்திய அரசு இதை நிறுத்தி வைத்திருக்கிறது என்ற செய்தி வந்த பிறகும் ...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ஏற்கெனவே விளக்கம் அளித்திருக்கிறேன். ஆளுநர் உரையில் தெரிந்துதான், வேண்டும் என்றுதான் இதைக் குறிப்பிட்டிருக்கிறோம். மத்திய அரசு முதலில் Public Distribution System–ல் பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசியின் விலை ஏற்றத்தை அறிவித்தது. அதன் பின்னர் நாங்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்த பின் அதை தற்காலிகமாக நிறுத்தி வைப்போம் என்றுதான் அறிவித்தார்கள். ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட அந்த விலை உயர்வு வாபஸ் பெறப்படுகிறது என்றோ, இரத்து செய்யப்படுகிறது என்றோ, மத்திய அரசு அறிவிக்கவில்லை. மாறாக கூட்டணிக் கட்சிகளை அழைத்து அவர்களுடன் ஆலோசனை நடத்தும் வரை this will be put on hold என்று அறிவித்தார்கள். Put on hold என்றால் தற்காலிகமான நிறுத்தி வைப்பு என்றுதான் அர்த்தம். ஆகவே, தற்காலிகமாகத்தான் இந்த விலை உயர்வு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதே தவிர மத்திய அரசு விலை உயர்வை இரத்து செய்யவில்லை, வாபஸ் பெறவில்லை. ஆகவேதான், அதனைத் தெரிந்தே ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கிறோம்.

முற்பகல் 11–40

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி வேண்டுமென்றே குறிப்பிட்டிருந்தால் இதை நிறுத்தி வைத்திருப்பதை எடுத்து, முழுமையாக நீக்கவேண்டும் என்று ஒரு வரியைச் சேர்த்து இருந்தால், இந்த ஆளுநர் உரையை அவர்கள் முழுமையாக உருவாக்கியிருக்கின்றார்கள் என்று பொருள். அது கிடையாது. எடுத்துப் படியுங்கள். இவ்வரசுக்குக் கடும் அதிருப்தி அளித்துள்ளது. அது மட்டும்தான் இருக்கிறது. இதை மத்திய அரசு முழுமையாக



எடுக்கவேண்டுமென்றோ, நீக்கவேண்டுமென்றோ எங்கேயுமே கிடையாது. அதை நீங்கள் சொல்லியிருந்திருந்தால், நான் இந்தக் கேள்விக்கே வந்திருக்க மாட்டேன். ஆனால், மத்திய அரசு இதைக் குறித்து நிறுத்தி வைத்திருக்கிறது என்ற வாசகமும் இதிலே இல்லாமல், அதை முழுமையாகப் பரிசீலிக்க வேண்டும் என்று இல்லாமல் — ஏனென்றால், இது எப்பொழுதுமே அவர்கள் உயர்த்துவதுதான் — கலைஞருடைய ஆட்சியிலேகூட ஐந்து ரூபாயாக இருந்த அரிசியை, ரூபாய் 8.30–ஆக உயர்த்தியது அப்பொழுதுதான். அப்பொழுதும் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த பொழுது, இதே 3 ரூபாய் 50 பைசாவிற்குத்தான் அரிசி விற்கப்பட்டது. அவர்கள் உயர்த்தினாலும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, அப்பொழுதும் நாங்கள் கேட்டோம், நீங்களும் இப்பொழுது கேட்பதிலே தவறு இல்லை. நாங்களும் அதைச் சொன்னோம், கொடுத்தார்கள். ஆனால், இந்த ஆளுநர் உரையிலே அதைக் குறிப்பிட்டிருக்கலாமே என்பதுதான் என்னுடைய கருத்து.

அதேபோல, இந்த அறிக்கையிலே உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை அறிவித்து, அதைப்பற்றி இங்கே பேசிய உறுப்பினர்கள் எல்லாம்கூட மிகவும் பாராட்டிப் பேசியிருக்கின்றார்கள். பொதுவாக, இந்த ஆளுநர் அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிற பல்வேறு திட்டங்கள் எல்லாம், இந்த நான்கு ஆண்டுகளாக பல்வேறு புதிய பெயர்களிலே அறிவிக்கப்பட்டிருந்தாலும், கலைஞருடைய ஆட்சியிலேயும், மத்திய அரசும் கொண்டுவந்திருக்கிற திட்டங்களுக்கு ஒரு மெருகூட்டுகிற பெயரைத்தான் வைத்திருப்பதாகவே நான் கருதுகிறேன். ஒரு நகையைச் செய்பவர்கள், அதற்கு மெருகூட்டுவது இயற்கைதான். ஆனால், நகையைச் செய்தவன் வேறு, மெருகூட்டுபவன் வேறு ...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு (குறுக்கீடு) அதைச் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக்கூட இந்து நாளிதழில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பார்த்தாரோ, பார்க்கவில்லையோ எனக்குத் தெரியவில்லை. ஆனால், மத்திய அமைச்சர் சரத்பவார் அவர்கள், இந்த விலையேற்றம்—சட்டமன்றத் தேர்தல் ஐந்து மாநிலங்களில் நடக்க இருக்கின்றது. நடக்க இருக்கின்ற சூழ்நிலையில்—நிறுத்தி வைக்கப்படுகின்றது என்கின்ற தகவலைச் சொல்லியிருக்கின்றார்கள். (குறுக்கீடு) அதற்கு என்ன அர்த்தம், சந்தர்ப்பவாதம்.

**டாக்டர் க. பொன்முடி:** (குறுக்கீடு) இருக்கட்டும். அதேபோல, உழவர் பாதுகாப்புத் திட்டம். பல்வேறு பழைய திட்டங்களுக்குப் புதிய பெயர்கள் வைத்திருக்கிறீர்கள். நகை செய்வது, மெருகூட்டுவது. மெருகூட்டுவதிலே தப்பில்லை. ஆனால், நகை செய்தவன் வேறு என்பதையாவது சொல்லியிருக்கலாம். நாங்கள்தான் கொண்டுவந்தோம் என்று பல்வேறு திட்டங்கள், உழவர் பாதுகாப்புத் திட்டம். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நீங்கள் நகையைச் செய்யவில்லை. பித்தளையைத்தான் நீங்கள் செய்தீர்கள் என்பதை நான் கோடிட்டுக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) நகை செய்யவேண்டுமென்றால், பொன் நகை என்ற பெயராலே guilt நகையைச் செய்து மக்களை ஏமாற்றினீர்கள் என்பதுதான் உண்மை.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, பித்தளைக்கு கொடுப்பது guilt. தங்க நகைக்கு போடுவது மெருகு. அதற்குத்தான் அந்த வார்த்தையோடு அழகாகத் திருப்பிச் சொன்னேன். அவருக்குப் புரியவில்லை. நான் என்ன பண்ணமுடியும்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள் பேசுகின்றபோது ஏழை மக்களுக்காக எத்தனை பட்டாக்கள் வழங்கினீர்கள், எத்தனை வீடுகள் கட்டிக் கொடுத்தீர்கள் என்ற விவரங்களைக் கேட்டார். 2001 ஆம் ஆண்டு முதல் இதுவரை 35,276 ஏக்கர் நிலங்கள், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு எனது அரசால் ஒப்படை செய்யப்பட்டுள்ளன. 4,48,485 வீட்டுமனைப் பட்டாக்கள் எனது அரசால் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 2001–2002 முதல் 2004–2005 ஆம் நிதியாண்டுகள் வரை, ஊரக வளர்ச்சித் துறையால், ஊரக ஏழை மக்களுக்காக, 561 கோடி ரூபாய் செலவில் 1.44 இலட்சம் புதிய வீடுகள் கட்டப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) 75,000 கச்சா வீடுகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. நடப்பு 2005–2006 ஆம் நிதியாண்டில், 43,000 புதிய வீடுகள் கட்டும் பணியும், 22,000 கச்சா வீடுகளைத் தரம் உயர்த்தும் பணியும், 173 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தவிர, நடப்பு ஆண்டில், அதாவது 2005–2006 ஆம் ஆண்டில் 1.5 இலட்சம் கச்சா வீடுகள், 37.5 கோடி ரூபாய் அரசு மானியத்துடன்கூடிய கடன் உதவித் திட்டத்தின்கீழ் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. நகர்ப்புற ஏழை மக்களின் வீட்டு வசதிக்காக, 250 கோடி ரூபாய் செலவில் 30,000 வீடுகள்



தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–45

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டது, 'ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு திட்டம்' என்று அறிவித்தீர்களே, அதில் எத்தனை கட்டியிருக்கிறீர்கள் என்று நான் கேட்கிறேன். இவர்கள் சொல்வது பூராவும் group houses கட்டியது. அதேபோல, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து, மத்திய அரசு கொடுத்த நிதியிலிருந்து கட்டுகிற வீடு, இதுதான் நீங்கள் சொல்லியிருக்கிற புள்ளிவிவரங்களே தவிர, நீங்கள் சொன்ன 'ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு' என்ற திட்டத்தின்கீழே கட்டப்பட்டிருக்கிற வீடுகள் எத்தனை? (குறுக்கீடுகள்) என்ன பேசுகிறீர்கள் அப்புறம்? பதில் சொல்ல முடியவில்லையென்றால் ஒழுங்காக இருக்க வேண்டும். அடுத்தது, பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் பாதுகாப்புத் திட்டமும் அந்த மாதிரிதான். உழவர் பாதுகாப்புத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பயன்படுத்துகின்ற வார்த்தைகளை நான் ஆட்சேபிக்கிறேன். பதில் சொன்னால் ஒழுங்காகச் சொல்ல வேண்டுமென்றார். நான் எப்பொழுதுமே ஒழுங்காகத்தான் பதில் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் ஒழுங்காகப் பேசக் கற்றுக்கொள்ள வேண்டும்.

**டாக்டர் க. பொன்முடி:** அதேபோல, உழவர் பாதுகாப்புத் திட்டம். இந்த உழவர் பாதுகாப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில் முதலிலே அமைப்புச் சாரா தொழிலாளர்கள் என்று பல்வேறு வாரியங்கள் உருவாக்கப்பட்டு, நான் முதலிலேயே கேட்கிறபோதே கேட்டேன், அந்த அமைப்புச் சாரா தொழிலாளர்கள், வாரியங்களுக்கெல்லாம் பல்வேறு வாரியங்கள் உருவாக்கப்பட்டு அவை நடைமுறையிலேயே இல்லை. அதேபோல, உழவர் பாதுகாப்புத் திட்டம் என்பதற்கு முன்பாகவே, விவசாயத் தொழிலாளர்களுக்காக ஒரு வாரியம் அமைக்கப்பட்டு அதிலே என்ன சலுகைகள் அப்போது அறிவிக்கப்பட்டதோ அந்த விவசாயத் தொழிலாளிகளுக்கு விபத்து ஏற்பட்டால் ஒரு இலட்சம் ரூபாய் நிதி, தற்காலிக விபத்து ஏற்பட்டால் 10 ஆயிரம் ரூபாய் போன்ற சலுகைகள் எல்லாம் கடந்த ஆட்சியிலே அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டவைகளைத்தான், மதுரையிலே...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர் அவர்கள் கடந்த ஆட்சியில் விவசாயத் தொழிலாளர்களுக்குப் பல்வேறு இடங்களில் சலுகைகள் அளிக்கப்பட்டதாகச் சொல்கிறார். எந்தெந்த மாவட்டங்களில், எந்தெந்த இடங்களில், எந்தெந்த இனங்களில், எவ்வாறு சலுகை அளிக்கப்பட்டது என்பதை அவர் அறிவிப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** தலைவர் அவர்களே, ஒரு பயனாளி, அவர்கள் கொண்டு வந்த அந்தத் திட்டத்தில் பயனடைந்தார் என்று காட்டினால் அதற்கு நான் பொறுப்பேற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றேன். இதற்கு நீங்கள் பொறுப்பேற்றுக்கொள்ளத் தயாரா? (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** ஒரு பயனாளி என்ன, ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்ட பயனாளிகளின் பெயரை நான் சொல்லிவிட்டால் அமைச்சர் பதவி விலகி விடுவாரா? இன்னும் நான்கு மாதங்கள்தான் இருக்கப் போகிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், அமைச்சர் பதில் சொல்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், பிறகு அவர் பேசுகிறார் அல்லவா? (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** நான் விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, அமைச்சர் பதில் சொல்லட்டும், பிறகு பேசுங்கள். உங்களுக்குப் பேச வாய்ப்பு இருக்கிறது, பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியில் கடைசி காலமான 2001–ல் அவசர அவசரமாக விவசாயத் தொழிலாளர்களுக்கு என்று ஒரு வாரியம் அமைக்கப்பட்டது என்று அரசாணை வெளியிடப்பட்டு, அந்த அரசாணை தெளிவு இல்லாத ஒரு அரசாணையாக அந்த நேரத்தில் இருந்தது. விவசாயிகளுக்குத் தரப்படுகின்ற சலுகையினை அவர்கள்



பெறுவதற்கு முதலில் அந்த வாரியத்தில் உறுப்பினராகச் சேருவதற்கு 100 ரூபாய் கட்ட வேண்டும். ஒவ்வொரு வருடமும் 10, 10 ரூபாய் அதைப் புதுப்பிப்பதற்குக் கட்ட வேண்டும். எந்தவொரு நயாபைசாகூட நிதியை அந்த நல வாரியத்திற்கு அரசின் சார்பாக ஒதுக்கவில்லை. அதற்கு மாறாக அந்த வாரியத்திற்கு நிதி சேர்ப்பதற்காகக் கரும்பு விவசாயிகள் ஆலைகளுக்குக் கரும்பு விற்கப்படுகின்றபோது அவர்கள் டன் ஒன்றுக்கு ஒரு ரூபாய் அதிகமாகக் கட்ட வேண்டுமென்றும், சர்க்கரை ஆலைகள் சர்க்கரையை விற்கும்போது, சர்க்கரை ஆலைகளிலிருந்து டன் ஒன்றுக்கு ஒரு ரூபாய் இந்த நல வாரியத்திற்குக் கட்ட வேண்டுமென்றும் அந்த அரசாணையில் இருந்தது. ஆனால், அதை ஆலை அதிபர்களும்தர மறுத்தார்கள். விவசாயிகளும் தர மறுத்தார்கள். அதுதான் அதில் உண்மை. மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி சொன்னது போல், அந்தத் திட்டம் குறைமாதக் குழந்தையாகத்தான் அவர்களாலே பெற முடிந்ததேயொழிய (மேசையைத் தட்டும் ஒலி) முழுமாதக் குழந்தையாக அவர்கள் அதைப் பெற்றெடுக்கவில்லை. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்ற இந்த உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற உன்னதமான திட்டம் இன்றைக்கு இந்தியா மட்டுமல்ல, உலக நாடுகளில் எங்குமே அறிமுகப்படுத்தப்படாத ஒரு மிகப் பெரிய வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டமாக இன்றைக்கு விளங்கிக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு கோடியே 37 இலட்சம் பேர்களுக்கு விவசாயத் தொழிலாளிகளுக்கும், சிறு குறு விவசாயிகளுக்குமாகச் சேர்த்து ஒரு கோடியே 37 இலட்சம் விவசாயப் பெருமக்களுக்கு, சிறு குறு விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் பயனளிக்கின்ற உன்னதத் திட்டமாக இவை இருக்கின்றன. 33 வகையான உதவிகள் இதில் அடங்கியிருக்கின்றன. இவர்கள் சொன்னதுபோல் அந்த நல வாரியம் என்பது நிறைவு பெறாத, முற்றுப் பெறாத, எப்போதும் அந்த 5 ஆண்டு காலம் வெற்றுத் திட்டங்களாக அறிவித்த திட்டங்களில் இந்த நல வாரியமும் ஒன்று என்பதை நான் இங்கே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11–50*

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்னொன்றையும் உறுப்பினருக்குக் கூடுதலாகத் தெரிவிக்க விரும்புவதெல்லாம், இன்றைக்கு உலகமே வியக்கத்தக்க அளவுக்கு செயல்பட்டு வருகின்ற உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்

மூலமாக ஏராளமானோர், சம்பந்தப்பட்டவர்கள் பயனடைந்து வருகின்ற காரணத்தாலே பொறுக்க முடியாமல் இருக்கின்ற அவர்களுக்கு நினைவுபடுத்துவதெல்லாம், இதுநாள்வரையில், கடந்த வாரம்வரையில் நிதியுதவி கோரி உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் மூலமாக வரப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 98,730 என்பதையும், அதன்மூலம் நிதியுதவி பெற்ற விண்ணப்பங்கள் 77,774 என்பதையும், அதற்காக வழங்கப்பட்ட நிவாரணத் தொகை 22,46,56,300 ரூபாய் என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் 20,956 குறித்து அரசு நிலையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையும், அந்த விண்ணப்பங்களுக்கு உரிய தொகை 9,28,46,600 ரூபாய் என்பதையும், விபத்தால் இறந்தவர்கள் மற்றும் உடல் ஊனமுற்றவர்கள் 95 பேருக்கு 94,10,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்பதையும், இயற்கை மரணம் அடைந்தவர்கள் எண்ணிக்கை 3,112 பேருக்கு 3,11,20,000 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும், இறந்தவர்களின் ஈமச் சடங்கிற்காக 2,413 பேருக்காக 60,32,500 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும், திருமண உதவித் தொகைக்காகப் பெறப்பெற்ற 882 விண்ணப்பங்களிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய திருக்கரங்களாலே இடப்பட்ட ஆணையின் பேரில் வழங்கப்பட்ட நிதியுதவி 32,24,000 ரூபாய் என்பதையும், திருமண உதவி அளிக்கப்பட்ட உறுப்பினர்களைச் சார்ந்தவர்கள் 18,735 பேருக்காக 7,56,79,000 வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும், முதியோர் ஓய்வூதியத் தொகைக்காக 3,754 பேருக்காக 7,09,800 ரூபாய் அம்மா அவர்களால் வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும், பிரசவம் மற்றும் கருக்கலைப்புக்காக 48,438 பேருக்காக மாண்புமிகு அம்மா அவர்களாலே 9,68,76,000 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும், கல்விக்காக மாண்புமிகு அம்மா அவர்களால் அனுமதிக்கப்பட்ட 1,345 பேருக்கு 16,05,000 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும், ஒட்டுமொத்தமாக 77,774 பேர் பயனடைந்து இருப்பதை பொறுக்க முடியாமல் இன்றைக்கு இந்தத் திட்டத்தை விமர்சிக்கிறார்கள் என்பதையும் நான் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதற்காக வழங்கப்பட்ட நிதியுதவி 22,46,56,300 ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த குறுகிய காலத்திலே இவ்வளவு நிவாரணத் தொகைபெற்று இவ்வளவு பேர் பயனடைந்தவர்கள். இன்னும் சொல்லப்போனால் 9,28,46,600—ஐயும் இந்த 22,46,56,300—உடன் கூட்டிப் பார்த்தால் ஏறக்குறைய 30 கோடி ரூபாய் அளவுக்கு இந்த குறுகிய காலத்திலே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) ஆணைக்கிணங்க நிவாரண



உதவி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொண்டு, இவ்வளவு நிவாரணம் பெற்றிருக்கிற காரணத்தாலே, இந்த உழவர் பாதுகாப்புத் திட்டம் என்கிற திட்டத்தை உலகமே வியக்கத்தக்க அளவுக்கு அம்மா அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிற காரணத்தாலே இதைப் பொறுக்க முடியாமல் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் அதனுடைய கூட்டணிக் கட்சிகளுக்கு ஜன்னி ஜுரம் கண்டிருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உழவர் பாதுகாப்புத் திட்டத்தை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்றைக்கு அறிவித்தார்களோ அன்றைக்கே இந்த 7 கட்சி கூட்டணிக்கும் மரண அடி தமிழக மக்களாலே அடிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. பொன்முடி . . .

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** இப்போதெல்லாம் சிறு மற்றும் குறு விவசாயிகள் 51 இலட்சம் பேர், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் 86 இலட்சம் பேர், ஆக ஒட்டுமொத்தமாக ஒரு கோடியே 37 இலட்சம் குடும்பங்கள் பயனடைகின்ற வகையிலே உலகமே வியக்கத்தக்க அளவுக்கு, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவு செலவானாலும் இந்தத் திட்டத்திற்காக டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் திட்டத்தைக் கண்டு நீங்கள் நடுங்கிக் கொண்டிருக்கிறீர்கள். கிராமப்புறங்களுக்குச் செல்வதாக இருந்தால்கூட இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகின்றபோது, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தியதற்குப் பிறகு நம் கிராமத்திற்குச் செல்ல முடியாது என்ற நிலை உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) தொழிலாளர் நல வாரியம் என்று அறிவித்து விவசாயிகளை ஏமாற்றினீர்களே, அதற்கு 100 ரூபாய் கட்டணம் என்று கேட்டீர்களே, அந்தக் கட்டணத்தைக்கூட திருப்பிக் கொடுக்க முடியாது என்றுதான் அந்த அரசாணையிலே குறிப்பிட்டிருக்கிறீர்களே, விவசாயிகளைப் பற்றியோ, விவசாயக் கூலித் தொழிலாளர்களைப் பற்றியோ பேசுவதற்கு உங்களுக்கு தார்மீக உரிமை கிடையாது என்பதை இந்த மன்றத்தின் மூலமாக பதிய வைக்கின்றேன். (குறுக்கீடு)



V2/4, 31/P04.
P06, 88, 2
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227004
சென்னை-600 008

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, நல வாரியம் என்று குறிப்பிட்டீர்கள். அந்த நல வாரியத்தைப் பற்றிப் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அது எப்படிப்பட்ட நிலையிலே இயங்கியது என்று குறிப்பிட்டார்கள். வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் உழவர் பாதுகாப்புத் திட்டத்தைப் பற்றித் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** சவால் ஒன்று விட்டாரே, அந்த அமைச்சர் என்ன சொன்னார், சரி, பரவாயில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, இன்னும் ஒரு 5 மணித் துளிகள்.

**டாக்டர் க. பொன்முடி:** அது என்னங்க, 45 நிமிஷம் பொதுக் கூட்டத்திலே பேசுவது மாதிரி மந்திரி பேசுகிறார். அவரை விடுகிறீர்கள். என்னைப்போய் 10 நிமிடங்களிலே பேசுங்கள் என்று சொன்னால் நான் என்ன பேசுவது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, குறுக்கீடுகள் எல்லாம் சேர்த்துத்தான், குறுக்கீடுகள். எல்லாம் சேர்த்துத்தான்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பேசுவதற்கு ஏராளமான நேரம் இருக்கின்றது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி அவர்களே, ஜி.கே. மணி அவர்களுக்கும் குறுக்கீட்டைச் சேர்த்துத்தான் கணக்குப் போட்டேன், எஸ்.ஆர்.பி. அவர்களுக்கும் அப்படித்தான், தங்களுக்கும் அப்படித்தான்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** எங்களுக்கு மாலைநேரப் பொதுக் கூட்டத்திலே பேசுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் நேரம் கொடுத்திருக்கிறார்கள். . . .

**டாக்டர் க. பொன்முடி:** கேள்வி கேட்டால் பதில் சொல்ல வேண்டும். சவால் என்பது மாதிரி . . . . (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையைப் பொறுத்தவரையில் 2 நாட்களுக்கு முன்பு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோதுகூட கல்லூரி ஆசிரியர் பதவிகள் 3,906 பதவிகள் காலியாக இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். குறிப்பாக, ஆசிரியர் பணி நியமனத்தின்போதுகூட நியமிக்கப்படுகிற ஆசிரியர்கள் முழு ஊதியத்தோடு நியமிக்கப்படுவதில்லை.



ஆசிரியர்களிடையே இருக்கிற பெரிய மனக்குறை என்ன என்று சொன்னால், அவர்களுக்குத் தொகுப்பூதியமாக வழங்கப்படுகிறது. கல்லூரி ஆசிரியர்களுக்கும் அப்படித்தான். University Grants Commission பல்கலைக்கழக மானியக் குழு பரிந்துரை செய்து ஆசிரியர்களுக்கு, கல்லூரி ஆசிரியர்களுக்குத் தேர்வு நடத்தி அவர்களுக்கென்று ஊதிய உயர்வு வழங்கப்பட்ட காலம் உண்டு. கலைஞர்தான் தமிழ்நாட்டிலே அதை அமல்படுத்தினார். ஆனால், இன்று கல்லூரிகளிலே பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் 6,000 ரூபாய் சம்பளம். அதே நேரத்தில் யூ.ஜி.சி.-யிலே செலெக்ஷன் ஆகியிருக்கிறவர்களுடைய சம்பளம் 25,000 ரூபாய், 20,000 ரூபாய் இருக்கிறது. இந்த 20,000 ரூபாயில் வேலை செய்கிறவர் வேலையும் ஒன்றுதான், 6,000 ரூபாய்க்கு வேலை செய்பவர்களின் வேலையும் ஒன்றுதான். அதனால் அங்கே இருக்கிறவர்களிடம் சோர்வு இருக்கிறதே தவிர, பாடம் நடத்துகின்ற உணர்வுகள் இல்லாத ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கிறது.

அதேபோல்தான், ஆசிரியர் பணியிடங்களிலும்கூட, நீங்கள் நியமித்திருக்கிற ஆசிரியர்களும் முழுமையான சம்பளத்திலே நியமிக்கப்படுகிற ஆசிரியர்கள் இல்லை. ஒரு consolidated pay கொடுத்துத்தான் அவர்களை நீங்கள் நியமித்திருக்கிறீர்கள். அதனாலே கல்வித் துறையிலேயே இருக்கிற ஆசிரியர்களிடம் மிகப்பெரிய மனக் குறை இருக்கிறது. அதுவும் 3,906 பதவிகள் இன்னும் 4 வருடங்களாகக் காலியாக இருந்தால் கல்லூரி ஆசிரியர்களுடைய கல்வித் தரம் எப்படி உயரும்? அதுவும், நீங்கள் தேர்தல் அறிக்கையிலேயே சொல்லியிருந்தீர்கள். ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர் என்று சொல்லியிருந்தீர்கள். அது நிறைவேற்றப்பட்டிருக்கிறதா? ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலைமை இன்னும் உருவாக்கப்படவில்லை. ஆனால், ஆசிரியர்கள் நியமனம் அதிகமாக இல்லாத காரணத்தினால், நியமிக்கப்பட்ட ஆசிரியர்களும் தொகுப்பூதியங்களிலேயே நியமிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் இன்று கல்வி நிலையங்கள் எல்லாம் மிக மோசமான சூழ்நிலையிலேயே இருப்பதைக் காண முடிகிறது. இது 4½ ஆண்டுகளிலே நடைபெற்றிருக்கிற நிகழ்வுகள்.

இந்த 4 ஆண்டுகால ஆட்சியிலே நீங்கள் உங்களுடைய ஆளுநர் உரையிலேயே குறிப்பிட்டிருக்கிறீர்கள். குறிப்பாக, எந்தவொரு பணியாக இருந்தாலும், வெளிப்படையான, திறந்த டெண்டர் விட்டுத்தான் செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

அதுபோலத்தான், **

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. பொன்முடி, அது நீதிமன்றத்திலே இருக்கிறது. ஏற்கெனவே, அதை எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசும்போதும் சொல்லிவிட்டேன். நான், எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகிறபோதே தெரிவித்தேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து உங்களிடம் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, தனசேகரன் வழக்கு இருக்கிறது, அதைப்பற்றி முதலமைச்சர் படிக்கிறார். கரூர் வழக்கு இருக்கிறது, அதைப் பற்றி முதலமைச்சர் படிக்கிறார். நான் வழக்குக்கு உள்ளே போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, இதிலே,...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் வழக்கு, நீதிமன்றத்தில் இல்லை. அதனால்தான் அதைப்பற்றி இங்கே குறிப்பிட்டேன். அது நீதிமன்றத்தில் இல்லை. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்குப் படித்தது, அன்றைக்கு தனசேகரனைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டது, தனசேகரன் எந்தவகையிலே குற்றம் செய்தார் என்பது வழக்கு மன்றத்திலே இருக்கிறது. அவர்கள் வழக்கிற்குள்ளே போகவில்லை. *(குறுக்கீடுகள்)* அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத்தான் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே, நீங்கள்....

**டாக்டர் க. பொன்முடி:** நானும் வழக்கிற்குள்ளே போகவில்லை. பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து நானும் வழக்கிற்குள் செல்லவில்லை. வழக்கிற்குள்ளே போகவில்லை. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** தொடர்பாக தாங்கள் பேசியது அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. ஏற்கெனவே எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசியதையும் நீக்கிவிட்டேன் நான். மறுபடியும் அதையே ஏன் பேசுகிறீர்கள்?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**டாக்டர் க. பொன்முடி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) தாங்கள் பேசியது, நீதிமன்றத்திலே இருக்கிற ஒரு பொருள்பற்றி சட்டமன்றத்திலே விவாதிக்கக் கூடாது என்பது சட்டமன்றத்தினுடைய விதிமுறை. அதை ஒட்டித்தான் ...

**டாக்டர் க. பொன்முடி:** ** *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசினார். அப்போதே .. *(குறுக்கீடுகள்)*

*நண்பகல் 12-00*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பொன்முடி அவர்கள் எங்களைப் பார்த்து, சிறுசேரி என்றாலே ஏன் பயப்படுகிறீர்கள் என்று கேட்கிறார். சிறுசேரி என்றாலே நாங்கள் பயப்படவில்லை. நாங்கள் எதற்குமே பயப்படுவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) பொதுவாக, ஒரு வழக்கு நீதிமன்றத்தில் இருக்கும்போது, அதைப்பற்றி நீதிமன்றத்திற்கு வெளியே பேசக் கூடாது. அதனால்தான் நாங்கள் அதைப்பற்றி இங்கே பேசக்கூடாது என்கிறோம். ஆனால், தி.மு.க.வின் சார்பில் இந்த வழக்கை நீதிமன்றத்தில் தொடுத்துவிட்டு, அதன் பின்னர் தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி அவர்களே, திரும்பத் திரும்ப இந்த சிறுசேரி பிரச்சினையைக் குறிப்பிட்டு, எங்கள்மீது பழி போட்டு, அவதூறான பல அறிக்கைகளைக் கொடுத்துக்கொண்டே இருக்கிறார். பல பேட்டிகளைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். திரும்பத் திரும்ப இதற்கு ஜெயலலிதா ஏன் பதில் சொல்லவில்லை. மௌனம் சம்மதத்திற்கு அடையாளம் என்று திரும்பத் திரும்ப அவர் சொல்லியிருக்கிறார். ஆகவே, நீதிமன்றத்தில் இந்த வழக்கு சம்பந்தப்பட்ட hearing வந்தபோது, Advocate General அவர்கள் இதையே நீதிமன்றத்தில் குறிப்பிட்டு — வழக்கு நீதிமன்றத்திற்கு வந்த பின்னர்கூட, இதைப்பற்றி பல அவதூறான அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார். திரும்பத் திரும்ப இதைப்பற்றி அவதூறாகப் பேசிக் கொண்டிருக்கிறார். அரசாங்கம், குறிப்பாக முதலமைச்சர் ஏன் இதற்குப் பதில் சொல்லவில்லை. பதில் சொல்ல முடியவில்லையா என்று சவால் விடுகிறார். ஆகவே, இதற்கு நாங்களும் பதில் சொல்லலாமா என்பது பற்றி நீதிமன்றத்தின் அனுமதி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வேண்டப்படுகிறது என்று Advocate General அவர்கள் குறிப்பிட்டார்கள். இதற்கு அன்றைய தினம், நீதிபதி அவர்கள், இதைப்பற்றி பின்னர் தெரிவிக்கப்படும் என்றார். ஆகவே, நாங்கள் இதற்குப் பதில் சொல்லலாம் என்ற அனுமதியைக் கோரியும், நீதிமன்றம் அதைப்பற்றி எதுவும் சொல்லாததால், அந்த அனுமதி வழங்காததால், நீதிமன்றத்தை மதித்து, அதற்குக் கட்டுப்பட்டு, நாங்கள் அதைப்பற்றிப் பேசாமல் இருக்கிறோமே தவிர, நாங்கள் பயப்படவும் இல்லை, எங்களால் பதில் சொல்லவும் முடியும். சொல்ல முடியாமல் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

* **திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுசேரி நிலம் விவகாரமாக தி.மு.க. தலைவர் கருணாநிதி வழக்குத் தொடுத்திருக்கிறார் என்று சொன்னார். அவர் வழக்குத் தொடரவில்லை. நான்தான் தொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் நான் சொல்வதை கவனமாகக் கேட்க வேண்டும். நான் தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் தொடுத்தார் என்று சொல்லவில்லை. திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள்தான் தொடுத்தார். ஆனால், இதற்கு முன்பு நான் பேசுகின்றபோது, தி.மு.கவின் சார்பில் தொடுக்கப்பட்ட வழக்கு என்றுதான் சொன்னேன். தி.மு.க.வின் சார்பில் தி.மு.க. தொடுத்த வழக்கு. அந்தத் தி.மு.க.வின் தலைவர் திரு. கருணாநிதி என்றுதான் சொன்னேனே தவிர, திரு. ஆற்காடு வீராசாமி இதுபோன்ற வழக்குகளைத் தொடுப்பார் என்பது நாடறிந்த விஷயம், ஊரறிந்த விஷயம், அவர்தான் தொடுத்தார் என்று நன்றாகவே தெரியும். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம். பொதுவாக தாங்கள் ஒரு தீர்ப்புச் சொன்னீர்கள் இப்போது. ஒரு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு இருந்தால் அதைப் பேசவே கூடாது என்பதல்ல மரபு. அந்த merit-க்குள் போகக் கூடாது என்பதுதான். (குறுக்கீடு) ஏற்கெனவே நீங்கள் சொன்னீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, நீங்கள் சட்டமன்ற விதிக்கு எழுதுகிற பொழிப்புரை எனக்குப் புரிகிறது. (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** எப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் என்று சொன்னாரே தவிர, வழக்குக்குள்ளே போகவில்லை என்று சொன்னீர்கள். Correct அதையேதான், இவரும் உள்ளே போகாமல், எப்படிப்பட்ட வழக்கு என்று சொல்வதற்கு அனுமதிக்க வேண்டுகிறார்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, முடியுங்கள். அவருடைய நேரம் முடிந்து விட்டது. 12 மணியோடு முடிந்துவிட்டது. ஒரு நிமிடத்தில் முடியுங்கள். பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பேச்சினுடைய நிறைவுக்கு வாருங்கள். (குறுக்கீடு) தலைப்புச் செய்திக்கு வாருங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** என்னதான் அப்புறம் பேசுவது? நீங்கள் எப்போதும் பேசவும் விடுகிறீர்கள். கருத்துகளைச் சொல்லும்போது சொல்லவும் விடமாட்டேன் என்கிறீர்கள். என்னுடைய பேச்சிலே நிறைய பேர் அவர்களே எவ்வளவு நேரம் பேசினார்கள் என்பது உங்களுக்கே தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு நேரம் நீங்கள்தானே பேசினீர்கள். (குறுக்கீடு) பொன்முடிதானே பேசினீர்கள். (குறுக்கீடு) யார் பின்னணியா கொடுத்தார்கள்? நீங்கள்தான் பேசினீர்கள். பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, நடுவிலே இவ்வளவு பேர் குறுக்கிடும்போது நான் எப்படிப் பேசாமல் இருக்க முடியும்? என்னுடைய நிறைவுரையாக நான் சொல்ல விரும்புவது, 3 சட்டமன்ற இடைத் தேர்தல் நடைபெற்றது. அதற்குப் பிறகு நாடாளுமன்றத் தேர்தலிலே இந்தக் கூட்டணி அமோக வெற்றி பெற்றது. அந்த இடைத் தேர்தல்கள் மூன்றிலே நீங்கள்தான் வெற்றி பெற்றீர்கள். அதேபோல இப்பொழுது நடைபெற்ற இரண்டு இடைத் தேர்தல்களிலும் நீங்கள் வெற்றி பெற்றிருக்கிறீர்கள். நடைபெறவிருக்கிற பொதுத் தேர்தலில், இடைத் தேர்தலிலே வெற்றிபெறுகிற வித்தைகள் எல்லாம் உங்களுக்குத் தெரிந்திருந்தாலும், பொதுத் தேர்தலிலே அதை மக்கள் மாற்றிக் காட்டுவார்கள்.

அதுமட்டுமல்ல, இங்கே "வந்தவரும், போனவரும் ஆட்டம் போடுறார். சேர்ந்து வாழ்ந்த எங்கள் வீட்டில் தோட்டம் போடுறார். சொந்த புத்தி மயங்கி விட்டால் கூடு போடுறார். தனக்குச் சொந்தமில்லா இடத்தைச் சேர்த்து கோடு போடுறார்" என்று கண்ணதாசன் அவர்கள் எதை நினைத்து, அவர் எப்பொழுதும் பேசுவதைப்போல ஒரு பாடலையும் பாடியிருக்கிறார். அவற்றை எல்லாம் உணர்ந்து, வருகிற இந்த ஆளுநர் உரையைப் பொறுத்த வரையில், இது முழுமையாக மத்திய அரசின்மீது குறை சொல்ல வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட ஒரு ஆளுநர்

உரையாக இருக்கிறதே தவிர, குறிப்பாக 4 மாதத்தில் செய்ய இருக்கிற திட்டங்களைப் பற்றியும் சொல்லவில்லை. அடுத்த திட்டங்களைப் பற்றியும் சொல்லவில்லை என்பதை மட்டும் குறிப்பிட்டு அமர்கின்றேன்.

*பிற்பகல் 12–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

* **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர், தமிழகத்தின் பன்னிரண்டாவது சட்டமன்றப் பேரவையை நிறைவு செய்கின்ற கூட்டத் தொடர் ஆகும். அதேபோல் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள், 2001 ஆம் ஆண்டு எனது அரசு ஆட்சிப் பொறுப்பேற்று நடைபெறுகின்ற சட்டமன்றத்தின் நிறைவாக ஆற்றி உள்ள உரையும் இதுவே. இம்மியும் மாறாத அன்பும், பாசமும், என்றென்றும் என்மீது வைத்துள்ள தமிழக மக்கள், என்னகத்தே பெருத்த நம்பிக்கை வைத்து, 2001 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பை அளித்தார்கள். மக்களின் வார்த்தையே மகேசனின் ஆணை என்பதால், மக்கள் வைத்த நம்பிக்கையை ஈடேற்றி, அவர்களது எதிர்பார்ப்புகளை நிறைவு செய்து, இன்னும் சொல்லப்போனால் அவர்களது எதிர்பார்ப்புகளையும் மிஞ்சுகின்ற வகையில், எனது அரசு செயலாற்றி உள்ளது என்பதை இந்தப் பதில் உரையின் தொடக்கத்திலேயே மிக்க பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முந்தைய தி.மு.க. ஆட்சி ஏற்படுத்திய கடும் நிதி நெருக்கடியை நாம் திறம்பட வெற்றி கொண்டோம். தமிழகம் இதுவரை கண்டிராத சுனாமி என்னும் இயற்கை இன்னலை திறமையுடன் எதிர்கொண்டு மக்களைக் காப்பாற்றினோம். வரலாறு காணாத வறட்சியால், தொடர்ந்து பெய்த கன மழையால் ஏற்பட்ட இடர்பாடுகளைச் சாதுரியமாகச் சமாளித்து மக்களைக் காத்தோம். கொஞ்சமும் துவண்டுவிடாமல், ஒரு சிங்கத்தின் துணிவோடும், தைரியத்தோடும் இத்தனையும் செய்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதே நேரத்தில், மக்களுக்கென புதிய புதிய திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தினோம். தமிழகத்தை வளம் மிக்க மாநிலமாக, மக்களுக்கு நலம் சேர்க்கும் மாநிலமாக உருவாக்கினோம். சிங்கத்தைப் பற்றி நான் குறிப்பிட்டேன். துணிவின் உதாரணமாக, தைரியத்தின் எடுத்துக்காட்டாக, அச்சமின்மையின் அடையாளமாகச் சிங்கம் உருவகப்படுத்தப்படுகிறது. காட்டு வழியே தலை தூக்கி, நெஞ்சு நிமிர்த்தி நடந்து செல்கின்ற சிங்கம், சிறிது தூரம் சென்றதும் தனது பிடரியைச் சிலிர்த்து, தான் நடந்து வந்த வழியை, தான் கடந்து வந்த பாதையை



திரும்பிப் பார்க்கும். இதைத்தான் அரிமா நோக்கு என்று கூறுவார்கள். அத்தகைய அரிமா நோக்குடன், கடந்த 5 ஆண்டுகளில் நாங்கள் கடந்து வந்த பாதையை, தேர்ந்தெடுத்த மக்களுக்கு நாங்கள் ஆற்றிய சாதனைகளை, செயல்படுத்திய திட்டங்களை மீள் பார்வை பார்க்கின்ற வாய்ப்பாக இந்தக் கூட்டத் தொடர் அமைந்திருக்கிறது.

எனது அரசின் செயல்பாட்டை முதலில் விளக்கினேன். இப்போது எதிர்க் கட்சிகளின் செயல்பாடு எப்படி இருக்கிறது என்பதை நோக்க விழைகிறேன். இந்தப் பன்னிரண்டாம் சட்டப் பேரவை அமைக்கப்பட்டு, எனது அரசு 2001 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்தே, ஆளுநர் யாராக இருந்தபோதிலும் பேரவையில் அவர் தன்னுடைய உரையை வாசிக்கத் தொடங்கியதும், ஏதேனும் ஒரு காரணத்தைக் கூறி அவையிலிருந்து வெளிநடப்புச் செய்வதை எதிர்க் கட்சியினர் ஒரு வாடிக்கையாகக் கொண்டிருந்தார்கள். அவைக்கு வந்து ஆளுநர் தன்னுடைய உரையை வாசிக்கத் தொடங்குவதற்கு முன்னர் அல்லது உரையைத் தொடங்கிய சிறிது நேரத்தில் அவர்கள் அவையை விட்டு வெளியேறி விடுவார்கள். இதை அவர்கள் வாடிக்கையாக ஒவ்வொரு முறையும் செய்து வந்தார்கள் அல்லது ஆளுநர் உரையையே புறக்கணித்தார்கள்.

ஆட்சி அமைக்கின்ற நேரத்திலே செல்வி பாத்திமா பீவி அவர்கள் மேதகு ஆளுநராக இருந்தார், அதனை அடுத்து திரு. ராமமோகன் ராவ் அவர்கள் மேதகு ஆளுநராக இருந்தார், அதன் பின் இப்போது திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் மேதகு ஆளுநராகப் பதவி வகித்து வருகிறார். ஆளுநர்கள் மாறி இருக்கிறார்கள். ஆனால், எதிர்க் கட்சிகளின் செயல்பாடு மாறவில்லை. ஆளுநர் தனது உரையை நிகழ்த்தி முடிக்கும்வரை அவையில் இருக்க வேண்டும் என்ற பொறுமையோ, கண்ணியமோ அவர்களுக்கு ஒரு போதும் இருந்தது இல்லை. இந்த முறை, ஆளுநர் உரையை முற்றிலுமாகப் புறக்கணித்து உள்ளார்கள். இதன்மூலம், அவர்கள் ஆளுநரை மட்டும் அவமதிக்கவில்லை, ஜனநாயக நடைமுறையையே அவமதித்து, அலட்சியப்படுத்தி உள்ளார்கள். எதிர்க் கட்சியினர் அனைவரும் ஆளுநர் உரையின்போது சட்டமன்றத்தில் அமர்ந்திருந்தது 2005 ஆம் ஆண்டில் மட்டுந்தான். தற்போதைய ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் இரண்டாம் முறையாக ஆளுநராக பதவியேற்ற பின் நிகழ்த்திய முதல் உரை என்பதால் சட்டமன்றத்தில் அமர்ந்திருந்தார்கள் போலும்! சென்ற ஆண்டும் இவர்கள் ஆளுநர் உரையைப் புறக்கணித்திருந்தாலோ அல்லது வெளிநடப்பு

செய்திருந்தாலோ அனைத்து ஆளுநர் உரைகளையும் புறக்கணித்த கின்னஸ் சாதனையைப் படைத்திருப்பார்கள்! (மேசையைத் தட்டும் ஒலி) பாவம் விட்டுவிட்டார்கள்!

*பிற்பகல் 12–10*

எதிர்க்கட்சிகள், இப்படி ஆளுநர் உரையைப் புறக்கணித்தது மட்டுமின்றி தங்களை இந்தச் சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பிய வாக்காளர்களை முற்றிலுமாக அலட்சியப்படுத்தி, அவர்களை அவமதித்து, அவமரியாதை செய்யும் வகையில், வெளிநடப்பு செய்வது ஒன்றையே தங்களது கடமையாகச் செய்துள்ளனர். மக்கள் இவர்களை எதற்காகத் தேர்ந்தெடுத்து அனுப்பினார்கள்? சட்டமன்றத்திலே தங்களது தேவைகளை எடுத்துக்கூற வேண்டும். தங்கள் பகுதிக்கு வேண்டிய வசதிகளைச் சட்டமன்றத்திலே விளக்கமாக எடுத்துரைத்து கோரிப் பெற வேண்டும் என்பதற்காக மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். ஆனால், அவர்கள் இங்கே வந்து செய்தது எல்லாம் வெளிநடப்பு ஒன்றுதான். இன்ன காரணத்திற்காக வெளிநடப்பு செய்ய வேண்டும் என்று கிடையாது. எதற்கெடுத்தாலும் வெளிநடப்பு, வெளிநடப்பு, வெளிநடப்புதான். ஆளுநர் உரையில் வெளிநடப்பு; ஆளுநர் உரை மீதான விவாதங்களுக்கு முதலமைச்சர் பதில் அளித்துப் பேசும்போது வெளிநடப்பு; ஏதோ அதிசயமாக இன்றைக்கு அமர்ந்திருக்கிறார்கள். ஆனால், இது எத்தனைக் காலம் நீடிக்கும் என்று தெரியவில்லை. நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யும்போது வெளிநடப்பு; நிதிநிலை அறிக்கை மீதான விவாதங்களுக்குப் பதில் அளித்துப் பேசும்போது வெளிநடப்பு; மானியக் கோரிக்கைகள் மீதான விவாதங்களின்போது வெளிநடப்பு; Zero Hour–இலும் வெளிநடப்பு. மொத்தத்தில் அவர்களது செயல்பாடு மக்களுக்கு Zero–ஆக அமைந்துவிட்டது வேதனை அளிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு வெளிநடப்பு செய்வதன்மூலம் அவர்கள் ஜனநாயக நடைமுறையையே அவமானப்படுத்துகிறார்கள். தேர்ந்தெடுத்த மக்களை அவமதித்து வெளிநடப்பு செய்யும் இவர்களை மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். தங்கள் மனதில் பதித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். சரியான வேளையில், சரியான பாடத்தைக் கற்பிக்க, மக்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றத்தை நீங்கள் புறக்கணித்தீர்கள்! உங்களைப் புறக்கணிக்க மக்கள் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



இந்த ஆளுநர் உரையைப் பற்றி, எதிர்க் கட்சியினர் செய்துள்ள விமர்சனங்களில் காணப்படுகின்ற முரண்பாடுகள் வேடிக்கையாக உள்ளது. ஒரே கூடாரத்தில் இருக்கிற இந்தக் கட்சிகளின் விமர்சனங்களில் எத்தனை முரண்பாடுகள்! ஒருவர், 'எந்தவித அறிவிப்பும் இடம் பெறவில்லை' என்கிறார். இன்னொருவர், 'இலவசங்களும், மானியங்களும் எல்லை மீறிச் சென்றுவிட்டன' என்கிறார். 'ஏதும் இல்லை' என்று குறைபடுகிறவரும், 'எல்லாம் இலவசங்களாக உள்ளன' என்று வருத்தப்படுகிறவரும் ஒன்றாய் இருந்து எதிர் முகாமில் முகம் காட்டுவது வேடிக்கை அல்லவா! நாம் வழங்குகிறோம்; மக்கள் பெறுகிறார்கள். நடுவில் எல்லைக்கோடு வகுப்பதற்கும், அளவை நிர்ணயிப்பதற்கும் இவர்கள் யார்? (மேசையைத் தட்டும் ஒலி)

அத்தியாவசியப் பொருட்களின் விலையை அடிக்கடி ஏற்றுவதற்காகவே அவதாரம் எடுத்திருக்கிற இவர்கள் நடத்தும் டில்லி துரைத்தனம் போல, தமிழ்நாடு அரசும் நடந்துகொள்ளவில்லையே என்ற கவலை போலும்! (மேசையைத் தட்டும் ஒலி)

மத்திய அரசில் 1999 ஆம் ஆண்டு முதல் தி.மு.க. அங்கம் வகித்து வருகிறது. 2004 ஆம் ஆண்டுக்கு முன்பு, பி.ஜே.பி. தலைமையிலான அரசில் அங்கம் வகித்த தி.மு.க. தற்போதுள்ள காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசிலும் அங்கம் வகிப்பதில் குறியாக உள்ளது. மத்திய அரசின் ஆட்சிப் பொறுப்பில் தி.மு.க. பங்கேற்ற பின், டீசல் விலை 22 முறை உயர்த்தப்பட்டுள்ளது. இதில், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின் போது 5 முறை உயர்த்தப்பட்ட விலை உயர்வுதான் மிகக் கடுமையான விலை உயர்வு ஆகும். 1999 ஆம் ஆண்டில் லிட்டர் ஒன்றுக்கு 10 ரூபாய் 91 பைசா என்றிருந்த டீசல் விலை தற்போது, 33 ரூபாய் 72 பைசாவாக அதிகரித்துள்ளது. அதாவது, டீசலின் விலை மூன்று மடங்குக்கு மேல் உயர்ந்துள்ளது. அதேபோன்று, பெட்ரோல் விலையும் லிட்டர் ஒன்றுக்கு 27.99 ரூபாயில் இருந்து 47.49 ரூபாயாக அதிகரித்துள்ளது. அதாவது பெட்ரோலில் 69.7 சதவீதம் உயர்வு ஏற்பட்டுள்ளது. சமையல் எரிவாயுவின் விலை சிலிண்டர் ஒன்றுக்கு 161.68 ரூபாய் என்ற விலையில் இருந்து 288.16 ரூபாய் என உயர்ந்துள்ளது. அதாவது, 78.26 சதவீத உயர்வு. இதுதான் மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் உள்ள தி.மு.க.வின் சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–15

அரசாங்கம் நடத்துவதற்குப் பதிலாக அறக்கட்டளை அமைப்பாக மாற்றிவிட்டார்கள் என்று அங்கலாய்க்கிறார்களே, அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். ஏழையெளிய மக்களின் அறக்கட்டளைதான் இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய தத்துவப் பாதையும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கற்றுத் தந்திருக்கிற பாடமும் அதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மகத்தான தலைவர்களின் வழிதான், எங்கள் வழி. (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் விரோதச் சிந்தனையாளர்களுக்கு இதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். ஜனநாயகத்தின் இறுதி எஜமானர்கள் மக்களே என்பதைப் புரிந்து கொள்ளாதவர்கள், எங்கள் அரசை அறக்கட்டளை அரசு என்று அழைப்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். தங்களை அறியாமலே தமிழ்நாடு அரசுக்குப் பாராட்டு வழங்கிவிட்ட அவர்களுக்கு தனிப்பட்ட முறையிலும், அரசின் சார்பிலும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதற்கு முன்பு பேசிய திரு. எஸ்.ஆர்.பி. அவர்களும், திரு. பொன்முடி அவர்களும் புதிய அறிவிப்புகள், புதிய திட்டங்கள் பற்றி ஆளுநர் உரையில் எதுவும் குறிப்பிடவில்லையே என்று இங்கே கேட்டார்கள். தேர்தல் நடைபெறுகின்ற ஒரு ஆண்டில் அதாவது Election Year எனக் கூறப்படும் தேர்தல் ஆண்டில் ஆளுநர் உரையிலும் சரி, இடைக்கால பட்ஜெட்டிலும் சரி புதிய திட்டங்களை குறிப்பிடுவது கிடையாது. குறிப்பாக பட்ஜெட் என்பதே Interim Budget தான். இடைக்கால பட்ஜெட் தான். இதுதான் மரபு. இதை திரு. எஸ்.ஆர்.பி. அவர்களும், திரு. பொன்முடி அவர்களும் மறந்து விட்டார்களா என்பது தெரியவில்லை.

நமது செயல்பாடுகள் எல்லாம் ஆழச் சிந்தித்து எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் அமைந்தவை. எது சிறந்த செயல்பாடு என்னும் கேள்விக்கு Francis Hutcheson என்ற சிந்தனையாளர் பதில் தந்தார். எந்தச் செயல்பாடு எண்ணற்ற மக்களுக்கு, ஏராளமான மகிழ்ச்சியை அளிக்கிறதோ, அந்தச் செயல்பாடே சிறந்த செயல்பாடு என்பது அந்த அறிஞரின் கருத்து. That action is best which procures the greatest happiness for the greatest numbers–என்பது அந்தச் சிந்தனையாளரின் வாசகம்.



நமது ஒவ்வொரு திட்டமும் ஏராளமான மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கின்ற திட்டம்தான். நாம் இயற்றுகின்ற ஒவ்வொரு சட்டமும் ஏராளமான மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கின்ற சட்டம்தான். அதற்கு ஒரு எடுத்துக்காட்டுதான் மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் தொழிற் கல்விக்கான நுழைவுத் தேர்வு இரத்து பற்றிய அறிவிப்பு. (மேசையைத் தட்டும் ஒலி) தொழில் கல்லூரி மாணவர் சேர்க்கைக்கான பொது நுழைவுத் தேர்வு, பொதுவாக பெற்றோர் மற்றும் மாணவ மாணவியருக்கும், குறிப்பாக கிராமப்புறத்தைச் சேர்ந்த மாணவ மாணவியருக்கு ஒரு வேதனையான அனுபவமாகவும், பளு ஏற்றுவதாகவும் மாறிவிட்டது என்று என்னுடைய தலைமையிலான அரசு கருதியதால், அந்த நுழைவுத் தேர்வு இரத்து செய்யப்பட வேண்டும் என பல்வேறு தரப்பினரிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கையை கவனமாகப் பரிசீலித்த பின்னர் இந்த அரசு 2005–2006 ஆம் ஆண்டு முதல் பொது நுழைவுத் தேர்வை இரத்து செய்து உயர் கல்வித் துறையின் 9–6–2005 ஆம் நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண் 184-ல் விரிவான ஆணை ஒன்றைப் பிறப்பித்தது. இருப்பினும், சிலர் இந்த அரசாணையை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனுக்களைத் தாக்கல் செய்தனர். சென்னை உயர் நீதிமன்றம் இந்த ரிட் மனுக்களின்மீது அளித்த தன்னுடைய தீர்ப்பில் மிகப் பரந்துபட்ட செயல் விளைவைக் கொண்ட இந்த மாற்றத்தைச் செய்வது என்ற அரசின் நிலைப்பாட்டை வெகுவாகப் பாராட்டி உள்ளது. அந்த நீதிமன்றம் கிராமப்புறத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் பாதிக்கப்படக்கூடும் என்ற மாநில அரசின் கவலையை எங்களால் புரிந்துகொள்ள முடிகிறது. இந்திய மக்களில், 70 சதவீதம் பேர் கிராமப்புறங்களிலேயே வாழ்கிறார்கள். அங்குள்ள மக்கள் பொதுவாக ஏழைகளாகவும், நகர்ப்புற மக்களில் பெரும்பாலோருக்குக் கிடைத்து வருகின்ற பல வசதிகளும், வாய்ப்புகளும் அற்றவர்களாகவும் இருக்கிறார்கள் என்று தன்னுடைய தீர்ப்பில் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இவ்வாறாக இந்த அரசாணையில் குறிப்பிடப்பட்ட அரசின் அடிப்படையான கொள்கைக்கு உயர் நீதிமன்றம் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. எனினும், மத்திய சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட இந்திய மருத்துவக் குழு மற்றும் அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு ஆகியவற்றின் சில விதிமுறைகளைக் கருத்தில் கொண்டு உயர் நீதிமன்றம், 9–6–2005 ஆம் நாளிட்ட அரசு ஆணையை இரத்து செய்தது. இருந்தாலும், இதனை எதிர்த்து ஒரு சிறப்பு அனுமதி மனுமூலம் நாங்கள் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தோம். உயர் நீதிமன்றத்தின் ஆணைக்குத் தடை

விதிக்க முடியாது என உச்ச நீதிமன்றம் இடைநிலைத் தீர்ப்பு அளித்தது. ஆனாலும், மேல்முறையீடு நிலுவையில் உள்ளது. இதன் விளைவாக, முன்னர் இருந்த பொது நுழைவுத் தேர்வின் அடிப்படையிலேயே தொழில் கல்லூரி மாணவர் சேர்க்கை முறை மீண்டும் செயலுக்கு வந்தது.

*பிற்பகல் 12-20*

இந்திய மருத்துவக் குழு மற்றும் அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு ஆகியவற்றை நெறிப்படுத்துகின்ற மத்தியச் சட்டங்களின்கீழ், ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட விதிமுறைகள் பொது நுழைவுத் தேர்வு நடத்துவதற்கு வகை செய்கின்றன என்றும், மாநில அரசின் ஆணைகள் மத்திய விதிமுறைகளை மேலோங்கி நிற்க முடியாது என்றும் கூறியே அரசு, உயர் கல்வித் துறையின் 9-6-2005 ஆம் நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண் 184-ல் பிறப்பித்த ஆணையை சென்னை உயர் நீதிமன்றம் இரத்து செய்தது.

மாநில அரசுகள் பொது நுழைவுத் தேர்வு இல்லாமலும், மாணவர்களின் திறமையை அளவிடுவதற்குப் போதுமானதாக உள்ள பிளஸ் 2 மதிப்பெண்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு தொழிற்கல்வி மாணவர் சேர்க்கையை நடத்த இயலும் வகையிலும், இந்திய மருத்துவக் குழு மற்றும் அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு ஆகியவற்றின் விதிமுறைகளைத் தக்கவாறு திருத்தி அமைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு, தமிழக அரசின் தலைமைச் செயலாளர், மத்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தைச் சேர்ந்த இடைநிலை மற்றும் உயர் கல்வித் துறைக்கும், மக்கள் நல்வாழ்வு குடும்ப நலத் துறை அமைச்சகத்திற்கும் 15-9-2005 ஆம் நாளிட்ட 19868/J2/2005 எண்ணுள்ள கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். மேலும், 1-12-2005 அன்று நினைவூட்டுக் கடிதம் ஒன்றும் அனுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பாக, மத்திய அரசிடமிருந்து இதுநாள்வரை பதில் எதுவும் வரப்பெறவில்லை. எனவே, இப்பிரச்சினையின் அவசரத் தன்மையைக் கருத்தில் கொண்டும், தற்போது நிலவி வரும் நிச்சயமற்ற நிலைமைக்கு ஒரு முடிவு கட்டுவதற்கும், பெரும்பாலான மாணவர்கள் இன்னல்களுக்கு ஆளாகக் கூடாது என்றும், அதே நேரத்தில் மற்ற கல்வித் திட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள், மாநிலக் கல்வித் திட்டத்தின் பிளஸ் 2 தேர்வு மதிப்பெண்களோடு ஒப்புநோக்கத்தக்க அடிப்படையில் போட்டியிட ஒரு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படைக் கோட்பாட்டை பின்பற்றுவது என்றும் முடிவு செய்துள்ளோம். பிற கல்வித் திட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு நடத்தப்படுகின்ற பொது நுழைவுத் தேர்வு மாநிலக்



கல்வித் திட்ட பிளஸ் 2 தேர்வின் ஒரு பிரதிபிம்பமாக இருக்கின்ற வகையில் வடிவமைக்கப்படும்.

நியாயமான, ஒளிவு மறைவற்ற, சுரண்டல்களுக்கு இடமில்லாத ஒரு முறையினை அடிப்படையாகக் கொண்டு மாணவர் சேர்க்கை நடத்தப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தின் 7 நீதிபதிகள் அடங்கிய ஆயம் தீர்ப்பளித்துள்ளது. தற்போது ...

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு point of clarification.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** Clarification-ஐ கடைசியிலே கேட்கலாம். அப்போது நான் பதில் சொல்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** 7 நீதிபதிகள் அடங்கிய ஆயம் தீர்ப்பளித்துள்ளது. தற்போது நாங்கள் உத்தேசித்துள்ள சட்டம் இதன் அடிப்படையில்தான் அமையும். பெரும் பகுதி மாணவர்கள், குறிப்பாக கிராமப்புற மாணவர்கள் இன்னல்களுக்கு ஆளாகக் கூடாது என்பதை உறுதி செய்வதற்காக, என்னுடைய அரசு ஒளிவு மறைவற்ற, முறைகேடுகளுக்கு வாய்ப்பில்லாத தொழிற் கல்லூரி மாணவர் சேர்க்கை முறை ஒன்றை வகுத்து வருகிறது. இந்த நடைமுறையின்படி, மாநிலக் கல்வித் திட்டத்தின்கீழ் வராத மாணவர்கள், மாநிலக் கல்வி பாடத் திட்டத்தின் அடிப்படையில் நடத்தப்படும் நுழைவுத் தேர்வில் மதிப்பீடு செய்யப்பட்டு, மாநிலக் கல்வி பாடத் திட்ட மாணவர்களோடு ஒப்புநோக்கத்தக்க நிலைக்குக் கொண்டு வரப்படுவார்கள். இந்த நடைமுறையைப் பல்வேறு விதிமுறைகளையும், நீதிமன்றங்களின் கருத்துகளையும் மனதில் கொண்டு நாங்கள் வகுத்து வருவதால் அது சட்டப்படி செல்லத்தக்கதாக இருக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

"I am the friend of the unfriended poor" என்று புரட்சிக் கவிஞன் Shelley பாடினான். அதாவது, "நண்பர்கள் அற்ற ஏழைக்கு நண்பன் நான்" என்று Shelley என்ற அந்தக் கவிஞன் சொன்னான். அதுதான் எனது அரசியல் கோட்பாடு. (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையில் அமைவதுதான் எனது திட்டங்கள். அதன் அடிப்படையில் அமைவதுதான்

எனது செயல்பாடு. (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையில் வீறுநடை போடுவதுதான் எனது அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையில்தான் கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் ஒவ்வொரு நாளையும் சாதனைத் திருநாளாகவே நாம் உருவாக்கி உள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) என்னென்ன சாதனைகள், எத்தனை எத்தனை நடவடிக்கைகள்? ஏழையெளியோர், விவசாயிகள், நெசவாளர்கள், தொழிலாளர்கள், மகளிர், மாணவர்கள், மீனவர்கள் என சமூகத்தின் அனைத்துத் தரப்பினரது வாழ்க்கை நிலை உயர நித்தமும் திட்டமிட்டு, அந்தத் திட்டங்களைச் செயல்படுத்தி, அந்தச் செயலாக்கத்தில் சாதனை படைத்து, தமிழகத்தை முதல் நிலை மாநிலம் ஆக்குவதில் நான் வெற்றி கண்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–25*

இந்தச் சாதனைகள் சாதாரணமாக நிகழ்த்தப்பட்டவை அல்ல. மிகவும் அசாதாரணமான சூழ்நிலையில் படைக்கப்பட்டவைதான் இந்தச் சாதனைகள். இந்தியத் துணைக் கண்டம் முதன்முதலாக சந்தித்த சுனாமி அழிவு, தமிழகம் இதுவரை கண்டிராத கனமழை, வெள்ளம், தமிழகத்தில் இதுவரை அமைந்த எந்தவொரு அரசும் எதிர்கொண்டிராத கடும் நிதி நெருக்கடி போன்ற கடும் சோதனைகளுக்கு இடையே படைக்கப்பட்டவைதான் இந்தச் சாதனைகள்.

2001 ஆம் ஆண்டு எனது அரசு ஆட்சிப் பொறுப்பேற்றபோது, தமிழகத்தின் நிதிநிலை அதல பாதாளத்தில் இருந்தது என்பதை இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். 1995–1996 ஆம் ஆண்டு இறுதியிலிருந்து, அரசிடம் 649 கோடி ரூபாய் ரொக்க இருப்பு இருந்த நிலைக்கு மாறாக, 2001–2002 ஆம் ஆண்டு தொடக்கத்தில் ரொக்க இருப்பு அறவே இல்லாததோடு மட்டுமல்லாது, ரிசர்வ் வங்கியிடமிருந்து 242 கோடி ரூபாய் கைமாற்றுக் கடன் என்ற நிலைதான் இருந்தது. மேலும், ஒப்பந்தக்காரர்கள், பொருட்கள் வழங்கியோர் ஆகியோருக்குக் கொடுக்கப்படவேண்டிய தொகை 4,000 கோடி ரூபாய்க்கு மேல் நிலுவையாக இருந்தது.

இதுவன்றி, முக்கிய பொதுத் துறை நிறுவனங்களும் பெரும் நட்டத்தில் இயங்கி வந்தன. 31–3–2001 அன்று நிலவரப்படி அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சேர்ந்து வந்த இழப்பு 2,031.19 கோடி ரூபாய் என்ற மிக உயரிய அளவில் இருந்தது. 2000–2001 ஆம் ஆண்டில் மட்டும் ஏற்பட்ட இழப்பு 228.87 கோடி ரூபாய் ஆகும். சம்பளங்கள்,



எரிபொருள் செலவு போன்ற நடப்பு இயக்கச் செலவுகளைக்கூட செய்யமுடியாத அளவுக்கு நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. சம்பளங்கள்கூட வழங்க முடியுமா என்ற கடுமையான ஐயப்பாடு எழுந்தது.

என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிலைமைகூட அதேபோன்று மோசமாகத்தான் இருந்தது. 2000–2001 ஆம் ஆண்டு வரையில் முந்தைய அரசு, மின்சார வாரிய ஆண்டுக் கணக்கில் அரசு வழங்கவேண்டிய மானியங்கள் என்று காட்டி நிலைமையை மூடி மறைத்தது. மானியம் வழங்கப்படாமலேயே நிலுவையில் இருந்தது. இதன் விளைவாக என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்று சரியான நிலைமையை வெளிக்கொணர்ந்த போது, 2001–2002 ஆம் ஆண்டில் 4,851 கோடி ரூபாய் நஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

முந்தைய தி.மு.க. அரசின் தவறான நிர்வாகத்தின் காரணமாக, தமிழ்நாடு மின்சார வாரியம், மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் பிறரிடமிருந்து வாங்கப்பட்ட மின்சாரத்திற்கான உரிய தொகையை வழங்கமுடியாத நிலைமை ஏற்பட்டது. பணியாளர்களுக்கான சம்பளம், நிலக்கரி வகையிலான செலவு மற்றும் இதரச் செலவுகள் போன்ற வாலாயமான செலவுகளுக்குப் பணம் வழங்க இயலவில்லை. சுருக்கமாகச் சொல்லப்போனால், என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயல்பாட்டையே அறவே நிறுத்தக்கூடிய ஒரு நிலைதான் நிலவியது.

இவ்வாறு மிக மோசமான நிலையில் இருந்த தமிழக நிதி நிலைமையைச் சீர்படுத்தி, செம்மையாக்கி, இன்று நிதி நிலைமையை ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமான நிலைக்குக் கொண்டு வந்துள்ளோம். 2001–2002 ஆம் ஆண்டில் பட்டிகளுக்குத் தொகை கொடுக்காமல் விடப்பட்டு, செயற்கையாக குறைத்துக் காட்டப்பட்ட வருவாய்ப் பற்றாக்குறையே 2,739 கோடி ரூபாய் அளவிற்கு இருந்தது. எங்களது சீரிய முயற்சியின் பயனாக, 2004–2005 ஆம் ஆண்டில் 703 கோடி ரூபாய் என்ற அளவுக்குக் குறைத்துள்ளோம். நடப்பாண்டில் இது மேலும் குறையும். அதேபோன்று, 2001–2002 ஆம் ஆண்டில் 1,778 கோடி ரூபாய் என்னும் அளவில் இருந்த மூலதனச் செலவு, தற்போது 4,792 கோடி ரூபாய்க்குமேல் உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-30*

இவையெல்லாம் சாத்தியமாகக் காரணம், எனது அரசு எடுத்த பல்வேறு துணிச்சலான நடவடிக்கைகளும், நிதிச் சீர்திருத்த நடவடிக்கைகளும்தான். மனித நேயம்கொண்ட சமன்பாடான வளர்ச்சி என்பதை அடிப்படையாகக் கொண்டே இந்தச் சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான சில்லரை விற்பனையையும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகமே 29-11-2003 முதல் மேற்கொண்டது. இதன் காரணமாக, 1996–1997 ஆம் ஆண்டு முதல் 2000–2001 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் அரசுக்கு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மூலம் கிடைத்த ஆயத்தீர்வை வருவாய் மற்றும் விற்பனை வரி சுமார் 12,715.98 கோடி ரூபாய் ஆகும். 2001–2002 ஆம் ஆண்டு முதல் டிசம்பர் 2005 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் இத்துறை மூலம் அரசுக்கு ஆயத்தீர்வை வருவாய் மற்றும் விற்பனை வரியாக சுமார் 20,361.39 கோடி ரூபாய் கிடைத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, இந்தக் காலக் கட்டத்தில் அரசுக்குக் கிடைத்த கூடுதல் வருவாய் 7,645.41 கோடி ரூபாயாகும். 2006 ஆம் ஆண்டு மார்ச் முடிய மேலும் சுமார் 1,500 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, 1996–1997 ஆம் ஆண்டு முதல் 2000–2001 ஆம் ஆண்டு முடிய உள்ள ஐந்தாண்டுக் காலத்தில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறைமூலம் அரசுக்குக் கிடைத்த வருவாயைவிட 2001–2002 ஆம் ஆண்டு முதல் 2005–2006 ஆம் ஆண்டு முடிய உள்ள ஐந்தாண்டுகளில் கூடுதல் வருவாய் 9,145 கோடி ரூபாய் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) சில்லறை விற்பனையை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகமே எடுத்துக் கொண்டதால், இக்கூடுதல் வருவாய் அரசுக்குக் கிடைத்துள்ளது. அதேபோன்று, விற்பனை வரியில் 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை கிடைத்த வருவாய் 34,440 கோடி ரூபாய் ஆகும். 2001 ஆம் ஆண்டு முதல் டிசம்பர் 2005 வரை கிடைத்த விற்பனை வரி வருவாய் 56,925 கோடி ரூபாய் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, 22,485 கோடி ரூபாய் கூடுதலாக கிடைக்கப் பெற்றுள்ளது. இது போன்ற எனது அரசின் திறமைமிக்க நிதி நிர்வாக மேலாண்மையால்தான், முன்னர் ஏற்படுத்தப்பட்ட நிதிச் சீரழிவிலிருந்து தமிழக அரசை தற்போது நாங்கள் மீட்டுள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற துறை சாதனைகள் சிலவற்றை, காவல் துறை, தொழில் துறை, குடிநீர் வழங்கல் போன்ற துறைகளில் படைத்த சாதனைகள் பற்றி



இப்போது நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தியாவில் உள்ள ஏனைய மாநிலங்களை உன்னிப்பாக கவனித்து, தங்கள் மாநிலத்தையும் இவ்வாறே முன்னேற்றிட வேண்டும் என்று தமது செயல் திட்டங்களை வகுத்து செயல்படும் வகையில், தமிழகம் வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இந்த வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணம், தமிழகம் ஓர் அமைதிப் பூங்காவாக விளங்குவதுதான் என்பதை அனைவருமே ஏற்றுக்கொள்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் அத்தகைய அமைதிச் சூழ்நிலையை உருவாக்கி, மக்களுக்குப் பாதுகாப்பு உணர்வையும், நம்பிக்கைச் சிந்தனையையும், வழங்குவதோடு அவற்றைத் தொடர்ந்து கட்டிக் காப்பதில் தமிழக காவல் துறை முன் நின்று மிகச் சிறப்புடன் பணியாற்றி வருகிறது என்பதைத் தெரிவிப்பதில் நான் பெருமிதம் அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு முக்கிய காரணம், தமிழக காவல் துறையை நவீனப்படுத்தவும், காவல் பணியை மேம்படுத்தவும் காவலர்கள் முழு அர்ப்பணிப்பு உணர்வுடன் கடமை ஆற்றும் வகையில் அவர்தம் நலனைப் பேணவும், நான் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களும், வழங்கி வரும் உதவிகளுமே ஆகும்.

தமிழகம் இவ்வாறு அமைதியோடும், பாதுகாப்புச் சூழ்நிலையோடும் திகழ்வதாலும், உலகத் தரமான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை நான் உருவாக்கி இருப்பதாலும், பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் தங்களது தொழில் அமைப்புகளை, இந்தியாவிற்கான தனி அலுவலகங்களை, தமது கிளை அகங்களைத் தமிழகத்திலே அமைத்திட வேண்டும் என்ற ஆர்வத்துடன் நாடி வருகின்றன. நான் எடுத்து வரும் பல்வேறு சீரிய முயற்சிகளின் காரணமாக, நோக்கியா, ஃபிளெக்ஸ்டிரானிக்ஸ், பி.எம்.டபிள்யு. போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்கள் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு முடிவு செய்துள்ளன. தமிழ்நாட்டில் நாள்தோறும் ஒரு தகவல் தொழில் நுட்ப நிறுவனம் அமைக்கப்படுவதும் இதனை உறுதி செய்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு மிகுந்த முன்னுரிமை அளித்து பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களை, முனைப்பான நடவடிக்கைகளை எனது அரசு மேற்கொண்ட காரணத்தினால் மக்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதில் ஒரு மாபெரும் சாதனையை நாம் படைத்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் 2003 ஆம் ஆண்டு, மாநிலத்தில் மொத்தம் இருந்த 81,887 ஊரகக் குடியிருப்புகளில் 29,067 குடியிருப்புகள் மட்டுமே முழுமையான குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகளாக, அதாவது

நபர் ஒருவருக்கு, நாள் ஒன்றுக்கு 40 லிட்டருக்கு மேல் குடிநீர் வழங்கப்படும் குடியிருப்புகளாக இருந்தன. இன்றைக்கு இந்த நிலை முற்றிலுமாக மாற்றப்பட்டு 53,749 குடியிருப்புகளுக்கு முழுமையான குடிநீர் வசதியும், 26,077 குடியிருப்புகளுக்கு பகுதி குடிநீர் வசதியும், எனது அரசால் செய்து தரப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–35*

2003 ஆம் ஆண்டின்படி 11,790 குடியிருப்புகள் போதிய குடிநீர் வசதியற்ற குடியிருப்புகளாக இருந்த நிலையினை மாற்றி, அத்தகைய குடியிருப்புகளின் எண்ணிக்கையை இன்றைக்கு வெறும் 1,961 என்ற அளவிற்கு குறைத்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 1,961 குடியிருப்புகளும் இந்த ஆண்டு இறுதிக்குள் முழுமையான குடிநீர் வசதி பெற்றுவிடும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் பல்வேறு குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் செயல்படுத்த கடந்த 5 ஆண்டுகளில் எனது அரசு 3,600 கோடி ரூபாய் செலவிட்டுள்ளது. ஆனால், 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை குடிநீர்த் திட்டப் பணிகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை 1,920 கோடி ரூபாய் மட்டும்தான் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இவ்வாறு, மக்கள் நலம் ஒன்றே குறிக்கோள், மக்கள் நல்வாழ்வு ஒன்றே இலட்சியம் என்ற கோட்பாட்டுடன் எனது அரசு படைத்துள்ள சாதனைகளை எல்லாம் இங்கே எடுத்துக் கூற ஆரம்பித்தால் இன்று ஒரு நாள் போதாது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில், எனது அரசு படைத்த ஒரு சில சாதனைகளை மட்டும் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

காட்டுக் கொள்ளையன் வீரப்பன் ஒழிப்பு, (மேசையைத் தட்டும் ஒலி) புதிய வீராணம் திட்டம் நிறைவேற்றம், (மேசையைத் தட்டும் ஒலி) 86 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களுக்கும், 51 இலட்சம் சிறு, குறு விவசாயிகளுக்கும் ஆக மொத்தம் 137 கோடி பேர்களுக்கு உதவிபுரியும் உழவர் பாதுகாப்புத் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) பிளஸ்–1 மற்றும் பிளஸ்–2 பயிலுகின்ற மாணவ, மாணவியர் அனைவருக்கும் இலவச சைக்கிள்களை வழங்கும் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) 1 ஆம்



வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை இலவசமாகப் பாடநூல்கள் வழங்கும் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) திருக்கோயில்கள், தேவாலயங்கள் மற்றும் தர்காக்களில் அன்னதானத் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) அனைவருக்கும் கல்வித் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) யானைகள் நலவாழ்வு முகாம், (மேசையைத் தட்டும் ஒலி) நமது கிராமம் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள், (மேசையைத் தட்டும் ஒலி) முழு சுகாதார இயக்கம், (மேசையைத் தட்டும் ஒலி) பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு சாலை மேம்பாட்டுத் திட்டங்கள், (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள், (மேசையைத் தட்டும் ஒலி) சிறு மின் இறைப்பான் குடிநீர்த் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு பாசனத் திட்டங்கள், (மேசையைத் தட்டும் ஒலி) 30 படுக்கை வசதி கொண்ட மருத்துவ நிலையமாக மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள், (மேசையைத் தட்டும் ஒலி) மகளிர் சுய உதவிக் குழுக்கள், (மேசையைத் தட்டும் ஒலி) பெண்களுக்குத் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி, உயர்தொழில்நுட்ப நெசவுப் பூங்காக்கள், (மேசையைத் தட்டும் ஒலி) கைத்தறி நெசவாளர்களுக்காகக் காப்பீட்டுத் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) கிராமங்களில் உள்ள நிலமற்ற ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மகளிர் வேளாண் நிலம் வாங்கும் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) மழை நீர் சேகரிப்புத் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளின் கடன் தள்ளி வைப்பு, கடன் தீர்வு மற்றும் வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி, (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயக் கடன்களுக்கு மிகக் குறைந்த வட்டி வீதம், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டுத் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு 1 கோடியே 64 இலட்சம் பெண்களுக்கும், 1 கோடியே 64 இலட்சம் ஆண்களுக்கும் பயன் அளிக்கும். ஆக மொத்தம் 3.28 கோடி பேர்கள் பயன்பெறும் இலவச வேட்டி–சேலைத் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) சத்துணவுத் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டிலேயே மிகக் குறைந்த விலையில் அரிசி விநியோகம், (மேசையைத் தட்டும் ஒலி) தகுதி வாய்ந்த அனைவருக்கும் குடும்ப அட்டைகள், (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுக்கும், குடிசைகளுக்கும் இலவச மின்சாரம், (மேசையைத் தட்டும் ஒலி) வீட்டு உபயோகிப்பாளருக்கு குறைந்த விலையிலான மின்சாரம், (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியருக்கான அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடங்கள்

என்று எனது அரசின் சாதனைகள் ஒன்றன்பின் ஒன்றாக அணி வகுத்து வருகின்றன. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

*பிற்பகல் 12–40*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் சில முக்கிய அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிக்க விழைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

முதலில், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவி. 2005 ஆம் ஆண்டில் பெய்த அதிகப்படியான மழை, தமிழகத்தின் வறட்சிப் பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்த்து, நல்ல விளைச்சல் கிடைக்கும் என்ற நம்பிக்கையை வேளாண் பெருமக்களுக்கு ஏற்படுத்தியபோதிலும், அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை அடுத்தடுத்து பெய்த தொடர் மழை மற்றும் வெள்ளத்தினால், கடுமையாக பாதிக்கப்பட்ட 22 மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது நிலங்களில் பயிர் செய்த விவசாயப் பயிர்கள் சேதமுற்று பாதிப்புக்கு உள்ளாயினர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை, புல ஆய்வு மேற்கொண்டு, கணக்கு எடுத்து, அரசுக்கு அறிக்கை வழங்கிட, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நான் ஆணையிட்டேன். 10.13 இலட்சம் ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்ட நெற்பயிர்களும், 2.27 இலட்சம் ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்ட கரும்பு, சிறுதானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பயறு வகைகள், பருத்தி, தென்னை, வாழை மற்றும் இதர தோட்டக்கலைப் பயிர்களும் இந்த மழை வெள்ளத்தில் சேதம் அடைந்துள்ளன என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 10,967 ஏக்கர் விவசாய நிலங்களில் மணல் மற்றும் சிறு கற்கள் படிந்து பாதிப்புக்கு உள்ளாகி உள்ளன. அத்துடன் 6,985 விவசாயிகளின் மின் மற்றும் டீசல் பம்பு செட்டுகளும் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டோ, முழுவதுமாகப் பழுதடைந்தோ உள்ளன.

தேசியப் பேரிடர் நிவாரண நிதி வழிமுறைகளின்படி, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெல் மற்றும் இதர பாசன வசதி பெற்ற பயிர்களுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு 1,000 ரூபாய் வீதமும், மானாவாரிப் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 400 ரூபாய் வீதமும், பல்லாண்டு பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 1,600 ரூபாய் வீதமும் மட்டுமே நிவாரணத் தொகையாக வழங்க இயலும்.



தேசியப் பேரிடர் நிவாரண நிதி வழிமுறைகளின்படியான இந்த நிவாரணம், விவசாயிகளின் பாதிப்புக்கு ஈடாகாது என்பதால், மத்திய அரசுக்கு எனது அரசால் அனுப்பப்பட்ட கோரிக்கை மனுவில், வெள்ளத்தால் பயிர் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு, நெற்பயிருக்கு 8,000 ரூபாய், கரும்புப் பயிருக்கு 10,000 ரூபாய், வாழைப் பயிருக்கு 10,000 ரூபாய், எண்ணெய் வித்துக்களுக்கு 4,000 ரூபாய், சிறுதானியங்களுக்கு 4,000 ரூபாய் மற்றும் இதர தோட்டக்கலைப் பயிர்களுக்கு 8,000 ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணம் வழங்கும் வகையில் நிதி உதவி வழங்க வேண்டும் என்று மத்திய அரசை எனது அரசு கேட்டுக்கொண்டது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு மட்டுமின்றி, மணல் படிந்து பாதிப்புக்குள்ளான நிலங்களுக்கும், வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டோ அல்லது முழுவதுமாகச் சேதம் அடைந்தோ பாதிப்புக்கு உள்ளான பம்பு செட்டுகளுக்கும் தேசியப் பேரிடர் நிவாரண நிதி வழிமுறைகளில் சேர்த்து நிவாரணம் வழங்க மத்திய அரசை இவ்வரசு கேட்டுக்கொண்டது.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை 16–12–2005 அன்று நான் நேரில் சந்தித்தபோதும், இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினேன். தற்போது உள்ள தேசியப் பேரிடர் நிவாரண நிதி வழிமுறைகள் மாற்றம் குறித்து பரிசீலனை செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது என்றும், அந்தக் குழுவின் பரிந்துரையின் பேரில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் ஒரு விளக்கம் அளிக்கப்பட்டது. ஆயினும், மத்திய அரசிடமிருந்து இது தொடர்பாக எந்த ஒரு தகவலும் இதுவரை வரப்பெறவில்லை. மைய அரசு, பயிர்ச் சேதங்களுக்காக வழங்கப்படும் நிவாரணத் தொகையை திருத்தி அமைப்பது தொடர்பாக எந்த ஒரு உத்தரவும் இதுவரை பிறப்பிக்காததால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வேளாண் பெருங்குடி மக்களுக்கு நிவாரண உதவிகளை இன்னமும் வழங்க இயலவில்லை என்பதால், விவசாயிகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள எனது அரசு பயிர்ச் சேதங்களுக்கான நிவாரண உதவிகளை விரைவில் அறிவிக்கும் என்று 17–1–2006 அன்று இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்திருந்தேன்.

*பிற்பகல் 12–45*

மைய அரசு, தேசியப் பேரிடர் நிவாரண நிதி வழிமுறைகளை மாற்றம் செய்யாத நிலையிலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு மைய அரசு வெள்ள நிவாரணத்துக்கென 1,000 கோடி ரூபாய்

மட்டுமே வழங்கி உள்ள நிலையிலும் இதுவரை தமிழக அரசு 1,114 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ள நிலையில், மாநில அரசின் சக்திக்கு அதிகமான அதிகபட்ச நிவாரண உதவிகளை வழங்குவது என்று நான் முடிவு எடுத்துள்ளேன்.

அதன்படி, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தேசியப் பேரிடர் நிவாரண நிதி வழிமுறைகளில் குறிப்பிட்ட தொகையை மூன்று மடங்காக உயர்த்தி, நிவாரண உதவிகள் வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதன்படி, பாசன வசதியுடன் பயிரிடப்பட்ட நெற்பயிர், கரும்பு, எண்ணெய் வித்துப் பயிர்கள், பருத்தி, பயறு வகைகள், சிறு தானிய பயிர்கள், வாழை மற்றும் இதர தோட்டக்கலைப் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 3,000 ரூபாய் வீதமும், (மேசையைத் தட்டும் ஒலி) மானாவாரியாக பயிரிடப்பட்ட நெல், எண்ணெய்வித்துப் பயிர்கள், பருப்பு வகைகள், பருத்தி, சிறுதானியப் பயிர்கள் மற்றும் இதர தோட்டக்கலைப் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 1,200 ரூபாய் வீதமும், (மேசையைத் தட்டும் ஒலி) தென்னைக்கு ஏக்கர் ஒன்றுக்கு 4,800 ரூபாய் வீதமும், (மேசையைத் தட்டும் ஒலி) நிவாரண உதவிகள் வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன்.

மத்திய அரசு இந்த ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் நிதி வழங்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏற்கெனவே மத்திய அரசு வழங்கிய அந்த ஆயிரம் கோடி ரூபாயைவிட அதிகமாக தமிழக அரசு செலவு செய்துள்ளது. தமிழக அரசு 1,114 கோடி ரூபாய் செலவு செய்துள்ளது என்பதையும் நினைவுப்படுத்த விரும்புகிறேன். ஆகவே, இப்போது தமிழக அரசு வழங்குகின்ற இந்த உதவி, தனது சொந்த நிதிஙயக் கொண்டு வழங்கும் உதவியாகும். இதனால் தமிழக அரசுக்கு 346.36 கோடி ரூபாய் செலவாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

மழை வெள்ளம் காரணமாக மணல் மற்றும் சிறு கற்கள் படிந்து பாதிப்புக்குள்ளாகியுள்ள விவசாய நிலங்களைச் சீரமைக்க தேசியப் பேரிடர் நிவாரண நிதி வழிமுறைகளில் இடம் இல்லை என்றாலும்— இதைக் கவனிக்க வேண்டும், மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும் மழை வெள்ளம் காரணமாக, மணல் மற்றும் சிறு கற்கள் படிந்து பாதிப்புக்குள்ளாகியுள்ள விவசாய நிலங்களைச் சீரமைக்க தேசியப் பேரிடர் நிவாரண நிதி வழிமுறைகளில் இடம் இல்லை, என்றாலும்—



அவ்வாறு பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு, நிவாரண நிதி உதவி வழங்குவது என நான் முடிவு எடுத்துள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்படி, 18 அங்குலத்திற்கும் அதிகமாக மணல் படிந்த நிலங்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 18 ஆயிரம் ரூபாய் வீதமும், (மேசையைத் தட்டும் ஒலி) 6 முதல் 18 அங்குலம் வரை மணல் படிந்த நிலங்களுக்குப் பொதுப் பணித் துறையின் விலை அட்டவணைப்படி கணக்கிடப்பட்ட தொகை அல்லது அதிகபட்சமாக ஹெக்டேர் ஒன்றுக்கு 12 ஆயிரம் ரூபாய் நிவாரணமாக வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான செலவு 5 கோடியே 44 இலட்சம் ரூபாயாகும்.

அதேபோன்று, மழை வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டோ அல்லது முழுவதும் சேதம் அடைந்தோ பாதிப்புக்குள்ளான பம்பு செட்டுகளுக்கு, பம்பு செட்டின் விலையில் 75 சதவீதம் அல்லது 10 ஆயிரம் ரூபாய், இதில் எது குறைவோ அந்தத் தொகை வழங்கப்படும். இதற்காக ஏற்படும் செலவு 7 கோடி ரூபாய் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக மொத்தம் 358 கோடியே 80 இலட்சம் ரூபாய் அளவுக்கு தற்போது நான் அறிவித்துள்ள இந்த நிவாரண நிதி உதவிகள், (மேசையைத் தட்டும் ஒலி) மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்களது வாழ்க்கையைப் புனரமைத்துக்கொள்ள உதவிடும் என்பதில் நான் மனநிறைவு அடைகிறேன்.

*பிற்பகல் 12–50*

எனது அரசு தனது சக்தியையும் மீறி இந்த நிவாரண உதவிகளை வழங்குகிறது. மத்திய அரசிடம் தேசியப் பேரிடர் நிவாரண நிதி வழிமுறைகளில் மாற்றம் செய்ய எனது அரசு தொடர்ந்து வலியுறுத்தும். கோரப்பட்ட உதவித் தொகையில் மீதமுள்ள 12 ஆயிரத்து 685 கோடி ரூபாயை மத்திய அரசு வழங்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாக மத்திய அரசை மீண்டும் வலியுறுத்துகிறேன். மத்திய அரசு நிவாரண உதவித் தொகையை உயர்த்தி வழங்கினால், அதனை விவசாயிகளுக்கு இந்த அரசு வழங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, எங்கள் சக்திக்கு உட்பட்டு இப்போது இந்த அளவு நிவாரண உதவிகளை விவசாயிகளுக்கு அறிவித்திருக்கிறோம். மத்திய அரசு மேலும் நிதி உதவி வழங்கினால் உடனடியாக விவசாயிகளுக்கு உயர்த்தி வழங்குவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

அடுத்து, குடிசைகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் – விரிவாக்கம்: குடிசைவாழ் மக்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் கொண்டுவரப்பட்டது. 'குடிசைகளுக்கு ஒரு இலவச மின் விளக்கு திட்டம்' என்னும் இந்தத் திட்டத்தின்கீழ் சில நிபந்தனைகளின் அடிப்படையில் குடிசைகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. கிராமப் பஞ்சாயத்துக்கு உட்பட்ட பகுதிகளில் 'காமராஜர் ஆதி திராவிடர் வீட்டு வசதித் திட்டம்', 'ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம்' மற்றும் 'தாட்கோ' திட்டங்களின்கீழ் கட்டப்பட்ட வீடுகள் மற்றும் மண் சுவரால் கட்டப்பட்டு ஓலை அல்லது வைக்கோல் வேயப்பட்ட 200 சதுர அடிக்குள் அமைந்துள்ள குடிசை வீடுகள் மட்டுமே, இத்திட்டத்தின்கீழ் பயன்பெற இயலும். ஒரு குடிசைக்கு 40 வாட் சக்தி உள்ள ஒரு மின் விளக்கு மட்டும் அனுமதிக்கப்படும். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், சிறப்பு நிலை ஊராட்சிகளில் அமைந்துள்ள குடிசை வீடுகளுக்கும் இத்திட்டத்தின்கீழ் இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. தமிழக அரசு, இந்தத் திட்டத்திற்காக தற்போது ஆண்டு ஒன்றுக்கு 16 கோடி ரூபாயை மானியமாக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கி வருகிறது.

ஓடு, கல்நார் மற்றும் தகரத்தால் கூரை வேயப்பட்ட வீடுகளுக்கு இத்திட்டத்தின்கீழ் தற்போது இலவச மின்சாரம் வழங்கப்படுவதில்லை. ஊராட்சிகளில் கட்டப்படும் பெரும்பாலான குடிசை வீடுகள், தீப்பிடிக்காத வகையில் இருக்க வேண்டும் என்ற பாதுகாப்பிற்காக தற்போது, ஓடு, கல்நார் மற்றும் தகரத்தால் வேயப்பட்ட கூரைகளைக் கொண்டதாகவே உள்ளன. இத்தகைய வீடுகளில் வசிப்போர் அனைவரும் ஏழை எளிய மக்களே ஆவர். அவர்களும் ஏழை எளிய மக்கள்தான். இதன் அடிப்படையில் தங்களுக்கும் இந்த இலவச மின்சாரத் திட்டம் விரிவாக்கப்பட வேண்டும் என்று அந்த ஏழை எளிய மக்கள் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இதனைப் பரிவுடன் பரிசீலித்து, குடிசைகளுக்கான இலவச மின் திட்டத்தினை இத்தகைய வீடுகளுக்கும் விரிவுபடுத்த நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதன் அடிப்படையில், கிராம ஊராட்சிகளிலும், சிறப்பு ஊராட்சிகளிலும், 250 சதுர அடிக்கு மிகாமல், இதுவரை 200 சதுர அடி என்று இருந்ததை மேலும் விரிவுபடுத்தி 250 சதுர அடிக்கு மிகாமல், ஓர் அறையுடன், ஓடு, கல்நார் அல்லது தகரத்தால் கூரை வேயப்பட்டு, கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கும் இந்த இலவச மின் வசதி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)



இந்த விரிவாக்கத் திட்டத்தால் சுமார் 3 இலட்சம் ஏழை எளிய குடும்பங்கள் பயன் பெறுவர். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 3 கோடியே 60 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக மொத்தம், இதற்காக தமிழக அரசு 19 கோடியே, 60 இலட்சம் ரூபாய் செலவு செய்யும்.

அடுத்து, வழிபாட்டுத் தலங்கள் அனைத்துக்கும் மின் கட்டணம் குறைப்பு பற்றிய அறிவிப்பு: தமிழகத்தில் உள்ள திருக்கோயில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் மற்றும் சமண ஆலயங்கள் முதலான வழிபாட்டுத் தலங்கள் மனிதர்கள் தங்களது வாழ்க்கையில் நம்பிக்கையுடன் தொடர்ந்து முன்னேறத் தூண்டுகின்ற திருத்தலங்களாகத் திகழ்கின்றன. இந்த வழிபாட்டுத் தலங்களின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, இங்கு வருகை தருகின்ற பக்தர்களின் நலன் பேண பல்வேறு திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது. தற்போது 260 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தை எனது அரசு சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது. அதேபோல், தேவாலயங்களிலும், தர்காக்களிலும் அன்னதானத் திட்டம் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆயிரம் ரூபாய்க்கும் குறைவாக ஆண்டு வருமானம் உள்ள திருக்கோயில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் மற்றும் இதர வழிபாட்டுத் தலங்களுக்கு தற்போது இலவசமாக மின்சாரம் வழங்கப்படுகிறது. ஆண்டு வருமானம் ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாக உள்ள வழிபாட்டுத் தலங்களில் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 3 ரூபாய் என்ற வீதத்தில் தற்போது மின் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. வருவாய் குறைவாக உள்ள வழிபாட்டுத் திருத்தலங்கள் இந்த மின் கட்டணத்தைச் செலுத்த மிகவும் சிரமப்படுகின்றன. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், தமிழகத்தில் ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாகவும், 10,000 ரூபாய்க்குக் குறைவாகவும் ஆண்டு வருமானம் உள்ள திருக்கோயில்களின் எண்ணிக்கை சுமார் 30,000 ஆகும். இத்திருக்கோயில்களில் மாதந்தோறும் பயன்படுத்தப்படும் மின்சாரம் சுமார் 35 யூனிட்டுகளுக்கும் குறைவாகவே உள்ளது. எனினும், இந்த மின் கட்டணத்தைச் செலுத்த இயலாத நிலையில் இத்திருக்கோயில்கள் மின் கட்டணத்தைச் செலுத்த நன்கொடையாளர்களையே நாட வேண்டிய நிலையில் உள்ளன.

*பிற்பகல் 12–55*

வருவாய் குறைவாக உள்ள ஏனைய வழிபாட்டுத் தலங்களுக்கும் இதே நிலைமைதான் உள்ளது. எனவே, சிறிய திருக்கோயில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள், சமண ஆலயங்கள் உட்பட அனைத்து பொது வழிபாட்டுத் தலங்கள் மாதந்தோறும் மின் கட்டணத்தைச் செலுத்த எதிர்கொண்டுவரும் சிரமத்தை நீக்கிடும் வகையில் இந்த வழிபாட்டுத் தலங்கள் பயன்படுத்துகின்ற மின்சாரத்திற்கான கட்டணத்தைக் குறைத்திட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி, ஆண்டு வருமானம் 1,000 ரூபாய்க்கும் குறைவாக உள்ள திருக்கோயில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள், சமண ஆலயங்கள் உட்பட அனைத்து பொது வழிபாட்டுத் தலங்களுக்கும் தற்போது வழங்கப்பட்டு வரும் இலவச மின்சார வசதி தொடரும். 1,000 ரூபாய்க்கு அதிகமாக ஆண்டு வருவாய் உள்ள இதர அனைத்து வழிபாட்டுத் தலங்களையும் பொறுத்தமட்டில், அவற்றின் மாதாந்திர மின் பயனீட்டு அளவில் முதல் 60 யூனிட்டுகளுக்கு யூனிட் ஒன்றுக்கு 1 ரூபாய் 50 காசு வீதமும், (மேசையைத் தட்டும் ஒலி) எஞ்சிய யூனிட்களுக்கு யூனிட் ஒன்றுக்கு 3 ரூபாய் வீதமும் கட்டணம் வசூலிக்கப்படும்.

மின்சார சட்டத்தின்படி, இதற்கான உத்தரவை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்தான் வெளியிட வேண்டும் என்பதால், இதற்குரிய விண்ணப்பத்தை மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் மின் வாரியம் உடனடியாக சமர்ப்பித்து தேவையான ஆணையினைப் பெறும். இதன் காரணமாக, தமிழ்நாடு மின் வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் இழப்பான 3 கோடியே 64 இலட்சம் ரூபாயை எனது அரசு மானியமாக வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்தபடியாக, சிறு தேயிலை விவசாயிகளுக்குக் கூடுதல் ஆதரவுத் தொகை பற்றிய அறிவிப்பு. எனது அரசு நீலகிரி மாவட்டத்தில் நிலவி வந்த பசுந்தேயிலையின் விலை வீழ்ச்சியால் பாதிக்கப்பட்ட சிறு தேயிலை விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. குறிப்பாக, ஆகஸ்டு 2001 முதல் பொது விநியோகத் திட்ட நியாய விலைக் கடைகள்மூலம் ஊட்டி டீ விற்பனை செய்யும் திட்டம், வெளிப்படையான ஏலத்தை நடத்தி அதன்மூலம் தேயிலைத் தூளுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்வதற்காக அக்டோபர் 2003–ல் ஆரம்பிக்கப்பட்ட முதல் கணினி ஏல மையமான TEASERVE மூலம் விற்பனை செய்யப்படும் தேயிலைத் தூளுக்கு விற்பனை



வரிச் சலுகை வழங்கியது, சிறு தேயிலை விவசாயிகள் விலை நிலை நிறுத்துதல், நிதியம் திட்டத்தில் உறுப்பினராகச் சேர மானியம் வழங்கியது; மற்றும் தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காகப் புதிய இயந்திரங்கள் கொள்முதல் செய்ய மானியம் வழங்கியது ஆகியவை குறிப்பிடத்தக்கவை ஆகும்.

2005 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல், எனது அரசு சிறு தேயிலை விவசாயிகளின் நலனுக்காக 'சிறு தேயிலை விவசாயிகள் பாதுகாப்புத் திட்டம்' என்னும் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இதன்படி, ஒவ்வொரு சிறு தேயிலை விவசாயிக்கும் ஏக்கர் ஒன்றுக்கு மொத்தம் 2,800 ரூபாய் வழங்கப்படும் என நான் அறிவித்தேன். இதன்படி, 50,155 சிறு தேயிலை விவசாயிகளுக்கு 18 கோடியே 41 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. தேயிலையின் சந்தை நிலவரத்தில் இன்னமும் முன்னேற்றம் ஏற்படாத நிலையில், சிறு தேயிலை விவசாயிகளுக்கு மானியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் என சிறு தேயிலை விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தக் கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலித்து, சிறு தேயிலை விவசாயிகளைப் பாதுகாக்கும் வகையில், அவர்களுக்குக் கூடுதல் ஆதரவுத் தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு மேலும் 1,400 ரூபாய் வீதம் வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் தற்போது அறிவித்துள்ள இத்திட்டத்தின் மூலம் 50,000 சிறு தேயிலை விவசாயிகள் பயனடைவர். இதனால், அரசுக்கு சுமார் 10 கோடி ரூபாய் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்தபடியாக, உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மேலும் சலுகைகள். தங்களது வாழ்வாதாரத்திற்கு வேளாண் தொழில் ஒன்றையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கும் 86 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களும், 51 இலட்சம் சிறு, குறு விவசாயிகளும் மற்றும் அவர்தம் குடும்பத்தினரும் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் பயனடையும் வகையில் உதவிகள் வழங்கி, சமூகப் பொருளாதார நிலையை உயர்த்திட உழவர் பாதுகாப்புத் திட்டம் என்னும் உன்னத சமூக பாதுகாப்புத் திட்டத்தை எனது அரசு செயல்படுத்தி வருகிறது. கிராமங்களில் நிரந்தரமாக வசிக்கின்ற 1.37 கோடி சிறு, குறு விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் இத்திட்டத்தின்கீழ் உதவி பெற தகுதியுடையவர்கள் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், நகர்ப்புறங்களிலும், சிறப்பு ஊராட்சிகளிலும் வசித்து விவசாயத் தொழில் செய்து வருகின்ற வேளாண் தொழிலாளர்களும், சிறு, குறு விவசாயிகளும் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராகச் சேர்ந்து பயன்பெற முடியாத

நிலையில் தங்களுக்கும் இந்த உதவிகள் கிடைத்திட வழிவகை செய்து தரவேண்டுமென்று என்னிடத்தில் கோரிக்கை விடுத்தனர். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இந்தக் கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலித்து, நகராட்சிகளிலும், சிறப்பு ஊராட்சிகளிலும் தங்கி வேளாண் தொழிலை மேற்கொண்டுவரும் சிறு, குறு விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்திட தற்போது நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–00*

விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சிறு, குறு விவசாயிகளின் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் இடைநிற்றலின்றி பள்ளிக் கல்வி பயில்வதை ஊக்குவிக்கவும், அவர்கள் தொடர்ந்து உயர் கல்வி பயின்றிட உற்சாகம் அளிக்கவும், உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கல்வி உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராக உள்ள விவசாயத் தொழிலாளர் மற்றும் சிறு, குறு விவசாயிகளின் குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர் அரசின் வேறு திட்டங்களின் மூலமாகக் கல்வி உதவித் தொகை பெறும்பட்சத்தில் அவர்களுக்கு உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்மூலமாக உதவித் தொகை வழங்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆர்வத்துடன் கல்வி பயிலுகின்ற விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சிறு, குறு விவசாயிகளின் குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியரின் நலனைக் கருத்தில்கொண்டு, இந்த விதியை முற்றிலுமாகத் தளர்த்தி (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அவர்கள் அரசின் வேறு எந்தத் திட்டம்மூலமாக உதவித் தொகை பெற்றாலும்கூட, உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கூடுதலாகக் கல்வி உதவித் தொகை வழங்கலாம் (மேசையைத் தட்டும் ஒலி) என்று நான் தற்போது ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதனால் அரசுக்கு, ஆண்டு ஒன்றுக்கு, 72 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் செலவை இந்த அரசு மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போது அரசு அலுவலர்களுக்கானச் சலுகைகள் பற்றி அறிவிக்கப் போகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அர்ப்பணிப்பு உணர்வுடன் ஏழை எளிய மக்களுக்குச் செய்கின்ற சேவையே மிகச் சிறந்த சேவை என்ற கொள்கையை நான் எப்போதும் கடைப்பிடித்து வருகிறேன். இந்தக் கருத்தே அரசு நிர்வாகத்தின் மையமாக இருக்கவேண்டும் என்பதில் நான் மிகுந்த அக்கறை கொண்டுள்ளேன். ஏழை எளிய மக்களுக்குச்



சேவை புரிவதில் அனைத்து அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் முழு மனதுடன் செயல்பட வேண்டுமென்று அவர்களுடைய ஒத்துழைப்பை நான் நாடியுள்ளேன். ஜனநாயகத்தின் மையக் கருத்தாக நான் கொண்டுள்ள இந்தக் கொள்கையினை முழுமையாகப் புரிந்துகொள்வதில் துவக்கத்தில் சிறிதளவு கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும், 2004 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அரசு அலுவலர் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நடத்தப்பட்ட விவாதங்களின்போது, மக்களுக்குச் சிறந்த சேவை அளிக்கப்படுவதற்கு மிகுந்த முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்பதிலும், அரசு அலுவலர்கள் தங்களுடைய எதிர்பார்ப்புகளை இந்தக் கண்ணோட்டத்தில் அணுகவேண்டும் என்பதிலும் ஒத்த கருத்து ஏற்பட்டது. இந்த அடிப்படையில் அரசு அலுவலர்கள் நல்கிய ஒத்துழைப்பின் காரணமாகவே எனது அரசு, மக்களுக்குக் கொடுத்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றி வருகிறது. இது பாராட்டத்தக்க ஒரு நிலையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) பொதுமக்களின் சேவையில் ஈடுபடும் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குச் சிறந்த வாழ்க்கைத்தரம் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டுமென்பதே எனது எண்ணமாகும். அதேநேரத்தில், தங்கள் கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்து மக்களுக்கு உயர்ந்த சேவை அளிப்பதை தங்களது நோக்கமாக அவர்கள் கொள்ளவேண்டும். 2001 ஆம் ஆண்டில் தமிழகத்தின் நிதி நிலைமை அதள பாதாளத்தில் இருந்தபோதும், அரசு அலுவலர்களுக்கு மாதா மாதம், உரிய காலத்தில் சம்பளம் வழங்கப்படுவதை உறுதி செய்வதில் நான் உறுதியாக இருந்தேன். மத்திய அரசு அளிக்கும் அதே அளவிலான அகவிலைப் படியை மாநில அரசு ஊழியர்களுக்கும் வழங்கும் ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று.

*பிற்பகல் 1–05*

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான சம்பளம் மற்றும் இதர படிகளை முறையாக ஒவ்வொரு மாதமும் வழங்குவதற்கே எனது அரசு மிகுந்த சிரமத்திற்குள்ளானது. முதலில் நிதிநிலை முடங்காமல் பாதுகாப்பதே எங்களது தலையாயப் பணியாக இருந்தது. அதன் பின்னர், நிதிநிலைமையில் முன்னேற்றம் ஏற்பட, ஏற்பட, அதிக சலுகைகளை அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கி வந்துள்ளேன். நிதிநிலைமையைச் சீரமைக்க எனது அரசு மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகளின் காரணமாக, அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் வாழ்க்கைத் தரம் மேலும் உயரும் வகையில் சலுகைகளை அறிவிக்கும் நிலையில் இன்று நாம் உள்ளோம்.

ஊதியம் மற்றும் படிகளில் மிகப் பெரும் அளவிலான திருத்தத்தைக் கொண்டுவர நான் தற்போது முடிவு செய்துள்ளேன்.

தற்போதைய அடிப்படை ஊதியத்தின் 50 சதவிகித அகவிலைப்படியை அடிப்படைச் சம்பளத்துடன் இணைக்க நான் உத்தரவிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இந்த 50 சதவிகித அகவிலைப்படி தனியே அகவிலை ஊதியம் Dearness Pay என சம்பளப் பட்டியில் காட்டப்படும்.

ஓய்வூதியதாரர்களுக்கு இது அகவிலை ஓய்வூதியமாக வழங்கப்படும். Dearness Pension. இது 1-1-2006 முதல் நடைமுறைப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அகவிலை ஊதியம், படிகள் வழங்குவதற்கும், ஓய்வூதியப் பலன்கள் கணக்கிடவும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். இதுகுறித்து மைய அரசு தற்போது கடைபிடித்து வரும் நடைமுறைகள், தமிழக அரசிலும் கடைபிடிக்கப்படும். இது 12.38 இலட்சம் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் மற்றும் 1.37 இலட்சம் ஓய்வூதியதாரர்களுக்கும் கணிசமான பலனை அளிக்கும். அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் இந்தப் பெரும் சலுகையினால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 1,200 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனைக் கருத்தில்கொண்டு நான் தற்போது அறிவித்துள்ள மகிழ்ச்சியளிக்கக்கூடிய இந்தப் புதிய சலுகையை அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் பெரிதும் வரவேற்பார்கள் என்று நம்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) 1,200 கோடி ரூபாய் மதிப்புள்ள இந்தச் சலுகையின் மூலம் கிடைக்கக்கூடிய பலன்கள் ஒரு ஊதியத் திருத்தத்தின் அடிப்படையில் கிடைக்கக்கூடிய சம்பள உயர்வுப் பயன்களுக்கு ஈடாக அமைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது நான் அறிவித்துள்ள இந்தச் சலுகையின் காரணமாக அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் முன்னிலும் பன்மடங்கு ஒத்துழைப்புடனும், உத்வேகத்துடனும் மக்கள் பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வார்கள் என நான் உறுதியாக நம்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நிதிநிலை சீரானதாக இருக்கவேண்டும் என்பதை நான் எப்போதும் வற்புறுத்தி வருகின்றேன். அப்போதுதான் மக்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்க முடியும். நிதிநிலையைச் சீராக நிலைநிறுத்துவதில் தற்போது நாம் வெற்றி கண்டுள்ளோம். சீரான நிதிநிலையை எய்துவதற்காகத்தான், எனது அரசு 29-11-2001 ஆம் நாளிட்ட



அரசாணை எண் 212-ன்படி நேரடி நியமனங்களுக்குத் தடையாணை விதித்தது. நிதிநிலை சீரடைவதற்காக இத்தகைய ஒரு கசப்பான மருந்தை உட்கொள்ள வேண்டிய கட்டாயம் அப்போது இருந்தது. மக்கள் சேவையின் இன்றியமையாதத் தேவையாக உள்ள ஆசிரியர்கள், மருத்துவர், காவலர் போன்ற பணிகளுக்கு ஆரம்பத்திலிருந்தே இந்தத் தடையாணையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. நீதித் துறை, வருவாய்த் துறை, கால்நடை உதவி மருத்துவர், விவசாய அலுவலர் போன்ற பல பணிகளுக்கு இந்தத் தடையாணையிலிருந்து சமீபத்தில் விலக்கு அளிக்கப்பட்டது. எனவே, உண்மையில் அநேகப் பணியிடங்களுக்கு இந்தத் தடையாணையிலிருந்து தற்போது விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் நிதிநிலை தற்போது ஆரோக்கியமாக உள்ளது. எனவே, அரசுப் பணிகளில் நேரடி நியமனத்திற்கு விதிக்கப்பட்டுள்ள தடையாணையை முழுவதுமாக விலக்கிக்கொள்ள நான் உத்தரவிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது இளைஞர்கள் அரசுப் பணியில் சேர ஏதுவாக அமையும். என்னுடைய இந்த முடிவு அனைவராலும் வரவேற்கப்படும் என்பது உறுதி. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அனைத்து அரசுத் துறைகள் மக்களுக்கு வழங்கும் சேவைகளை மேலும் சிறப்பாகச் செய்ய இயலும் என்பதும் திண்ணம். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-10*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூழ்நிலைகள்தான் மனிதனை உருவாக்குகின்றன என்பார்கள். இல்லை, மனிதர்கள்தான் சூழ்நிலையை உருவாக்குகிறார்கள். மனிதர்கள்தான் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இதுதான் எனது கொள்கை, கோட்பாடு. அதற்குத் தேவை இடைவிடாத முயற்சி. (மேசையைத் தட்டும் ஒலி) வான்புகழ் வள்ளுவம் இதைத்தான் கூறுகிறது. முயற்சி என்று சொல்லப்படுகின்ற உயர்ந்த பண்பில்தான் பிறர்க்கு உதவி செய்தல் என்னும் மேம்பட்ட நிலைமை நிலைத்திருக்கிறது என்னும் பொருளில்,

"தாளாண்மை என்னுந் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னுஞ் செருக்கு"

என்று கூறுவார் உலகப் பொதுமறை தந்த வள்ளுவர் பெருமான்.

கடந்த ஐந்தாண்டுகளில் மக்கள் நலம் நாடி நான் எடுத்த முயற்சிகள், வகுத்த திட்டங்கள், மேற்கொண்ட நடவடிக்கைகள், நிகழ்த்திய

சாதனைகள் எத்தனை, எத்தனை! எத்தனை தடைகளையும், எத்தனை இடையூறுகளையும் மீறி இந்தச் சாதனைகள் சாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை இதயம் இருப்பவர்கள் உணர்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகள் இதயத்தால் பார்க்கிறார்கள். எனவே, ஏழைகளை இதயத்தால்தான் பார்க்க வேண்டும் என்பது என் சித்தாந்தம். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகத்தான் அல்லும் பகலும் உழைத்து நான் கடமையாற்றி வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் ஏழைகளின் இதயத்தில் நான் இடம்பெற்றிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆயிரம் வதந்திகளைப் பரப்பினாலும், ஆயிரம் அவதூறுகளைக் கிளப்பினாலும், ஆயிரம் பொய்களை எழுத்திலும், பேச்சிலும் அணிவகுக்கச் செய்தாலும் மக்கள் சக்திக்குமுன் அவை மண்டியிட்டுத்தான் ஆக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் சக்தி எங்களைக் காக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அது கேடயமாக இருக்கிறது, கவசமாகச் செயல்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மக்களுக்காக நானும், எனக்காக மக்களும் இருக்கும்வரை பொய்கள் புறமுதுகிட்டு ஓடத்தான் வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் கடமைகள் தொடர்கின்றன. மக்களுக்கான எங்களது மகத்தான பணிகள் இன்னும் புதிய உற்சாகத்தோடு மேலும் மேலும் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்வோடும் மனநிறைவோடும் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான வாய்ப்பை மக்கள் நிச்சயமாக வழங்குவார்கள் என்ற நம்பிக்கையையும் தெரிவித்து (மேசையைத் தட்டும் ஒலி) விடைபெறுகிறேன், அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது விவாதம் முடிவுற்றது. திருத்தம் வலியுறுத்தப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன். திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. '2006 ஆம் ஆண்டு (குறுக்கீடு) அதை பட்ஜெட் உரையில் வரும்போது கேளுங்கள். '2006 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 13 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்' (குறுக்கீடு) என்ன, என்ன, சொல்லுங்கள்.



**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி. (குறுக்கீடு) திரு. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தெரிந்துகொள்ள விரும்புவது, இந்த ரூ.1,079 கோடி வெள்ள நிவாரணத்திலே ஆயிரம் கோடி மத்திய அரசு கொடுத்தது சேரும். மீதி இருக்கிற 79 கோடி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**டாக்டர் க. பொன்முடி:** Clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இதிலே Clarification ஒன்றும் இல்லை.

'2006 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 13 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்'

என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களால் 17–1–2006 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் மாலை 5–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–14 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[2006 ஜனவரி 20

பேரவை மீண்டும் பிற்பகல் 5–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை*
*ஆராய்வான் செய்க வினை."*

பொருள்வரும் வழிகளையெல்லாம் விரிவுபடுத்தி, அப்பொருளால், பயன்படக்கூடிய செல்வங்கள் பலவற்றையும் வளர்த்து, அவைகளுக்கு நேரக்கூடிய இடையூறுகளையும் ஆராய்ந்து பார்த்து, அவற்றை நீக்க வல்லவரே, செயல் செய்ய முனையவேண்டும்.

## 3. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2006–2007, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006–2007 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கை அளித்தல். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"வெள்ளத்து அனைய இடும்பை அறிவுடையான்*
*உள்ளத்தின் உள்ளக் கெடும்."*

(கடலளவு கொண்ட துன்பங்கள் தொடர்ந்து வந்தாலும், அறிவுடையவர்கள் மன உறுதியோடு செயல்படும்போது அத்துன்பங்கள் மறைந்துவிடும்.)

எழுச்சிமிகு செயலாற்றும் திறனும் சீரிய தொலை நோக்குச் சிந்தனையும் கொண்ட, நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களை வணங்கி, 2005–2006 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளையும், 2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இம்மாமன்றத்தின் முன் வைக்க நான் விழைகின்றேன். அசாதாரண மன உறுதியுடனும், துணிவுடனும், நுண்மாண் நுழைபுலத்துடனும் கடந்த ஐந்தாண்டுகளாக அரசின் நிதி நிருவாகத்தைத் திறமையுடன் கையாண்டு மக்களின் எதிர்பார்ப்புகளையும், விருப்பங்களையும் நனவாக்கிய நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களை மனமாரப் பாராட்டி எனது உரையைத் தொடங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2006 ஜனவரி 20] [திரு. சி. பொன்னையன்]

2. இவ்வரசு, 2001 ஆம் ஆண்டு மே திங்களில் பொறுப்பேற்றபோது, இவ்வரசுக்கு விட்டுச்செல்லப்பட்ட நிச்சயமற்ற நிதிநிலைமையையும் குழப்பமான வளர்ச்சி நிலையையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூரலாம். மாநிலத்தின் நிதிநிலை முற்றிலும் சீர்கேடடைந்திருந்ததுடன், வளர்ச்சிப் பணி ஆட்சி நிரலிலிருந்தே வெளியே தள்ளப்பட்டிருந்த நிலையிலிருந்து, நிதிநிலையைச் சீர்செய்து, வளர்ச்சிப் பாதையில் மீண்டும் இட்டுச் செல்லவேண்டிய பெரும் பொறுப்பை இவ்வரசு ஏற்க வேண்டியிருந்தது.

3. நான் இந்த இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தை மிகுந்த மனநிறைவுடன் தாக்கல் செய்கிறேன். கூர்மதி படைத்த மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையிலான இவ்வரசு, ஐந்தாண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டு மக்கள் இட்ட கட்டளைகளையும் விஞ்சி பெருஞ்சாதனைகளைப் படைத்துள்ளது. அனைவரும் பங்கேற்கும் திட்டமிட்ட சிறந்த வளர்ச்சிக்கு அடிப்படையான சட்டம்–ஒழுங்கு சீரிய முறையில் பராமரிக்கப்பட்டுள்ளது. ஏழை மக்களின் நலனுக்குப் பாதகமின்றி, மிகக் குறுகிய காலத்தில் இவ்வரசு நிதிநிலையில் எய்திய வியத்தகு திருப்புமுனைச் சாதனை, இந்நாட்டிலேயே இதுவரை கண்டிராத, ஈடு இணையற்ற சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) வளர்ச்சி அம்சங்கள், மக்கள் நலன் மற்றும் அரசு நிதியை திறம்பட நிருவகிக்க வேண்டியதன் அவசியம் ஆகியவற்றை இவ்வரசு ஆட்சிநிரலில் மீண்டும் முன்னிலைப்படுத்தியது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி சாதித்து, கருணையும், திறமையும் மிகுந்த ஆட்சியை மக்களுக்குக் கிடைக்கச் செய்து, இம்மாநிலத்தை நிலையான வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பாதையில் இட்டுச் சென்றுள்ளார். தொடர்ந்து மூன்றாண்டுகளாக நிலவிய வறட்சி, அதனைத் தொடர்ந்து 2004 ஆம் ஆண்டில் நிகழ்ந்த சுனாமிப் பேரழிவு மற்றும் அதன் பின்னர் 2005 ஆம் ஆண்டில் பாழ்படுத்திய வெள்ளப்பெருக்கு ஆகியவற்றின் பின்னணியில் பார்க்கும்போது, இச்சாதனை குறிப்பிடத்தக்க சாதனையாகும். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் தெளிவான சிந்தனை, உறுதியான கொள்கை மற்றும் செயல்பாடு ஆகியவை மட்டும் இல்லாதிருந்தால், தமிழ்நாடு சமன்பாட்டுடன் இணைந்த இந்த வளர்ச்சிப் பாதையில் மீண்டும் நடைபோட்டிருக்க முடியாது. தமிழ்நாடு தெளிவான மன உறுதியோடு பீடுநடைபோட்டு இந்திய மாநிலங்களிடையே முதலிடம் வகிப்பதில், இவ்வரசின் மீது மக்கள் கொண்டுள்ள அளவுகடந்த நம்பிக்கை மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. சி. பொன்னையன்] [2006 ஜனவரி 20

பிற்பகல் 5–05

4. இவ்வரசு, 2006 மே திங்களில் தன் முழு ஆட்சிக் காலத்தை வெற்றிகரமாக நிறைவு செய்ய உள்ளது. ஜனநாயக மரபின்படி, 2006–2007 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படுகிறது. இந்த இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தின் அடிப்படையில் முன்னளி மானிய அனுமதி பெறப்படும். புதிய பதின்மூன்றாம் சட்டமன்றப் பேரவை அமைக்கப்பட்ட பின்னர் முழுமையான வரவு–செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படும்.

## நடுத்தர கால நிதிநிலைத் திட்டம்

5. இவ்வரசு 2001 ஆம் ஆண்டு மே திங்களில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, இம்மாநிலத்தைச் சூழ்ந்திருந்த முற்றிலும் சீர்குலைந்திருந்த நம்பிக்கையற்ற நிதி நிலையை, இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூரலாம். 1996–2001 ஆண்டுகளில் மொத்த வருவாய் வரவுகள், அரசின் வருவாய்ச் செலவுகளில் ஏற்பட்ட கட்டுக்கடங்காத உயர்வுக்கு இணையாக அதிகரிக்கத் தவறியதன் விளைவாக, வருவாய்ப் பற்றாக்குறை ஆண்டுதோறும் பெருமளவில் அதிகரித்து வந்தது. இதன் விளைவாக, மலைபோல் உயர்ந்துவந்த வருவாய்ப் பற்றாக்குறையைச் சரிசெய்ய பெரும் அளவில் கடன் வாங்கப்பட்டது. இதனால் நிதிப் பற்றாக்குறை அபாயகரமான அளவிற்கு மேலும் உயர்ந்தது. வட்டிச் சுமையும் உயர்ந்து அச்சுறுத்தும் நிலையை எட்டியது.

6. 1996–2001 ஆண்டுகளில் அரசின் துறைவாரியான செலவு விவரங்கள், வளர்ச்சிச் செலவுகள், அதாவது, சமூகப் பொருளாதார பணிகளுக்கான செலவுகள் குறைந்து, வட்டிப் பொறுப்புகள் மற்றும் நிருவாகச் செலவுகள் ஆகியவற்றை முக்கியக் கூறுகளாகக் கொண்ட பொதுப் பணிகளின் செலவு அதிகரித்ததைக் காட்டின. இம்மாதிரியான வருவாய் வளங்களின் சமன்பாடற்ற ஒதுக்கீட்டினால், மூலதன முதலீட்டுக்கு நிதி கிட்டாமல் போய்விட்டது. இவற்றின் ஒட்டுமொத்த விளைவாக, செய்து முடித்த பணிகளுக்கேகூட தொகை அளிக்க முந்தைய அரசு தவறிய அளவிற்கு 2001 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் சமாளிக்க முடியாத ஒரு நிதி நெருக்கடி ஏற்பட்டது. இதனால் தமிழ்நாட்டில் வளர்ச்சி என்பது முற்றிலுமாக நின்றுபோய்விட்ட நிலை ஏற்பட்டது.



2006 ஜனவரி 20] [திரு. சி. பொன்னையன்]

7. திறம்பட்ட அரசு நிதி நிருவாக மேலாண்மையில் ஒளிவுமறைவற்ற தன்மையையும் மாநில அரசின் பொறுப்புடைமையையும் நிலை நிறுத்த, 2003 ஆம் ஆண்டில், நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டம் என்னும் வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டத்தை இவ்வரசு முன்னோடியாக இயற்றியதை மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூரலாம். சட்டப் பேரவையில் அரசு நடுத்தர கால நிதிநிலைத் திட்டத்தைத் தாக்கல் செய்து, அதில் நிர்ணயிக்கப்பட்ட நிதி இலக்குகள் எய்தப்படுவதை உறுதி செய்யவேண்டும் என்று தமிழ்நாடு 2003 ஆம் ஆண்டு நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டம் (பின்னர் திருத்தப்பட்டவாறு), குறிப்பிடுகிறது.

8. சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட நடுத்தர கால நிதிநிலைத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் அனைத்தையும் இதுவரை இவ்வரசு எய்தியுள்ளது என்பதை இம்மாமன்றத்தில் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். 2008–2009 ஆம் ஆண்டுவாக்கில் நிதிப் பற்றாக்குறையைக் குறைத்து மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவீதத்திற்கு கீழ்க் கொண்டு வரவும், வருவாய்ப் பற்றாக்குறையை அறவே நீக்கவும் ஏற்ற வகையில் மாநிலம் முன்னேற்றப் பாதையில் செல்கிறது. 2006–2007 ஆம் ஆண்டுக்கான நாளது வரையிலான நடுத்தரக் கால நிதிச் சீர்திருத்தத் திட்டத்தை என்னுடைய இடைக்கால வரவு–செலவுத் திட்ட உரையோடு இணைத்துள்ளேன்.@ இதை நான் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் ஏற்றிடுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வேண்டுகிறேன்.

9. தமிழ்நாட்டின் சிறப்புமிகு சீர்திருத்தச் சாதனைகளினால், பன்னிரண்டாவது நிதிக் குழுவின் பரிந்துரைக் கால அளவில் (2005–2010) கணிசமான அளவுக்குக் கடன் தள்ளுபடி பெற இம்மாநிலம் தகுதியுடையதாகிறது. உரிய நேரத்தில் அரசின் நிதி நிருவாகத்தைச் சீரமைத்த மாண்புமிகு முதலமைச்சரின் தொலைநோக்குப் பார்வையின் காரணமாக வருங்காலத்திலும் அரசின் வருவாய் அதிகரிப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இது முந்தைய அரசு 2001 ஆம் ஆண்டில் மாநிலத்தின் எதிர்கால வருவாயை முன்னரே பெற்று, அன்றாட நடைமுறைச் செலவுகளைச் செய்த நிலைக்கு முற்றிலும் மாறான, மனதிற்கு மகிழ்வு தரும் ஒரு நிலை ஆகும்.

10. தமிழ்நாட்டின் நிதிநிலை நிலைப்படுத்தப்பட்ட அதே சமயத்தில், நிதி ஆதாரங்களின் ஒதுக்கீட்டு முறைகளில், வளர்ச்சி மற்றும் மேம்பாடு

@ பக்கம் 271 முதல் 286 வரை இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

நோக்கிலான துறைகளுக்கு மீண்டும் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. ஆண்டு வளர்ச்சி திட்ட ஒதுக்கீடு, 2001–2002 ஆம் ஆண்டில் ரூபாய் 5,200 கோடியாக இருந்து, சாதனை அளவாக 75 சதவீதம் உயர்ந்து, 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 9,100 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் சிறந்த விரிவான, சமூக பாதுகாப்பு வளையம் ஏற்படுத்தப்பட்டிருப்பது குறித்து இம்மாநிலம் பெருமிதமடைகிறது. அரசின் மூலதன வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீடு, 2001 ஆம் ஆண்டிலிருந்ததைவிட, 2005–2006 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் மும்மடங்காக, அதாவது ரூபாய் 4,843.18 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின், அயல்நாட்டு உதவி பெறும் திட்டத் தொகுப்பு ரூபாய் 8,550 கோடியாக (1.90 பில்லியன் அமெரிக்க டாலர்) உயர்ந்து, இந்த வகையில் நாட்டிலேயே அதிக அளவு ஒதுக்கீடு கொண்ட மாநிலங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது.

*பிற்பகல் 5–10*

11. ஐந்தாண்டுகளுக்கும் குறைந்த மிகக் குறுகிய கால அளவில் தமிழ்நாடு, இருள் கவ்விய மந்த நிலையிலிருந்து மீட்கப்பட்டு, நிதி மேலாண்மையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலங்களுள் ஒன்று எனும் முந்தையப் பெருமைக்குரிய நிலையை மீண்டும் எட்டி சாதனை படைத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அளப்பரிய சாதனைக்குரிய பெருமை அனைத்தும், அயராத, தயாள சிந்தையும், தொலைநோக்குப் பார்வையும் கொண்ட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

## தமிழ்நாட்டின் பொருளாதாரம்

12. மாநிலத்தை நிலையான ஏற்றமிகு வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டுமென்ற நோக்கில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வகுத்த 15 அம்சத் திட்டம், தமிழ்நாட்டின் பொருளாதாரம் புத்துயிர் பெறுவதற்கும், நிலைப்படுத்தப்படுவதற்கும் அடித்தளமாக அமைந்துள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் 8.73 சதவீத வளர்ச்சி வீதத்தை எய்திய பின்னர், அண்மையில் பெருக்கெடுத்த வெள்ளங்களினால் பாதகமான விளைவுகள் ஏற்பட்டபோதிலும், மாநிலப் பொருளாதாரம், 2005–2006 ஆம் ஆண்டில் நிலையான விலைகளின் அடிப்படையில் 8 சதவீதத்திற்கும் மேலான வளர்ச்சியை எய்தும் நிலையில் உள்ளது. பொருளாதாரத்தில் மீண்டும் வளர்ச்சி வேகம் ஏற்பட்டுள்ள நிலையில், மக்களுக்கு அதிகமான வாய்ப்புக்களையும் மேம்பட்ட வருவாயினையும்





அளிக்கும் திறன் கொண்ட நிலையான வளர்ச்சியின் புதியதொரு சகாப்தத்தை மாநிலம் எதிர்பார்க்கலாம்.

## ஆண்டுத் திட்டம்

13. 2002–2007 ஆண்டுக் கால அளவில், மிக உயரளவான ரூபாய் 40,000 கோடி அளவுக்கு பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டைச் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் மத்திய திட்டக் குழுவின் ஒப்புதலைப் பெற்றதை மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூரலாம். தமிழ்நாடு, 2002–2003 ஆம் ஆண்டு முதற்கொண்டே, ஒவ்வொரு ஆண்டும் வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை விஞ்சி சாதனை படைத்துள்ளது என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2005–2006 ஆம் ஆண்டின் சாதனை திட்ட ஒதுக்கீடாகிய ரூபாய் 9,100 கோடியும் விஞ்சப்படும். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல்களுக்கு பின்னர், 2006–2007 ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீடு மத்திய திட்டக் குழுவுடன் கலந்தாலோசிக்கப்பட்டு முடிவு செய்யப்படும். இருப்பினும், 2006–2007 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில், நடப்புத் திட்டப் பணிகளுக்கு ரூபாய் 11,709 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீட்டோடு ஒப்பிடும்போது, இந்த 28 சதவீத உயர்வு ஒரு சாதனை அளவாகும். தமிழ்நாடு, பத்தாவது திட்ட ஒதுக்கீடு ரூபாய் 40,000 கோடியை திட்ட கால இறுதிக்குள் எய்தும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

## இயற்கைச் சீற்ற நிவாரண நடவடிக்கைகள்

14. 2005 ஆம் ஆண்டு அக்டோபர் – டிசம்பர் மாதங்களில், நான்கு முறை பெய்த பெருமழையையடுத்து, மாநிலத்தின் 22 மாவட்டங்களில் முன் எப்போதும் கண்டிராத வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். நிவாரணமளிக்கவும், சேதமடைந்த கட்டமைப்புகளைச் சீரமைக்கவும், இவ்வரசு உடனடியாகச் செயல்பட்டு ரூபாய் 1,114 கோடி செலவில், நடவடிக்கை எடுத்தது. ரூபாய் 591 கோடி அளவிற்கு கணிசமான செலவில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நிவாரணப் பணித் திட்டங்களும் இதில் அடங்கும். இவ்வாறு, கணிசமான அளவிலும், தாராளமாகவும் அளிக்கப்பட்ட நிவாரண உதவிகள், மாநிலத்தில், 34 இலட்சம் குடும்பங்களுக்கு மிகுந்த ஆறுதலாக அமைந்தன என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இவை தவிர,

[திரு. சி. பொன்னையன்] [2006 ஜனவரி 20

ரூபாய் 523 கோடி செலவில், சேதமடைந்துள்ள சாலைகள், பாலங்கள், ஏரிகள் போன்ற பொதுக் கட்டமைப்பு வசதிகளை பழுதுபார்ப்பதற்கான பெரும் திட்டமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

15. இவ்வரசு, மொத்தம் ரூபாய் 13,685 கோடி நிதியுதவி, 2.58 இலட்சம் டன் அரிசி மற்றும் 43,200 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவற்றைக் கோரி, மத்திய அரசுக்கு மூன்று விரிவான கோரிக்கை மனுக்களை அளித்தது. மாண்புமிகு முதலமைச்சர், புது டில்லியில் மாண்புமிகு பிரதமரை நேரில் சந்தித்து, மாநிலத்தில் ஏற்பட்டுள்ள பெருமளவு சேதங்கள், அவற்றிற்குத் தேவைப்படும் உதவித் தொகை ஆகியன பற்றி எடுத்துரைத்தார். மத்திய அரசு, இதுவரையில், ரூபாய் 1,000 கோடி நிதியும், 21,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயும் மட்டுமே வழங்கியுள்ளது. மேலும் எவ்விதத் தாமதமுமின்றி, இந்த அரசு கோரியுள்ளவாறு தேவையான நிதியுதவியை உடனடியாக வழங்க வேண்டுமென, மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

பிற்பகல் 5–15

16. 2004 ஆம் ஆண்டு டிசம்பரில் சுனாமியால் ஏற்பட்ட பேரழிவை, இவ்வரசு திறம்படக் கையாண்டவிதம், சர்வதேச அளவில் பாராட்டைப் பெற்றுள்ளது. தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள், உடனடி நிவாரணம் வழங்குதல் ஆகிய முதல் இரண்டுகட்ட நடவடிக்கைகள் உடனடியாகவும் முறையாகவும் செய்து முடிக்கப்பட்டதை உறுதி செய்த பின்னர், நிரந்தர மறுசீரமைப்புப் பணிகள் மற்றும் புனர்வாழ்வுப் பணிகள் ஆகிய மூன்றாம்கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு விரைவாக நடைபெற்று வருகின்றன.

17. முழுவதுமாக சேதமடைந்துள்ள மொத்தம் 45,892 வீடுகளுக்குப் பதிலாக, இயற்கைச் சீற்றங்களைத் தாங்கும் திறனுள்ள வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. பகுதி சேதமடைந்துள்ள 7,670 வீடுகளும் பழுதுபார்க்கப்பட்டு வருகின்றன. மீனளத் துறை முழுமையாகப் புத்துயிரூட்டப்பட்டு, மீனவர்கள் மீண்டும் தங்களுடைய வழக்கமான மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வகைசெய்யப்பட்டுள்ளது. சேதமுற்ற, மீன் இறங்கு தளங்கள், தோணித் துறைகள் முதலியவற்றைப் பழுதுபார்க்கும் பணிகள் விரைவாக நடந்தேறி வருகின்றன. இவை விரைந்து முடிக்கப்படும். பாதிக்கப்பட்டுள்ள 9,130.16 எக்டேர் பரப்பளவு கொண்ட வேளாண் விளை நிலங்களும், தோட்டப்பயிர் நிலங்களும், பண்படுத்தப்பட்டு



2006 ஜனவரி 20] [திரு. சி. பொன்னையன்]

சீரமைக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் விரிவான வாழ்வாதார சீரமைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஏறக்குறைய 50,000 உறுப்பினர்களைக் கொண்ட 3,241 சுய உதவிக் குழுக்கள் ஏற்கெனவே அமைக்கப்பட்டு, உதவி வழங்கப்பட்டுள்ளது.

18. மத்திய அரசு, இதுவரையில் சுனாமி நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளுக்கு, தமிழ்நாட்டிற்கு ரூபாய் 812 கோடி மட்டுமே வழங்கியுள்ள நிலையில், இப்பணிகளுக்கு மாநில அரசால் ரூபாய் 1,136 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இது தவிர, நீண்டகாலச் சீரமைப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டத்திற்கென, இவ்வரசு பல்வேறு பன்னாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து ரூபாய் 2,618 கோடி நிதியுதவி பெற்றுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில், சுனாமிப் புனரமைப்பு மற்றும் வாழ்வாதார உதவிகளுக்காக ரூபாய் 478.65 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**காவல் துறை**

19. கடந்த ஐந்தாண்டுகளில், நாட்டிலேயே தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கு, நிலைமை மிகச் சிறந்து விளங்கியதையும், அவ்வாறே தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருவதையும் உறுதி செய்ததற்கான முழுப்பெருமையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) சந்தனக் கடத்தல்காரனும் காட்டுக் கொள்ளையனுமாகிய வீரப்பனையும், அவனது கூட்டாளிகளையும் ஒழித்துக் கட்டியது இவ்வரசின் மிகச் சிறந்த சாதனைகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

20. 2001 ஆம் ஆண்டிலிருந்து முன் எப்போதும் இருந்திராத வகையில் ரூபாய் 479 கோடி செலவில், இந்த அரசு, காவல் படையை நவீனப்படுத்திவருவதால், தமிழ்நாடு காவல் துறையின் திறமையும் செயலாக்கத் தயார்நிலை திறனும் மேம்படுத்தப்பட்டுள்ளது. 2001–2002 ஆம் ஆண்டில் காவல் துறைக்கான செலவு ரூபாய் 1,091.09 கோடியாக இருந்தது. 2006–2007 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் காவல் துறைக்கான ஒதுக்கீடு ரூபாய் 1,575.98 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

21. மிகப் பெரும் எண்ணிக்கையில் பெண் காவல் பணியாளர்களை நியமித்ததன் மூலம், நம் மாநிலம் நாட்டிற்கே ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறது. தமிழ்நாடு, இந்தியாவிலேயே பெண்களை மட்டுமே கொண்ட

காவல் படைப் பிரிவையும் (Battalion) அதிரடிப் படையையும் ஏற்படுத்திய முதல் மாநிலமாகும். சென்னை மாநகரப் போக்குவரத்துக் காவல் துறையில், பெண் போக்குவரத்துப் பணித்துணைவர்கள் (Traffic Marshals) சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் சென்னை மாநகரில், முறையான போக்குவரத்து மேலாண்மையை உறுதிசெய்வதில், ஆண் காவலர்களோடு இணைந்து பணியாற்றுவார்கள்.

**சிறைச்சாலைகள்**

22. மாநிலத்திலுள்ள சிறைச்சாலைகளின் கட்டமைப்பு வசதிகளை நிலையுயர்த்துவதற்கு, இந்த அரசு உயர் முக்கியத்துவம் அளித்துள்ளது. ரூபாய் 77 கோடி செலவில், சென்னை அருகே புழலில் 212 ஏக்கர் நிலப்பரப்பில் புதிதாகக் கட்டப்பட்டுவரும் சிறை வளாகம் சிறைச்சாலைகளில் உள்ள நெரிசல் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக அமையும். தம்மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்களை ஒப்புக்கொள்ளும் கைதிகள் மீதான வழக்குகளை விரைந்து முடிவு செய்வதற்கு ஏற்றமுறையில், அனைத்து மத்தியச் சிறைச்சாலைகளிலும், தனிச் சிறைச்சாலைகளிலும் கைதிகளுக்கான தீர்வுமன்றங்கள் (Prisoner Adalats) நிறுவிய முதல் இந்திய மாநிலம் தமிழ்நாடே ஆகும். 2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில், சிறைச்சாலைத் துறைக்கு மொத்தம் ரூபாய் 77.19 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்**

23. இந்த அரசு, தீயணைப்புப் பணிகள் துறையின் பெயரை, "தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை" என்று மறுபெயரிட்டுள்ளதுடன் அத்துறையின் கட்டமைப்பு வசதிகளை நிலையுயர்த்துவதற்கும் தீத் தடுப்புத் திறனை மேம்படுத்துவதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மொத்தம் ரூபாய் 10 கோடி செலவில் 49 தீயணைப்பு நிலையக் கட்டடங்கள் கட்டுவதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது. ரூபாய் 14 கோடி செலவில் தீயணைப்பு ஊர்திகள், தண்ணீர் லாரிகள், தீ பாதிக்காத உடைகள், தீ பாதிக்காத கையுறைகள் முதலியவற்றைக் கொள்முதல் செய்வதற்கான பெரும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு ரூபாய் 98.08 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





பிற்பகல் 5–20

**நீதி நிருவாகம்**

24. இந்த அரசின் ஆட்சிக் காலத்தில், தமிழ்நாட்டில் நீதித் துறைக்கான ஒதுக்கீடு பெருமளவு உயர்த்தப்பட்டுள்ளது. 2001–2002 ஆம் ஆண்டில், நீதி நிருவாகத்திற்கு ரூபாய் 141 கோடி செலவிடப்பட்டது. 2006–2007 ஆம் ஆண்டிற்குரிய இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 205.37 கோடியாக அதிகரித்துள்ளது. 2004 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில், மதுரையில், புதிதாக உயர் நீதிமன்றக் கிளை ஒன்றை ஏற்படுத்தியிருப்பது, இந்த அரசின் சீரிய சாதனைகளில் ஒன்றாகத் திகழ்கிறது. மதுரையிலுள்ள புதிய நீதிமன்ற கிளைக்கு ரூபாய் 65.45 கோடி செலவில், நவீன நீதிமன்ற வளாகம் கட்டப்பட்டுள்ளது.

**முதன்மைத் துறை**

**வேளாண்மை**

25. வேளாண் பொருளாதாரத்திற்குப் புத்துயிர் அளிப்பதற்கு, இவ்வரசு உயர் முக்கியத்துவம் அளித்துள்ளது. 2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் வேளாண்மைக்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூபாய் 861.23 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது .

26. வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறு, குறு விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்கள் வாழ்நாள் முழுதும் சந்திக்கும் அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை அளித்ததற்கான முழுப் பாராட்டும் பெருமையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) இவர்களுக்கு விரிவான சமூகப் பாதுகாப்பு அளிப்பதற்குரிய மகத்தானதொரு திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சரின் விவசாயிகள் பாதுகாப்புத் திட்டத்திற்கு, 2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூபாய் 201.56 கோடியாகும்.

27. மாண்புமிகு முதலமைச்சர் தொடங்கியுள்ள பயிர்களைப் பல்வகைப்படுத்தும் இயக்கம் (Crop diversification), விவசாயிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. அதிக அளவு தண்ணீர் தேவைப்படும் பயிர் சாகுபடி முறைகளைக் கைவிட்டு, குறைந்த அளவு நீர் தேவைப்படும் இனிப்புச் சோளம், சர்க்கரை வள்ளி, காட்டாமணக்கு

[திரு. சி. பொன்னையன்] [2006 ஜனவரி 20

போன்ற பயிர்களைச் சாகுபடி செய்ய விவசாயிகளை ஊக்குவித்த, இந்த அரசின் மாற்றுப் பயிர் சாகுபடித் திட்டம் தீவிரமாக செயலாக்கப்பட்டுள்ளது. பொதுவாகப் பயன்படுத்தப்படும் காட்டாமணக்கு வகை 20 சதவீதம் எண்ணெய் தரும். தற்போது 40 சதவீத எண்ணெய் கொடுக்கக்கூடிய கலப்பினக் காட்டாமணக்கு வகையை, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் உருவாக்கி வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டில், ரூபாய் 7.50 கோடி செலவில், அனைத்து 385 வட்டாரங்களிலும், பெரிய அளவிலான வேளாண்மை விரிவாக்கத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

28. இந்த அரசின் விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மாபெரும் வெற்றி அடைந்துள்ளது. சுமார் 3.83 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் சீரமைக்கப்பட்டு, வேளாண் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 2001–2006 ஆம் ஆண்டுகளில், மழைநீர் சேமிப்பிற்காக, மொத்தம் ரூபாய் 26 கோடி செலவில் 8,833 பண்ணைக் குட்டைகள் கட்டப்பட்டுள்ளன. முன்னோடித் திட்டமான துல்லிய பண்ணைத் திட்டம், விவசாயிகளிடம் உற்சாகமான வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்திட்டம் ரூபாய் 10 கோடி செலவில் மேலும் ஏழு மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

29. குறிக்கோள் பணித்திட்ட முறையிலான (Mission mode) தோட்டக்கலை மேம்பாடு அரசின் சீரிய கவனத்தைப் பெற்றுள்ளது. தோட்டக்கலையை மேம்படுத்துவதற்குரிய பெரும் திட்டம் ஒன்று, ரூபாய் 75 கோடி செலவில் 13 மாவட்டங்களில் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிறந்த பெண் குழந்தை ஒன்றுக்கு, ஒரு தென்னங்கன்று வழங்கும் மாண்புமிகு முதலமைச்சரின் திட்டத்தின்கீழ், 3 இலட்சத்திற்கும் மேலாக தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

**கூட்டுறவுக் கடன்**

30. தமிழ்நாட்டில் விவசாயிகளின் கடன் சுமையைக் குறைப்பதற்கு, இவ்வரசு எப்போதும் உறுதியான முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளது. 2001–2002 ஆம் ஆண்டில், பயிர்க் கடன்களின் மீது நிலுவையிலிருந்த ரூபாய் 311 கோடி வட்டித் தொகை தள்ளுபடி செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2002–2003 ஆம் ஆண்டில் ரூபாய் 61 கோடி வட்டித் தொகையும் 2003–2004 ஆம் ஆண்டில் ரூபாய் 62 கோடியும் இதே போன்று தள்ளுபடி செய்யப்பட்டது. 2004–2005 ஆம் ஆண்டில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி



2006 ஜனவரி 20] [திரு. சி. பொன்னையன்]

ஜெ ஜெயலலிதா அவர்கள், 31–3–2004 ஆம் நாள் வரையில், விவசாயிகள் வாங்கிய ரூபாய் 2,598 கோடி அளவிலான குறுகிய கால பயிர்க் கடன்களின், அசல் தொகையை திருப்பிச் செலுத்துவதற்கான தவணையை இரண்டு ஆண்டுகள் ஒத்திவைத்து கடன் தவணைக் கால அளவை ஐந்து ஆண்டுகளாக மாற்றியமைத்து ஆணையிட்டார்.

பிற்பகல் 5–25

31. மேற்கொண்டும் நிவாரணம் அளிக்கும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2006 ஆம் ஆண்டு ஜூன் 30 வரையிலான பயிர்க் கடன்கள் குறித்த ரூபாய் 645 கோடி வட்டித் தொகை முழுவதையும் தள்ளுபடி செய்ய அனுமதிக்கும் மற்றொரு மாபெரும் வட்டித் தள்ளுபடித் திட்டத்தை அறிவித்துள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) தொடக்கக் கூட்டுறவு மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலமாக வழங்கப்பட்டுள்ள நீண்ட காலக் கடன்களையும் நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்கப்பட்டுள்ள வேளாண் அல்லாத பிற கடன்களையும் கொடுத்துத் தீர்க்க வகைசெய்யும் ஒருமுறை கடன்தீர்வுத் திட்டம், 2006 ஆம் ஆண்டு ஜூன் 30 வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக, இவ்வரசு தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகளின் பயனுக்காக, பெரும் கடன் நிவாரணத் திட்டத்தை மேற்கொண்டிருக்கும் அதே வேளையில், கூட்டுறவுக் கடன் வழங்கு அமைப்புகள் புத்துயிர் பெறுவதையும் உறுதி செய்துள்ளது.

**பாசனம்**

32. வெவ்வேறு பருவநிலைக் கோளாறுகளால் ஏற்படும் இடர்பாடுகளிலிருந்து விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு, இவ்வரசு எப்போதுமே உயர் முன்னுரிமை அளித்துவந்துள்ளது. திறமையான நீர் ஆதார மேலாண்மையை உறுதி செய்வதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன. ரூபாய் 1,083 கோடி செலவிலான, நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் (WRCP) வெற்றிகரமாக முடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்த அரசு, ரூபாய் 3,900 கோடி மூலதனச் செலவில் "பாசன வேளாண்மையை நவீனப்படுத்துதல் மற்றும் நீர் ஆதார மேலாண்மைத் திட்டம்" என்னும் பெயரில், மேலும் ஒரு பெருந்திட்டத்தை உலக வங்கியின் உதவியோடு செயல்படுத்தக் கருதியுள்ளது. இத்திட்டம், தற்போது, ஏற்பளிக்கப்படுவதற்கான இறுதி நிலையை எட்டியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், மாநிலத்தின், அனைத்து 17 ஆற்று வடிநிலப் பகுதிகளிலும் ஒருங்கிணைந்த நீர் ஆதார மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

அனுமா நதியின் துணை வடிநிலப் பகுதிகளில், ரூபாய் 53 கோடி மொத்தச் செலவில், புனரமைப்புப் பணிகளுக்கான முன்மாதிரித் திட்டம் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது. 2001–2006 ஆம் ஆண்டுகளில், ஊரக அடிப்படைக் கட்டமைப்பு வளர்ச்சி நிதியின்கீழ், நபார்டு வங்கியின் உதவியுடன், மொத்தம் 619 பாசனத் திட்டங்கள் ரூபாய் 635.68 கோடி செலவில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

33. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நதிகள் அனைத்தும் இணைக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளார். வாய்ப்புக் கிடைக்கும் ஒவ்வொரு அரங்கிலும், குண்டாறு நதியுடன் மகாநதியை இணைக்கும் தீபகற்ப ஆறுகளின் இணைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் வலியுறுத்தி வந்துள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு பலமுறை கோரிக்கை வைத்தபோதிலும், தீபகற்ப ஆறு இணைப்புத் திட்டத்திற்கு மத்திய அரசு இதுவரையிலும் அனுமதி அளிக்காதது துரதிருஷ்டவசமானதாகும். இத்திட்டத்தை விரைவில் தொடங்க வேண்டுமென இம்மன்றம் வலியுறுத்துகிறது.

**கால்நடை வளர்ப்பு**

34. கால்நடைகளின் தரத்தை நிலையுயர்த்தவும், தமிழ்நாட்டில் கால்நடை பராமரிப்புப் பணிகளை விரிவுபடுத்தவும் இவ்வரசு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கால்நடைகளுக்கு ஏற்படும் ஆந்த்ராக்ஸ், கோமாரி மற்றும் சப்பை நோய் (Black Quarter) போன்ற நோய்களைத் தடுக்கும் தடுப்பூசி போடும் பெரும் திட்டம், 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 17.35 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது, மாநிலத்தில் கால்நடைகள் தொடர்பான நோய்கள் பரவுவதைத் தடுத்துள்ளது.

35. நுகர்வோர் செலுத்தும் விலையை அதிகரிக்காமல், பால் கூட்டுறவுச் சங்கங்களின் பால் கொள்முதல் விலையை ஒரு லிட்டருக்கு ரூ. 1 உயர்த்த, மாண்புமிகு முதலமைச்சர் எடுத்த முடிவு, பால் வழங்கும் விவசாயிகளுக்கு ஆதாயமான விலை கிடைப்பதை உறுதி செய்துள்ளது. 2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில், கால்நடை வளர்ப்பு மற்றும் பால்வள மேம்பாட்டிற்கு மொத்தம் ரூபாய் 240.34 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.





**மீனள மேம்பாடும் மீனவ சமுதாயத்தின் நலனும்**

36. சுனாமி பேரழிவிற்குப் பின்னர், தமிழ்நாட்டில் மீனளத் துறை மிகக் குறுகிய கால அளவில் புத்துயிர் பெற்றதற்கு, இந்த அரசின் அயராத முயற்சியே காரணம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வர். 2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் மீனளத் துறைக்கு மொத்தம் ரூபாய் 91.92 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

37. இந்த அரசு, உலக வங்கியின் நிதியுதவியுடன் ரூபாய் 35.78 கோடி செலவில், பழையாறு, நாகப்பட்டினம், மல்லிப்பட்டினம் மற்றும் சின்னமுட்டம் ஆகிய இடங்களில் மீன்பிடி துறைமுகங்களை நிலையுயர்த்தி நவீனப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன், ரூபாய் 11.47 கோடி செலவில், முடசலோடை, பழையாறு, சேதுபாவாசத்திரம், மல்லிப்பட்டினம், கோட்டைபட்டினம், ஜகதாபட்டினம், புன்னக்காயல், தூத்துக்குடி மற்றும் சின்னமுட்டம் ஆகிய மீன்பிடி துறைமுகங்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தவிர, சென்னை மற்றும் தூத்துக்குடி மீன்பிடி துறைமுகங்களை நவீனப்படுத்தி நிலையுயர்த்தும் பணிகள் ரூபாய் 12.42 கோடி செலவில் நடைபெற்று வருகின்றன. இந்த அரசு, இராசாக்கமங்கலம்துறையில் ரூபாய் 22 கோடி செலவிலும் முட்டத்தில் ரூபாய் 39 கோடி செலவிலும், பொதுத் துறை–தனியார் துறை பங்கேற்பின் கீழ், மீன்பிடி துறைமுகம் கட்டுவதற்கு ஏற்பளித்துள்ளது, தேங்காய்பட்டினத்தில் மீன்பிடி துறைமுகம் கட்டுவதற்கு மாநில அரசு தன்னுடைய பங்கான ரூபாய் 15.28 கோடிக்கு ஏற்கெனவே ஒப்பளித்திருக்கும் நிலையில், மத்திய அரசு தனது பங்குத் தொகைக்கு விரைவில் ஒப்பளிக்க வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது.

பிற்பகல் 5–30

**சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள்**

38. இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் சுற்றுச்சூழல் மற்றும் வனங்களுக்கான ஒதுக்கீடு மொத்தம் ரூபாய் 270.03 கோடி ஆகும். பன்னாட்டு கூட்டுறவிற்கான ஜப்பானிய வங்கியின் நிதியுதவியுடன், ரூபாய் 567 கோடி திட்டச் செலவில் செயற்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை II-க்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூபாய் 99.64 கோடியும் இதில் அடங்கும். இத்திட்டத்தின்கீழ், 2005–2013 ஆண்டுகளில்,

[திரு. சி. பொன்னையன்] [2006 ஜனவரி 20

800 கிராமங்களில் உள்ள சுமார் 1,775 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிலான தரங்குறைந்த காடுகள் மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வரப்படும்.

## ஊரக வளர்ச்சி

39. மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக விரிவான அளவில் கட்டமைப்பு வசதிகளை நிலை உயர்த்துவதற்கு இவ்வரசு மிக உயர்வான முன்னுரிமை அளித்துள்ளது. அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கென பல்வேறு திட்டங்கள் இருக்கின்றபோதிலும், ஊரகப் பகுதிகளிலும் நகர்ப்புறப் பகுதிகளிலும் இன்னும் போதிய அடிப்படை வசதிகள் இல்லை. மக்களின் தேவைகளுக்கேற்ப அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதற்கான பணிகளை மேற்கொள்ள, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தக்க நிதி அளிக்கும் பெரும் திட்டம் ஒன்று ரூபாய் 250 கோடி செலவில் அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டுள்ளது.

40. பள்ளிகளில் 100 சதவீத அளவிற்கு குழந்தைகளைச் சேர்த்தல், சிசு இறப்பைக் குறைத்தல், பெண் கருக்கொலையை ஒழித்தல், வறுமைக் குறைப்பு, கிராமச் சுகாதாரம் போன்ற குறிப்பிடப்பட்ட சமூக நோக்கங்களை எய்துவதற்கு வகைசெய்யும் முன்னோடித் திட்டமான, நமது கிராமம் திட்டத்தின்கீழ், கிராம ஊராட்சிகள் ஊக்கப்படுத்தப்பட்டு பரிசுகளும் அளிக்கப்படுகின்றன. மக்களிடையே இத்திட்டம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்காக ரூபாய் 175 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

41. இவ்வரசால் செயல்படுத்தப்பட்டுவரும் கிராம தன்னிறைவுத் திட்டம், மக்கள் பங்கேற்புடன் ஊரகப் பகுதிகளில் தேவைகளின் அடிப்படையில் கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதில் கவனம் செலுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கு மக்களிடையே பெரும் வரவேற்பு கிடைத்துள்ளதால் 2005–2006 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீட்டில் இத் திட்டத்திற்கான நிதியொதுக்கம் ரூபாய் 75 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

## ஏழை எளியோருக்கான வீட்டு வசதி

42. ஊரகப் பகுதிகளில் ஏழை எளியோருக்கு உறைவிடப் பாதுகாப்பு அளிப்பதற்காக கணிசமான நிதி ஆதாரங்களை இவ்வரசு முதலீடு செய்துள்ளது. 2001–2005 ஆம் ஆண்டுகளில் ஊரக ஏழைமக்களுக்காக



2006 ஜனவரி 20] [திரு. சி. பொன்னையன்]

ரூபாய் 560.88 கோடி செலவில் 1.44 இலட்சம் புதிய வீடுகள் கட்டப்பட்டு 75,000 கச்சா வீடுகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 2005–2006 ஆம் ஆண்டில், ரூபாய் 173.30 கோடி செலவில் ஏறக்குறைய 43,000 புதிய வீடுகள் கட்டும் பணியும், 22,000 கச்சா வீடுகளைத் தரம் உயர்த்தும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

43. 2005–2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட உரையில் அறிவித்த கூரை மற்றும் கச்சா வீடுகளை நிரந்தர வீடுகளாக நிலையுயர்த்தும் திட்டம் ஏழை மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். பரவலான தேவைகளைக் கருத்தில் கொண்டு, ஒரு இலட்சம் கச்சா வீடுகளை நிலையுயர்த்துவதற்கான ஆண்டு இலக்கு ரூபாய் 12.50 கோடி கூடுதல் மானியச் செலவில் 1.5 இலட்சம் வீடுகளாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் இத்திட்டத்தின்கீழ் மானியத்திற்காக ரூபாய் 37.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டில் ரூபாய் 200 கோடி செலவில் மேலும் 2 இலட்சம் கச்சா வீடுகள் நிரந்தர வீடுகளாக நிலையுயர்த்தப்படும். இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 50 கோடி மானியமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர, 1991 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஊரகப் பகுதிகளிலும் சிறப்பு கிராம ஊராட்சிப் பகுதிகளிலும் அரசால் கட்டப்பட்ட ஓட்டு வீடுகளைப் பழுது பார்ப்பதற்காக அடிப்படை வசதிகள் திட்டத்தின்கீழ் ரூபாய் 52.88 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டுடன், 1999 ஆம் ஆண்டிற்கு முன்னர் அரசால் கட்டப்பட்டு சிதைந்த நிலையிலுள்ள ஓட்டு வீடுகள் அனைத்தையும் பழுது பார்க்கும் பணி முடிக்கப்படும்.

44. நகர்ப்புற ஏழை மக்களின் வீட்டு வசதிப் பிரச்சினைகளை இவ்வரசு நன்கு உணர்ந்துள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் ரூபாய் 250 கோடி செலவில் நகர்ப்புற ஏழை மக்களுக்காக 30,000–க்கும் அதிகமான வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 2005–2010 ஆண்டுகள் கால அளவில், ரூபாய் 250 கோடி செலவில், நகர்ப்புற குடிசைப் பகுதி வீட்டு வசதி மேம்பாட்டிற்கான செயல் திட்டத்திற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது.

## குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு

45. இவ்வரசு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்துள்ளது. 2001–2005 ஆம் ஆண்டுகளில் இம் மாநிலத்தில் 29,970 ஊரகக் குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டு இறுதிக்குள் மேலும் 4,233 ஊரகக் குடியிருப்புகளுக்கு இவ்வசதி வழங்கப்படும். குறைந்தபட்சத் தேவைகள்

[திரு. சி. பொன்னையன்] [2006 ஜனவரி 20

திட்டத்தின்கீழ், ஊரகக் குடிநீர் வழங்கலுக்காக, 2006–2007 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 411 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 5–35

46. கடந்த ஐந்தாண்டுகளில் ரூபாய் 60 கோடி செலவில் பாரம்பரிய குடிநீர் ஆதாரங்களைப் புதுப்பிக்கும் பெரும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. குடிநீர் வழங்கல் திட்டங்கள் நீடித்து செயல்படுத்தப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு நீர்வளத்தைப் பெருக்குவதற்காக, தடுப்பணைகள், கசிவுநீர்க் குட்டைகள், நிலத்தடி இயற்கை நீர்க்கால்களை அமைத்தல் போன்ற மொத்தம் 2,244 நீர்வள மறுசெறிவூட்டு அமைப்புகள் (Recharge structures) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

47. ஊரக சுகாதார நிலையை, 2001 ஆம் ஆண்டில் இருந்த 15 சதவீதத்திலிருந்து 2005 ஆம் ஆண்டில் 57 சதவீதமாக அதிகரித்த மகத்தான சாதனைக்காக, தமிழ்நாடு பெருமளவில் பாராட்டைப் பெற்றுள்ளது. அனைத்துக் கிராம ஊராட்சிகளிலும் ரூபாய் 278 கோடி செலவில் மொத்தம் மகளிருக்கான 13,062 ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சரின் தூய்மையான கிராம இயக்கம் நாட்டிலேயே முன்னோடியாகத் திகழ்கிறது. மாநிலம் முழுவதும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் மற்றும் குழந்தைகளின் தீவிர பங்கேற்புடன் சுற்றுச்சூழல்ரீதியாக நீடித்திருக்கக்கூடிய துப்புரவு மாதிரிகள் பிரபலப்படுத்தப்பட்டு வருகின்றன.

48. நகர்ப் பகுதிகளில் பாதுகாப்பான குடிநீர், முறையான வடிகால் மற்றும் கழிவு நீரகற்று அமைப்புகள் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்காக இவ்வரசு செம்மையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில், ரூபாய் 64 கோடி செலவில் 21 நகராட்சிகளில் நீர்வழங்கல் மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 24 மாவட்டத் தலைமையிட நகரங்களிலும், ஏனைய 13 நகரங்களிலும் பாதாளச் சாக்கடை வசதித் திட்டங்களைச் செயற்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது. கடலூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, நாகர்கோவில், நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தேனி, திருவண்ணாமலை, திருவள்ளூர், திருவாரூர், தூத்துக்குடி, உதகமண்டலம், வேலூர், விழுப்புரம், விருதுநகர்,



2006 ஜனவரி 20] [திரு. சி. பொன்னையன்]

கோயம்புத்தூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட தலைமையிட நகரங்களும், மற்ற 13 நகரங்களான அம்பத்தூர், திருவொற்றியூர், பல்லாவரம், தாம்பரம், கத்திவாக்கம், மணலி, பூந்தமல்லி, பம்மல், மாதவரம், ஆவடி, மதுரவாயல், உள்ளகரம்–புழுதிவாக்கம் மற்றும் அனகாபுத்தூர் ஆகியனவும் இவற்றில் அடங்கும். ரூபாய் 22 கோடி செலவில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவு மேலாண்மை முறை நிலை உயர்த்தப்பட்டு வருகிறது. 2006–2007 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்திற்காக ரூபாய் 649.62 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகளின் மேம்பாடு

49. ஊரகப் பகுதிகளை இணைப்பதிலும், மாநிலம் முழுவதிலும் உள்ள சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் கட்டமைப்பின் தரத்தை உயர்த்துவதிலும் தமிழ்நாடு விரைவான முன்னேற்றம் கண்டுள்ளது. 2001–2002 ஆம் ஆண்டில் சாலைகள் மற்றும் பாலங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபாய் 562.52 கோடி என்றிருக்க, 2005–2006 ஆம் ஆண் டு திருத்த மதிப்பீட்டில் இதற்கான ஒதுக்கீடு ரூபாய் 3,019.84 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மாநிலத்தின் சாலைக் கட்டமைப்பு வசதிகளைப் பராமரிப்பதற்கான நிதியொதுக்கம் 2001–2002 ஆம் ஆண்டில் ரூபாய் 120.37 கோடியாக இருந்து 2006–2007 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஏறக்குறைய ஏழு மடங்கு அதிகரிக்கப்பட்டு ரூபாய் 803.87 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

50. 2001–2006 ஆண்டுகளில், ரூபாய் 6,398.56 கோடி செலவில் 52,676 கிலோ மீட்டர் தொலைவுக்கு சாலைக் கட்டமைப்புகளைப் புதுப்பித்து, அகலப்படுத்தி வலுப்படுத்தும் பணிகளையும், 993 புதிய பாலங்களைக் கட்டும் பணிகளையும் அரசு மேற்கொண்டுள்ளது. 2006–2007ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் சாலைகள் மற்றும் நெடுஞ்சாலை மேம்பாட்டுக்காக ரூபாய் 3,529.90 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

## போக்குவரத்துத் துறை

51. விமானப் பயணிப் போக்குவரத்து மற்றும் விமானங்களின் எண்ணிக்கை ஆகியவற்றில் ஏற்பட்ட உயர்வு சதவீதத்தில் நாட்டிலுள்ள பிற பெருநகர்களுடன் ஒப்பிடுகையில் சென்னை, 2004–2005 ஆம் ஆண்டில் அதிகபட்ச வளர்ச்சியை அடைந்துள்ளது. தென் கிழக்கு ஆசியா மற்றும் தொலை கிழக்கு நாடுகளுக்கு இந்தியாவின்

[திரு. சி. பொன்னையன்] [2006 ஜனவரி 20

நுழைவாயிலாக சென்னை உருவாகும் வகையில், விமான நிலைய கட்டமைப்பு வசதிகளை நிலை உயர்த்துவதற்கான முன் முயற்சிகளை இவ்வரசு எடுத்துள்ளது. விமான நிலைய மேம்பாட்டுத் திட்டத்திற்கு 583 எக்டேர் நிலத்தை இந்திய விமான நிலையங்கள் குழுமத்திற்கு இலவசமாக அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இசைவளித்துள்ளார். நிலம் கையகப்படுத்தும் பணியும் தொடங்கிவிட்டது.

பிற்பகல் 5-40

52. மத்திய அரசு டீசல் விலையைப் பலமுறை பெருமளவில் உயர்த்தியபோதும், இவ்வரசு, நாட்டிலேயே மிகக் குறைந்த கட்டண வீதத்தில் மிகச் சிறந்த முறையில் பொதுப் பேருந்து போக்குவரத்து வசதிகளை தொடர்ந்து அளித்துவருகிறது. மாணவர்களுக்கான இலவசப் பேருந்துப் பயணத் திட்டத்திற்காக 2005-2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட ரூபாய் 237.31 கோடி, திருத்த மதிப்பீடுகளில் ரூபாய் 345.31 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

**மின் துறை**

53. தமிழ்நாடு மின் வாரியம் கடந்த ஐந்தாண்டுகளில் மாநிலம் மின் வெட்டின்றி இருப்பதை உறுதி செய்து, தற்போதும் அந்நிலையை தொடர்ந்து வருகிறது. இதே மகிழ்ச்சிகரமான நிலை எதிர்காலத்திலும் தொடர்வதை உறுதி செய்வதே எங்களுடைய முயற்சியாக இருந்து வருகிறது. நடப்பு நிதியாண்டின் இறுதியில் தமிழ்நாட்டுக்குக் கிடைக்கும் மொத்த நிறுவு உற்பத்தித் திறன் 10,000 MW ஆக இருக்கும் நிலையில், 2005-2010 ஆண்டுகளில் கூடுதலாக 5,000 MW உற்பத்தித் திறனை நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

54. மின் வினியோக முறைகளை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு மின் வாரியத்தின் தற்போதைய மூலதன ஒதுக்கீடான ரூபாய் 1,495 கோடி, 2006-2007 ஆம் ஆண்டில், ரூபாய் 1,798 கோடியாக அதிகரிக்கப்படும். 2006-2007 ஆம் ஆண்டில், ரூபாய் 196 கோடி செலவில், புதிய துணை மின் நிலையங்களை அமைத்தல், புதிய மின்னழுத்த மாற்றிகளை நிறுவுதல், தற்போதுள்ள மின்னழுத்த மாற்றிகளின் திறனை அதிகரித்தல் ஆகிய நடவடிக்கைகள் மூலம் தமிழ்நாடு மின் வாரியம் ஊரக மின் வழங்கல் கட்டமைப்பை நிலையுயர்த்தும். 2005-2006 ஆம் ஆண்டில், 45,000 விவசாயிகளுக்கு வேளாண் பம்பு செட்டு மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில்



2006 ஜனவரி 20] [திரு. சி. பொன்னையன்]

50,000 விவசாயிகளுக்கு வேளாண் பம்பு செட்டு மின் இணைப்புகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம்**

55. சென்னை மாநகரை, உலகத்தரம் வாய்ந்த மாபெரும் நகராக மாற்றவேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இலட்சியம் நிறைவேறி வருகின்றது. ரூபாய் 18,000 கோடி மதிப்பீட்டில், 10 ஆண்டுகாலத் திட்டமாக செயல்படுத்தப்பட்டுவரும் "சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம்", வளர்ந்துவரும் இந்தப் பெருநகரின் அனைத்து கட்டமைப்பு வசதித் தேவைகளையும் விரிவான முறையில் நிறைவேற்றி வருகிறது. பூங்காக்கள், நடைபாதைகள் போன்ற சென்னை மாநகரை அழகுபடுத்துவதற்கான நடவடிக்கைகள், "என்றென்றும் சென்னை" என்னும் முன்முயற்சியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

56. சென்னை மாநகரிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலுமுள்ள சாலைக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு, இந்த அரசு ரூபாய் 1,328 கோடி ஒதுக்கியுள்ளதை அறிந்து மாண்புமிகு உறுப்பினர்கள் பெருமகிழ்ச்சி அடைவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதில், 273 கிலோ மீட்டர் தொலைவிற்கான சாலைகளின் மேம்பாட்டுப் பணிகளும் 11 பாலங்களின் கட்டுமானப் பணிகளும் அடங்கும். சென்னையில் ஏற்பட்டுள்ள விரைவான பொருளாதார வளர்ச்சி மற்றும் அதன் விளைவாக அதிகரித்துவரும் போக்குவரத்து, அதற்குத் தேவைப்படும், விரைவான மற்றும் செம்மையான போக்குவரத்து வசதி ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டியிருக்கிறது. எனவே, சென்னையில், பொதுத் துறை-தனியார் துறை பங்கேற்பின் அடிப்படையில், 300 கிலோ மீட்டர் நீள வழிப் பாதையில் விரைவும் திறனுமிக்க மோனோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்த இவ்வரசு முடிவு செய்துள்ளது.

57. சென்னை மாநகரில் ஏற்பட்ட கடும் தண்ணீர்ப் பற்றாக்குறையை சமாளிக்க இவ்வரசு ஆற்றியுள்ள பணியை, சென்னை குடிமக்கள் என்றென்றும் நினைவில் கொள்வார்கள். நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் புதிய வீராணம் திட்டத்தை மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் முடிவு செய்து, அதனை மிகக் குறுகிய காலத்தில் செயல்படுத்தியது, சென்னைவாழ் மக்களுக்கு பெருமகிழ்ச்சியை அளித்துள்ளது. சென்னை மாநகரில் வழங்கப்படும்

[திரு. சி. பொன்னையன்] [2006 ஜனவரி 20

குடிநீர் அளவை மேலும் உயர்த்த உதவக்கூடிய நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை செயல்படுத்த இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. இத்திட்டத்தை உடனடியாக செயல்படுத்துவதற்கு ஏதுவான வகையில், இனியும் தாமதிக்காமல் இத்திட்டத்திற்கான சுற்றுச்சூழல் குறித்த இசைவை விரைந்து அளிக்குமாறு, இவ்வரசு, மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது.

**மனித வள மேம்பாடு**

**பள்ளிக் கல்வி**

58. தரமான கல்வியைப் பெறுவதற்குரிய வசதிகளை மாநிலம் முழுவதும் அளிக்கும் பொருட்டு, 2001–2006 ஆம் ஆண்டுகளில், சாதனை எண்ணிக்கையாக, 1,274 புதிய ஆரம்பப்பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள 2,790 ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளாக நிலையுயர்த்தப்பட்டுள்ளன. இத்துடன், 394 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 406 உயர்நிலைப் பள்ளிகள் மேனிலைப் பள்ளிகளாகவும் நிலையுயர்த்தப்பட்டுள்ளன. 2001–2006 ஆம் ஆண்டுகளில், 1,583 அரசு உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளில், கூடுதல் வகுப்பறைகள், பரிசோதனைக் கூடங்கள், குடிநீர் மற்றும் கழிவறை வசதிகள் போன்ற கட்டமைப்பு வசதிகள் ரூபாய் 710 கோடி செலவில் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான பெருமளவு முதலீடுகள், பள்ளிகளில் மாணவ மாணவிகளின் சேர்க்கை, அவர்கள் தொடர்ந்து பயில்வதை உறுதி செய்தல் மற்றும் பள்ளிகளின் தேர்ச்சி வீதம் ஆகியவற்றில் நலந்தரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

பிற்பகல் 5–45

59. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ மாணவியருக்கும், இலவச பாடப்புத்தகம் வழங்கும் அரசின் திட்டம் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மாணவர்கள், பள்ளிகளுக்கு எளிதில் சென்றுவர ஏதுவாக, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ மாணவியர்க்கு மிதிவண்டிகளை வழங்கும் திட்டம், இவ்வரசின் மற்றுமொரு முன்னோடித் திட்டமாகும். 2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில், பள்ளிக் கல்விக்கென மொத்தம் ரூபாய் 4811.81 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



)06 ஜனவரி 20] [திரு. சி. பொன்னையன்]

**யர் கல்வி**

60. இவ்வரசு நிறுவிய தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகம், ஊரக ற்றும் நகர்ப்புறப்பகுதிகளில், தங்களுடைய குடும்ப சூழ்நிலைக் ாரணமாகவும் தொழில் வகை காரணமாகவும் முழுநேரக் கல்லூரிகள் ற்றும் பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியைத் தொடர இயலாத ழ்நிலையில் உள்ளவர்கள், உயர் கல்வியைப் பெற வாய்ப்பளித்துள்ளது. )ப் பல்கலைக்கழகத்தில் 50,000-க்கு மேற்பட்ட மாணவ மாணவியர் ல்வேறு படிப்புகளில் சேர்ந்து பயின்று வருகின்றனர். சிறப்புமிகு 'சன்னைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டு 150 ஆண்டுகள் 'றைவடைவதைக் கொண்டாடி வருகிறது. இதனை முன்னிட்டு, அரசு )ப்பல்கலைக்கழகத்திற்கு புதிய மீநுண் தொழில்நுட்ப மையம் (Centre r Nanosciences) ஒன்றைத் தொடங்குவதற்கு, ரூபாய் 5 கோடி மானியம் ழங்குகிறது.

**ளைஞர் நலன் – விளையாட்டு மேம்பாடு**

61. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுக்காக, 001–2002-ல் ரூபாய் 20.98 கோடி செலவிடப்பட்டது. 2006–2007 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் இதற்கான தியொதுக்கம் ரூபாய் 30.42 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

62. விளையாட்டுக் கல்விக்கென தனியானதொரு பல்கலைக்கழகம் ஏற்படுத்திய பெருமை மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களையே சாரும். இது நாட்டிலேயே, முதல் இணைப்பு வகை விளையாட்டுப் பல்கலைக்கழகமாகும். திறனாளிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 80-க்கும் அதிகமான விளையாட்டு வீரர்கள் ங்கள் திறமையை வளர்த்துக் கொள்வதற்காக உதவி செய்யப்பட்டுள்ளது. சென்னை மற்றும் பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் இரு செயற்கை ஹாக்கி தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னையிலுள்ள உள்விளையாட்டரங்கத்தில், வழுக்கு நடை தளமும் (roller skating rink) வழுக்கு நடை ஹாக்கி விளையாடும் தளமும் (roller skating hockey rink) அமைக்கப்பட்டுள்ளன. சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டி, உலக வாலிபால் தேர்வுப் போட்டி, சேம்பியன் கோப்பை ஹாக்கி போட்டி போன்ற பெருமைமிக்க உலக அளவிலான விளையாட்டுப் போட்டிகளுக்கு உதவி செய்வதன்மூலம், சென்னையை இந்தியாவின் விளையாட்டு மையமாக ஆக்க இவ்வரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

[திரு. சி. பொன்னையன்] [2006 ஜனவரி 20

**மக்கள் நல்வாழ்வு—குடும்ப நலன்**

63. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலனுக்காக, 2001–2002 ஆம் ஆண்டில் ரூபாய் 1135.98 கோடி செலவிடப்பட்டது. 2006–2007 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் இதற்கான நிதியொதுக்கம் ரூபாய் 1731.33 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 2001–2002 ஆம் ஆண்டிலிருந்து, மொத்தம் ரூபாய் 27.85 கோடி மதிப்பீட்டில் 413 சுகாதார துணை நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளதுடன், ரூபாய் 60.16 கோடி மதிப்பீட்டில் 106 ஆரம்ப சுகாதார மையங்கள், 30 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனைகளாக நிலையுயர்த்தப்பட்டுள்ளன. மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்துகள் வழங்கும் முறை நெறிப்படுத்தப்பட்டுள்ளது. மருந்துகளுக்காக 2006–2007 ஆம் ஆண்டில் ரூபாய் 170.36 கோடி நிதியொதுக்கப்பட்டுள்ளது. அனைத்து மருத்துவமனைகளிலும் தொடக்க சுகாதார மையங்களிலும் உள்ள பழைய கருவிகளுக்குப் பதிலாக நவீன கருவிகளை வழங்குவதற்கான பெரும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மையம் ஒன்று ரூபாய் 6 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

64. ஊரகப் பகுதிகளில் 24 மணி நேரமும் மகப்பேறு சேவைகள் அளிக்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, 180 தொடக்க சுகாதார மையங்கள் ஒவ்வொன்றிலும் மூன்று செவிலியர்களைப் பணியமர்த்தும் திட்டத்திற்கு இவ்வரசு அனுமதியளித்துள்ளது. இதன் விளைவாக, மாநிலத்தில் மருத்துவமனைகளில் நடைபெறும் மகப்பேறுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இத்திட்டம் வெற்றியடைந்துள்ளதைத் தொடர்ந்து, மேலும் 600 ஆரம்ப சுகாதார மையங்களுக்கு இத்திட்டத்தை நீட்டிக்க இவ்வரசு முடிவு செய்துள்ளது. தமிழ்நாட்டில் 'எய்ட்ஸ்' கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டுத் திட்டம் சிறந்த பலன்களை அளித்துள்ளது. 'எய்ட்ஸ்' நோய் பரவும் சதவீதம், 2001 ஆம் ஆண்டில் 1.13 சதவீதமாக இருந்து 2004 ஆம் ஆண்டில் 0.65 சதவீதமாகக் குறைந்துள்ளது.

பிற்பகல் 5–50

**தொழில் துறை**

**முதலீடு செய்வதற்குகந்த சூழல்**

65. இவ்வரசின் செயல்முனைப்பான '2003 ஆம் ஆண்டு புதிய தொழில்கொள்கை'யானது நாட்டில் முதலீடு செய்வதற்கு விரும்பித்



2006 ஜனவரி 20] [திரு. சி. பொன்னையன்]

தேர்ந்தெடுக்கப்படும் மாநிலங்களில் முதலிடத்தைத் தமிழ்நாடு பெறுவதற்கு மிகவும் உதவியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்று மாநிலத்திற்கு வெள்ளமெனப் பாய்ந்துவரும் முதலீடுகளால் தொழில்கள் பல்கிப் பெருகி, புதிய செயலாக்கங்கள் நடைபெறுவதை கண்கூடாகக் காணமுடிகிறது.

66. தொடக்க மதிப்பீடுகளின்படி, தமிழ்நாட்டின் உற்பத்தித் துறை, 2005–2006 ஆம் ஆண்டில், நிலையான விலைகளின்படி 9 சதவீதத்திற்கும் அதிகமான வளர்ச்சி வீதத்தை அடையும் என்பதை அறிவதில் மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர். இது தொழில் துறையின் வளர்ச்சி வீதம் பழைய நிலைக்குத் திரும்பி உள்ளதைக் காட்டுகிறது. இவ்வரசின் செயல்முனைப்பான முதலீட்டாளர் நேயமிக்க கொள்கைகள், தரமான மின் வழங்கல், போதுமான கட்டமைப்பு வசதிகள், எளிமையாக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் விதிமுறைகளைத் தளர்த்துதல் ஆகியவற்றின் காரணமாகவே இவ்வெற்றி சாத்தியமாயிற்று.

**சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையை மேம்படுத்துதல்**

67. சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் முறையான மற்றும் முறைசாரா துறைகளில் பெருமளவில் வேலை வாய்ப்பு அளிப்பதைக் கருத்தில் கொண்டு, இவற்றைப் பாதுகாத்து வலுப்படுத்துவதன் அவசியத்தை இவ்வரசு எப்போதுமே உணர்ந்துள்ளது.

68. மாண்புமிகு முதலமைச்சரின் முன்னோடித் திட்டமாகிய புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், வேளாண் சார்ந்த உணவுப் பொருள் பதப்படுத்தும் ஊரகத் தொழில்களுக்குப் புத்துயிர் ஊட்டியதன் விளைவாக, மாநிலத்தில் புதிய வேலை வாய்ப்புகள் உருவாகியுள்ளன. 212 வளர்ச்சி வட்டாரங்களில் ரூபாய் 216 கோடி திட்டச் செலவில் உற்பத்தியைத் தொடங்கிய 336 தொழில் பிரிவுகள் 8,096 பெண்கள் உட்பட ஏறக்குறைய, 12,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளன என்பதை அறிந்து மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர்.

69. தாராளமயமாக்கப்பட்ட உலக வர்த்தகமுறையில் சிறு தொழில்கள் தொடர்ந்து இயங்குவது, விலை, தரம் மற்றும் உற்பத்தி அளவு ஆகியவற்றின் அடிப்படையில் சந்தைப் போட்டியை எதிர்கொள்வதற்கான அவற்றின் திறனைப் பொறுத்தே அமையும். சிறுதொழில் பிரிவுகள் குறைந்த வட்டியுடன் நீண்டகால தவணையில் கடன் பெறுவதை இவ்வரசு உறுதி செய்துள்ளது. தொழில்நுட்ப நிலையையுயர்த்தி–நவீனப்படுத்துதல், ஐஎஸ்ஓ சான்றிதழ் பெறுதல் மற்றும் காப்புரிமையைப் பதிவு செய்வதற்கான

[திரு. சி. பொன்னையன்] [2006 ஜனவரி 20

ஆராய்ச்சி-மேம்பாட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றிற்காக திட்டகால இறுதியில் வட்டி மானியம் வழங்கும் கடன் வசதித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2006-2007 ஆம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் சிறு தொழில்களுக்கு ரூபாய் 44.77 கோடி நிதியொதுக்கப்பட்டுள்ளது.

### தொழில் மனிதவள ஆற்றல் மேம்பாடு

70. மாநிலத்தில் உள்ள தொழில் பயிற்சி நிறுவனங்களில் கட்டமைப்பு வசதி மற்றும் பயிற்சித் தரம் ஆகியவற்றை நிலையுயர்த்தி, வலிமையான, செயலாற்றல் பெற்ற மனிதவளத் தொகுப்பைப் பெருக்குவதற்கு இவ்வரசு செம்மையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. சந்தைத் தேவைக்கேற்ப தொழில் பயிற்சி நிறுவனங்களில் புதிய பயிற்சிகளை அறிமுகப்படுத்தவும், பாடத்திட்டத்தை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதற்காக பெண்களுக்கென்றே தனித் தொழில் பயிற்சி நிறுவனங்களை ஏற்படுத்துவதற்கு இவ்வரசு எடுத்த முடிவு மகளிரிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

### தொழிலாளர் நலன்

71. 2001-2006 ஆம் ஆண்டுகளில் சுமுகமான தொழில்சூழலும் இணக்கமான தொழிலாளர் உறவும் மிகச் சிறப்பாக இருந்து வந்துள்ளது. தமிழ்நாடு மின்வாரியம், அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் ஆகியவற்றின் பணியாளர்களுக்குக் கணிசமான பயன்களை அளிக்கும் ஊதிய உடன்பாடுகள் பரவலாக வரவேற்கப்பட்டுள்ளன.

### சேவைத் துறை

### தகவல்-தொழில் நுட்பவியல், தகவல்-தொழில் நுட்பவியல் சார்ந்த சேவைகள்

72. தகவல்-தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல்சார்ந்த சேவைகள் குறித்த இவ்வரசின் செயல்முனைப்பான கொள்கைகள், சேவைத் துறையில் தமிழ்நாடு முன்னணியில் இருப்பதற்கு பெரிதும் உதவியுள்ளன். தமிழ்நாட்டில் 2000-2001 ஆம் ஆண்டில் ரூபாய் 3,115 கோடியாக இருந்த தகவல்-தொழில்நுட்ப ஏற்றுமதி 2005-2006 ஆம் ஆண்டின் இறுதியில் ஏறக்குறைய 5 மடங்கு அதிகரித்து ரூபாய் 15,000



2006 ஜனவரி 20] [திரு. சி. பொன்னையன்]

கோடியையும் விஞ்சிவிடும் என்பதிலிருந்து இக்கொள்கையின் பயன்கள் தெளிவாகத் தெரிகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) தகவல்-தொழில்நுட்பத் துறையை மேம்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அளித்த முக்கியத்துவத்தால் ஊக்கம் பெற்று சென்னையிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தனியார் துறையில் 20 மில்லியன் சதுர அடிக்கு மேற்பட்ட தரைப்பரப்பில் 70-க்கும் மேற்பட்ட தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

73. மென்பொருள் துறையில் இம்மாநிலம் பெற்றுள்ள உயர்வான நிலையை மேலும் முழுமையாக்கும் பொருட்டு, தமிழ்நாட்டில் உலக அளவிலான மின்னணு தயாரிப்பு நிறுவனங்களை அமைக்க, இவ்வரசு தீவிரமாக ஊக்கமளித்துள்ளது. நோக்கியா மற்றும் ஃபிளெக்ஸ்டிரானிக்ஸ் நிறுவனங்கள், சென்னை அருகே தமது தயாரிப்பு வசதிகளை ஏற்படுத்துவதென எடுத்த முடிவுகள், சென்னையை மிகவும் உகந்த மின்னணு தயாரிப்பு மண்டலமாக ஆக்கியுள்ளன.

பிற்பகல் 5-55

74. தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில் நுட்பங்களில் ஏற்பட்டுள்ள புரட்சியின் பயன்கள், பொதுமக்களைச் சென்றடையாவிட்டால், இப்புரட்சிக்கு அர்த்தமே இல்லை என்று மாண்புமிகு முதலமைச்சர் திடமாக நம்புகிறார். பாமரருக்கும் இப்புரட்சியின் பயன்கள் சென்றடையும் பொருட்டு, ஒவ்வொரு ஊராட்சியிலும் கிராம ஆதார-சேவை கணினி மையங்களை அமைக்கும் சிறந்தொரு திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் பெருமளவில் தொடர்பு கொள்ளும் 10 முக்கியத் துறைகளில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிய விரிவான மின் ஆளுமைச் செயல்பாடுகள், பொது மக்களுக்கு அளிக்கப்படும் சேவைகளின் தரத்தைக் குறிப்பிடத்தக்க அளவுக்கு மேம்படச் செய்யும். 2006-2007 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் தகவல்-தொழில் நுட்பத்திற்காக ரூபாய் 18.66 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### சுற்றுலா வளர்ச்சி

75. மக்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் வளவாய்ப்புகளை மிகுதியாகக் கொண்ட மாநிலத்தின் சுற்றுலாத் துறையை சீரியமுறையில் பயன்படுத்திய பெருமையைப் பெற இவ்வரசு முற்றிலும் தகுதியானதாகும். சுற்றுலாத் துறைக்கு 2000-2001 ஆம் ஆண்டில் ரூபாய் 5.22 கோடியாக மட்டுமே செலவிடப்பட்டிருக்க

2006–2007 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் இத்துறைக்கான மொத்த ஒதுக்கீடு ரூபாய் 42.33 கோடியாக உயர்ந்துள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் மொத்தம் ரூபாய் 133 கோடி செலவில் சுற்றுலா தொடர்பான கட்டமைப்பு வசதி மேம்பாட்டுக்கான 194 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

76. தென்னிந்தியாவின் ஒப்புயர்வற்ற சிறந்த சுற்றுலாத் தலமாக, தீவிரமாக தமிழ்நாட்டை விளம்பரப்படுத்தியதோடு சுற்றுலாக் கட்டமைப்பு வசதிகளை நிலையுயர்த்த கணிசமான முதலீடுகள் செய்யப்பட்டதால் ஆண்டுதோறும் இம்மாநிலத்திற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வகுத்த ஏழு அம்ச செயல் திட்டத்தின்படி, செட்டிநாடு, பழவேற்காடு போன்ற இடங்களில் பாரம்பரிய சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு இவ்வரசு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கழுகுமலை, திருக்குறுங்குடி, தேவிபட்டினம், திருப்புடைமருதூர் போன்ற நகரங்கள், ஊரகச் சுற்றுலா மையங்களாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

## வறுமைக் குறைப்பு

77. தமிழ்நாட்டில் ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய, புதுமையான இரு திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்தியதில், தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது.

78. உலக வங்கியின் நிதியுதவியுடன், ரூபாய் 717 கோடி செலவில் இவ்வரசு தொடங்கியுள்ள புதுவாழ்வு முன்னோடித் திட்டம் 15 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டம், வசதிவாய்ப்பற்ற குடும்பங்கள் தங்களது பொருளாதார நிலையை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் அவர்களுக்கு வாழ்வாதாரங்களை அளிக்க வகை செய்கிறது. இத்திட்டத்திற்கு, 2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில், ரூபாய் 162.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

79. வறியவர்களிலும் மிக வறியவர்களுக்கு உணவுப் பாதுகாப்பு, மருத்துவ வசதி, சுகாதார பாதுகாப்பு வசதி போன்ற முக்கிய சமூகப் பாதுகாப்புத் தேவைகளை நிறைவேற்றுவதன் மூலம், அனைத்துக் கிராம ஊராட்சிகளிலுமுள்ள மிக ஏழ்மையில் வாடும் 3 இலட்சம் ஏழைகளுக்குப் பயனளிப்பது, விரிவான மற்றொரு திட்டத்தின் நோக்கமாகும்.





இத்திட்டத்திற்கு, 2006–2007 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில், ரூபாய் 20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்புறுதி வளையம்

80. ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்பு வளையம் ஒன்றை வடிவமைத்துச் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் எடுத்துக்கொண்ட உறுதியான முயற்சிகளுக்கு, தமிழ்நாட்டு மக்களே சான்றுரை அளிப்பர். மாண்புமிகு முதலமைச்சரின் பாராட்டத்தக்க இந்நடவடிக்கைகள், ஏழைகளையும் இயலாதவர்களையும் கடுமையான வறட்சி மற்றும் வெள்ளப்பெருக்கு அபாயங்களிலிருந்து பாதுகாத்துள்ளது என்பது தற்போது தெளிவாகியுள்ளது. நிதி நிலை சீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இப்பாதுகாப்பு வளையம் பாதுகாக்கப்பட்டு நிலையுயர்த்தப்பட்டுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் சமூகப் பாதுகாப்பு வளையத்திற்காக ரூபாய் 8117.51 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

## உணவுப் பாதுகாப்பு

81. அயர்ச்சியூட்டும் தொடர் வறட்சிகளாகட்டும் அல்லது பேரழிவுச் சுனாமியோ அல்லது வரலாறு காணாத பெருமழைப் பிரளயமோ ஆகட்டும் எதுவாக இருப்பினும், இந்த அரசு, எப்போதும் மக்களுக்குப் பக்கபலமாக இருந்து அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டியுள்ளது. கொள்கைப் பற்றுறுதி கொண்ட இந்த உணர்வுதான், இவ்வரசின் ஆட்சிக் காலம் முழுவதிலும் தமிழ்நாட்டில் எந்தவொரு பகுதியிலும் பட்டினிச் சாவு நிகழாமல் தடுத்துள்ளது.

பிற்பகல் 6–00

82. மாநிலத்தில் எல்லா குடும்பங்களும் குடும்ப அட்டை பெறுவதை உறுதிசெய்ததற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அனைவரது பாராட்டுதலுக்கும் உரியவராவார். (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு குடும்பத்திற்கும் குடும்ப அட்டை கிடைப்பது இவ்வரசினால் முதல் முறையாக உறுதி செய்யப்பட்டுள்ளது. புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல், பழைய குடும்ப அட்டைகளைப் புதுப்பித்தல் தொடர்பான கடினமான பிரச்சினைகள் திறம்பட சமாளிக்கப்பட்டு, தற்போது 1.88 கோடி குடும்பங்கள் குடும்ப அட்டைகளைப் பெற்றுள்ளன. இவ்வரசு, பொது விநியோக முறையை அனைவரும் பயன்படுத்தும் சீரான முறையை

[திரு. சி. பொன்னையன்] [2006 ஜனவரி 20

கடைபிடித்துள்ளது. பொது விநியோக முறையில், அரிசி பெற விரும்பும் அனைவரும், அவ்வாறே அரிசி கிடைக்க வகைசெய்யப்பட்டுள்ளது. இதனால், குடும்ப அட்டை வழங்கப்பட்ட 1.88 கோடி குடும்ப அட்டைதாரர்களில், 1.76 கோடி பேர் அரிசி பெற விருப்பம் தெரிவித்துள்ளனர். இதனால், பொது விநியோக முறையின் கீழ், அரிசி பெற விரும்புவோரின் எண்ணிக்கை அதிக அளவு அதிகரித்துள்ளது. 2005–2006 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளில், ரூபாய் 1,200 கோடியாக இருந்த உணவு மானியத்திற்கான நிதியொதுக்கம், 2006–2007 ஆம் ஆண்டில் ரூபாய் 1,500 கோடியாக அதிகரிக்கும். வறுமை கோட்டிற்கு மேலிருப்போருக்கு வழங்கப்படும் அரிசியின் மத்திய வழங்கல் விலையை கிலோ ஒன்றுக்கு ரூ. 8.30–லிருந்து ரூ. 9.15 ஆக அதிகரிக்கவும், அனைத்துப் பிரிவினருக்கும் குடும்ப அட்டை ஒன்றுக்கு வழங்கப்படும் அரிசியின் அளவைக் குறைக்கவும் மத்திய அரசு எடுத்துள்ள முடிவே இதற்குக் காரணம் ஆகும். இந்த விலை உயர்வினால் ஏற்படும் நிதிச்சுமை முழுவதுமாக மாநில அரசின்மீது சுமத்தப்பட்டுள்ளதால், இந்த நடவடிக்கையைத் திரும்பப் பெறவேண்டுமென மத்திய அரசை மாண்புமிகு முதலமைச்சர் உடனடியாகக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**சத்துணவு**

83. கருவுற்ற தாய்மார்கள், சிசுக்கள், குழந்தைகள், முதியோர் ஆகியோருக்குத் தரமான சத்துணவுப் பாதுகாப்பை வழங்கும் வகையில் 'வாழ்நாள் முழுமைக்கும் துணைச் சத்துணவு அளிக்கும் அணுகுமுறையைப்' பின்பற்றுவதில், தமிழ்நாடு, இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் திகழ்கிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்கென, 2006–2007 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூபாய் 559.76 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்விடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் சத்துணவுத் திட்டங்களுக்காகச் செய்யப்பட்டுள்ள ஒட்டுமொத்த ஒதுக்கீடு ரூபாய் 865.85 கோடி ஆகும்.

**மகளிர் நலன்**

84. மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் எழுச்சியூட்டும் தலைமையின்கீழ், தமிழ்நாட்டில் மகளிருக்கு ஆற்றலளித்தல் (empowerment) புதிய சிகரங்களைத் தொட்டுள்ளது. நம்முடைய அன்பிற்குரிய தலைவி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப்போல, மகளிருக்கு ஆற்றல் அளித்தல் மற்றும் மேம்பாட்டுக்காக வேறெந்த முதலமைச்சரும், இந்த அளவிற்கு



2006 ஜனவரி 20] [திரு. சி. பொன்னையன்]

முனைந்ததில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பெண் கருக்கொலை மற்றும் சிசுக்கொலைக்கெதிரான சமூக உணர்வை ஏற்படுத்துவதிலும், பெண் குழந்தைகளுக்குக் கௌரவமான வாழ்க்கையை அளிப்பதன் அவசியத்தை உணர்த்துவதிலும், புரட்சிகரமான தொட்டில் குழந்தைத் திட்டமும் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டமும் முக்கியப் பங்காற்றியுள்ளன. 2006–2007 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்திற்காக ரூபாய் 75 கோடி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. முன்னோடி மகளிர் சுய உதவிக் குழு இயக்கத்தின் மூலம் பெண் குழந்தைகளின் கல்வி மற்றும் பொருளாதார உரிமைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அளித்துள்ள முக்கியத்துவம், பெண்கள் தரமான வாழ்க்கை பெறுவதற்குரிய வாய்ப்புகளை உருவாக்க உதவியுள்ளது.

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பினர் நலன்**

85. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பினர் நலனுக்கு இவ்வரசு, உயர் முன்னுரிமை அளித்துள்ளது. இவர்களுக்குச் சமூகப் பொருளாதார உரிமைகளை அளிப்பதற்காக பலநோக்குத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகையில், கல்வி பெறுவதற்கான வசதி வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. 2001–2002 ஆம் ஆண்டில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பினரின் நலனுக்கான செலவினம், ரூபாய் 350.20 கோடியாக இருந்தது. 2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் இதற்கான ஒதுக்கீடு ரூபாய் 499.54 கோடியாக உயர்ந்துள்ளது.

86. வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டுக்கொண்டிருந்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த மாணவ மாணவியர்களுக்கான 493 மாணவர் இல்லங்களுக்கு, ரூபாய் 155 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டும் இவ்வரசின் பெருந்திட்டம், அம்மாணவர்களுக்குத் தரமான கல்வி பெறும் வசதிகளை அதிகரித்துள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த மாணவியர்க்கு முதுநிலைப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுமென அளித்த வாக்குறுதியை மாண்புமிகு முதலமைச்சர் ஏற்கெனவே நிறைவேற்றியுள்ளார். கடன் படிப்புதவித் திட்டத்தை, மானிய அடிப்படையிலான திட்டமாக மாற்றும் முடிவு பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது. இதன்மூலம், ரூபாய் 22 கோடி செலவில் 32,000–த்திற்கும் அதிகமான மாணவ மாணவியர் பயனடைந்துள்ளனர்.

[திரு. சி. பொன்னையன்] [2006 ஜனவரி 20

பிற்பகல் 6–05

### பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன்

87. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்காக, 2001–2002 ஆம் ஆண்டில் ரூபாய் 121.26 கோடி செலவிடப்பட்டிருக்க, 2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் இதற்காக ரூபாய் 306.61 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

88. இவ்வகுப்புகளைச் சேர்ந்த மாணவ மாணவியர்க்கான 761 மாணவர் இல்லங்களுக்கு அரசுக் கட்டடங்கள் கட்டுவதற்காக, ரூபாய் 235 கோடி செலவில். இவ்வரசு வகுத்த மாபெரும் திட்டம், இம் மாணவர்கள் தரமான கல்வி பெறுவதற்கான வசதிகளை அதிகரிப்பதற்கான முயற்சிகளில் ஒரு மைல் கல்லாக விளங்குகிறது. 1 முதல் 6 ஆம் வகுப்பு வரை பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபைச் சேர்ந்த கிராமப்புற மாணவிகளுக்குப் பரிசுகள் மற்றும் ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தினால். பள்ளிப் படிப்பைத் தொடராமல் இடையில் நிறுத்தும் மாணவிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இத்திட்டத்திற்காக, 2006–2007 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### நெசவாளர்கள் நலன்

89. மதிப்பு கூட்டப்பட்ட ஏற்றுமதித்தரத் துணிகளைத் தயாரிக்கும் வகையில் கைத்தறி நெசவாளர்களை ஊக்குவிப்பதற்கான விரிவான ஒரு திட்டம் ரூபாய் 25 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வரசின் நடவடிக்கைகளால் கைத்தறித் துணிகளில் 1,200-க்கும் மேற்பட்ட புதிய வடிவமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டு, கைத்தறித் துணிகளின் விற்பனை வெகுவாக அதிகரித்து, நெசவாளர்களின் வருமானமும் உயர்ந்துள்ளது. கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் திருத்தியமைக்கப்பட்டு வலுப்படுத்தப்பட்டுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் நெசவாளர்களுக்கான புதிய மருத்துவ ஈட்டுறுதித் திட்டத்திற்கு ரூபாய் 4 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

90. இவ்வாண்டு பொங்கல் பண்டிகையின்போது சாதனை அளவாக, 1.64 கோடி சேலைகளும், 1.64 கோடி வேட்டிகளும் ஏழைகளுக்கு



2006 ஜனவரி 20] [திரு. சி. பொன்னையன்]

இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. 2005–2006 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்கு ரூபாய் 256 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கைத்தறி, கைவினை, துணிநூல் மற்றும் கதர்த் துறைக்காக 2001–2002 ஆம் ஆண்டில் ரூபாய் 230.70 கோடியாக இருந்த செலவினம் 2005–2006 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் ரூபாய் 467.99 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

### தமிழ் வளர்ச்சி, கலை மற்றும் பண்பாடு

91. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து வகைப்பள்ளிகளிலும் எல்.கே.ஜி. முதல் 12 ஆம் வகுப்புவரை அறிவியல் தமிழை அறிமுகப்படுத்தியதால், தமிழ்நாட்டில் எந்தவொரு குழந்தையும் தமிழ் கற்காமல் பள்ளிப்படிப்பை முடிக்க இயலாது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. உத்தமதானபுரத்திலுள்ள "தமிழ் தாத்தா" டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களின் வீட்டை நினைவிடமாக மாற்ற இவ்வரசு ரூபாய் 24.37 இலட்சம் அனுமதித்துள்ளது.

92. இவ்வரசு தமிழ்நாட்டின் தன்னலமற்ற, உன்னதத் தலைவர்களைச் சிறப்பிக்கவும், அவர்களின் நினைவுகளைப் போற்றவும் பல்வேறு நினைவிடங்களையும், சிலைகளையும் நிறுவியுள்ளது. தூத்துக்குடி மாவட்டம், காட்டாரன்குளத்தில் வீரன் அழகு முத்துக்கோன் நினைவாகவும், திருநெல்வேலியில் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் நினைவாகவும் ரூபாய் 1.03 கோடி செலவில் மணி மண்டபங்கள் கட்டப்பட்டுள்ளன. விருதுநகரில் ரூபாய் 14 இலட்சம் செலவில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கு நினைவுத் தூணும், மணி மண்டபமும் கட்டப்பட்டுள்ளன. ரூபாய் 38.50 இலட்சம் செலவில் சென்னையில் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் டாக்டர் எம்.ஜி.ஆர். அரும்பொருள் காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

93. ஓமந்தூர் கிராமத்தில் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், மோர்னபள்ளியில் மூதறிஞர் இராஜாஜி, ஓடாநிலையில் தீரன் சின்னமலை ஆகியோருக்கு மணி மண்டபம் கட்டும் பணியும் தருமபுரி மாவட்டம் அதியமான் கோட்டையில் அதியமான் கோட்டம் கட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சென்னையில் ரெட்டைமலை சீனிவாசன், மதுரை திருநகரில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், வல்லநாட்டில் வெள்ளையத் தேவன், தூத்துக்குடி மாவட்டம், கவர்னகிரியில் திரு. சுந்தரலிங்கம், மதுரையில் தேவநேயப்பாவாணர், எட்டயபுரத்தில் உமறுப்புலவர் ஆகியோருக்கு நினைவிடங்கள் / மணி மண்டபங்கள் கட்டும் பணியும், ஸ்ரீவைகுண்டம்

[திரு. சி. பொன்னையன்] [2006 ஜனவரி 20

கிராமத்தில் சி.பா. ஆதித்தனாரின் பூர்வீக வீட்டைப் புதுப்பித்து நினைவிடமாக மாற்றும் பணியும் நடைபெற்றுவருகிறது.

94. திருப்பூரில், திருப்பூர் குமரனின் நினைவிடத்தில் அவருடைய மார்பளவு வெண்கலச்சிலை நிறுவப்பட்டுள்ளது. சென்னை காந்தி மண்டப வளாகத்தில் தியாகி செண்பகராமனின் முழுஉருவச் சிலையை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடலி கிராமத்தில் தேசிங்கு ராஜாவுக்கும், காரைக்குடியில் அரியக்குடி இராமானுஜ ஐயங்காருக்கும் நினைவிடங்கள் கட்டும் பணி இவ்வரசால் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

**பத்திரிகையாளர் நலன்**

95. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பத்திரிகையாளர் நலத் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் உதவித் தொகையை ரூபாய் 2,000–த்திலிருந்து ரூபாய் 3,000 ஆக உயர்த்தியுள்ளார். இத்திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் குடும்ப உதவித் தொகை ரூபாய் 500–லிருந்து ரூபாய் 1,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 20 ஆண்டுகள் பணி முடித்த பின்னர், பணியிலிருக்கும்போதே இறக்கநேரிடும் பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு அளிக்கப்படும் உதவி, ரூபாய் 50,000–லிருந்து நான்கு மடங்காக அதிகரிக்கப்பட்டு, ரூபாய் 2 இலட்சம் அளிக்கப்படுகிறது.

பிற்பகல் 6–10

**அரசுப் பணியாளர் நலன்**

96. மக்கள் நலன், குறிப்பாக வறியவர்களிலும் வறியவர் நலன் ஆகியவை ஆட்சிநிரலில் முக்கிய அம்சமாக இருக்கவேண்டும் என்று இவ்வரசு எப்போதுமே கருதிவந்துள்ளது. அரசின் வளர்ச்சி நோக்கங்களை எய்துவதில் மிக முக்கியப் பங்கு வகிக்கும் மாநிலத்தின் பொதுச்சேவை செயலாக்க அமைப்பின் முதுகெலும்பாக நமது பணியாளர்கள் விளங்குகின்றார்கள். மாநிலம், மக்கள் மற்றும் அரசுப் பணியாளர்களுக்கிடையே நிலவும் இவ்வுடன்படிக்கையையே மாண்புமிகு முதலமைச்சர் எப்போதும் கவனமாகப் பேணி வளர்த்து வந்துள்ளார். நமது பணியாளர்களுக்கு மேலும் சிறந்த வாழ்க்கைத் தரம் அமைவது அவசியமென்ற அதே வேளையில், மக்களுடைய வளர்ச்சித் தேவைகள் அதி முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அரசுப் பணியாளர்களின் வாழ்க்கைத் தரத்தையும், செயல்திறனையும் உயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள இவ்வரசு தொடர்ந்து பெருமுயற்சி செய்யும்.



2006 ஜனவரி 20] [திரு. சி. பொன்னையன்]

**நிதி நிலைமைக் கணிப்புகள்**

97. 2005–2006 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகள் இம்மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூபாய் 1,404 கோடியாக இருக்குமெனக் கணிக்கப்பட்ட வருவாய்ப் பற்றாக்குறை, திருத்த மதிப்பீடுகளில் ரூபாய் 360 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. 2005–2006 வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 260.41 கோடியாக இருந்த மொத்தப் பற்றாக்குறையும், திருத்த மதிப்பீடுகளில் ரூபாய் 10.18 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

98. 2005–2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 30,251.53 கோடியாக இருந்த அரசின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகள் நடப்பு நிதியாண்டின் திருத்த மதிப்பீடுகளில் ரூபாய் 32,904.14 கோடியாக அதிகரித்துள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 2005–2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூபாய் 31,655.53 கோடியாக இருக்குமெனக் கணிக்கப்பட்ட மொத்த வருவாய்க் கணக்கு செலவுகள் 2005–2006 திருத்த மதிப்பீடுகளில் ரூபாய் 33,264.14 கோடியாக உயர்ந்துள்ளது. பேரிடர் நிவாரணப் பணிகள் வகையிலான செலவே இதற்கு முக்கியக் காரணம்.

99. வருவாய்க் கணக்குச் செலவுகள் அதிகரித்த போதிலும், அடுத்தடுத்த ஆண்டுகளில் வருவாய்ப் பற்றாக்குறையைப் படிப்படியாகக் குறைக்கும் போக்கு கடைபிடிக்கப்பட்டு வருகிறது. கூர்மதியும், ஆற்றலும் மிக்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையின்கீழான இவ்வரசு, 2001 ஆம் ஆண்டில் இருந்த நிதிக் குளறுபடிகளைச் சீர் செய்து, அரசின் நிதி மேலாண்மையில் ஒழுங்கையும் சமன்பாட்டையும் மீளச் செய்ததற்காக பெருமிதம் கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

100. 2006–2007 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டம் இம்மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. மொத்த வருவாய்க் கணக்கு வரவு ரூபாய் 34,046.29 கோடி என்றும், மொத்த வருவாய்க் கணக்குச் செலவு ரூபாய் 34,253.56 கோடி என்றும், வருவாய்ப் பற்றாக்குறை குறைந்த அளவிலான ரூபாய் 207.27 கோடியாக இருக்குமெனவும் கணிக்கப்படுகிறது. 2006–2007 ஆம் நிதியாண்டு இறுதியில்

ஒட்டுமொத்தப் பற்றாக்குறை ரூபாய் 5.57 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டுக்கான நிதிப் பற்றாக்குறை ரூபாய் 5,570.14 கோடி என்று கணிக்கப்படுகிறது. இது மாநில மொத்த உற்பத்தியில் 2.35 சதவீதமாகும்.

101. இந்த வரவு–செலவுத் திட்டம் வரிவிதிப்புகளே இல்லாத (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வரசின் மூன்றாவது வரவு–செலவுத் திட்டம் என்பதை அறிந்து மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டுவர். தொடர்ந்து மூன்றாண்டுகளாக புதிய வரிகள் ஏதும் விதிக்காமலேயே தமிழ்நாட்டில் எய்தப்பட்டுள்ள திருப்புமுனையான நிதிநிலை மாற்றம், இவ்வரசின் மிகப்பெரும் சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) பொதுமக்களின் மேல் வரிச் சுமையை ஏற்றாமல், முழு அளவில் நிதிநிலை சீரமைக்கப்பட வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட உறுதி நிறைவேறியுள்ளது. இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் கணிக்கப்பட்டுள்ள பற்றாக்குறை அரசின் நிதிகளை திறம்படவும். விவேகத்துடனும் நிருவகிப்பதன் மூலம் குறைக்கப்படும்.

102: கடந்த ஐந்தாண்டுகளில் இவ்வரசின் அனைத்து வரவு–செலவுத் திட்டங்களையும் தயாரிப்பதில் உயரிய வழிகாட்டுதல்களை நல்கிய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

103. இந்த வரவு–செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதில் பெரிதும் உதவிய நிதித் துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., அவர்களுக்கும், அவருடன் பணியாற்றிய அலுவலர் குழுவிற்கும் இத்தருணத்தில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

104. இத்துடன். 2006–2007 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கு அவையின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவரை நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வணக்கம்.





## பின்னிணைப்பு

*(239 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

### நடுத்தரகால நிதித் திட்டம்

1. சமுதாய மற்றும் பொருட் கட்டமைப்பு வசதிகளை அளிப்பதன் வாயிலாக, மக்களுக்கு வளவாய்ப்புகளை உருவாக்குவதே ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் அடிப்படை நோக்கமாகும். இந்த அரசு 2001 ஆம் ஆண்டு மே திங்களில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, ரூபாய் 4000 கோடி அளவிற்கு, கொடுக்கப்பட வேண்டிய தொகைகளைச் செலுத்தித் தீர்க்க வேண்டியதிருந்து, முன் எப்போதுமிருந்திராத பெரும் நிதி நெருக்கடி நிலையைச் சந்திக்க வேண்டியிருந்ததால், அவ்வாண்டின் வளர்ச்சித்திட்ட ஒதுக்கீட்டை ரூபாய் 6040 கோடியிலிருந்து ரூபாய் 5200 கோடியாகக் குறைக்க நேரிட்டது. சமூகப் பாதுகாப்பு வளையத்திற்கான ஒதுக்கீடுகளை முழுமையாக எய்துவதே மிகக் கடினமான காரியமாகிவிட்ட நிலையில், அவ்வளையத்திற்கான ஏற்கனவே இருந்த ஒதுக்கீடுகளைக் கூடக் குறைக்க வேண்டிய அச்சுறுத்தும் நிலை ஏற்பட்டது.

2. இதுபோன்ற நிதி நெருக்கடியை, மாநிலம் எப்போதுமே சந்தித்ததில்லை. இம்மாநிலத்தின் மொத்த மாநில உற்பத்தி மதிப்பில், கடன் சுமையின் விகிதம் 16 சதவீதத்திலிருந்து உயர்ந்து 25 சதவீதம் என்ற அபாய அளவை எட்டியது. மாநிலத்தின் ரொக்க நெருக்கடியைச் சமாளிக்க மேலும் கடன் வாங்க இயலாத நிலையை இது ஏற்படுத்தியது. மொத்த வருவாய் வரவுகளில் 12 சதவீதமாக இருந்த மாநிலத்தின் வட்டித் தொகைப் பொறுப்புகள், 19 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்தது. இவ்வுயர்வு, மாநிலத்தின் மொத்த வருவாயில் ஐந்தில் ஒரு பங்கு முந்தைய கடன்களுக்கான செலவுப் பொறுப்புகளுக்கே செலவிடப்படும் நிலையைச் சுட்டிக்காட்டியது.

3. சமச்சீர் வளர்ச்சி என்ற நோக்கத்தை நிறைவேற்றும் வகையில், வறியவர்கள் மற்றும் வசதிவாய்ப்பற்றவர்கள் ஆகியோரும் வளர்ச்சி நடைமுறையில் பங்கேற்கும் வாய்ப்புகளை ஏற்படுத்தத் தேவையான நிதிநிலையை உருவாக்கும் பொருட்டு, உயர் பொருளாதார வளர்ச்சியை

ஊக்குவிப்பதற்கான நடுத்தர கால நிதித் திட்டத்தை வகுக்க இவ்வரசு முடிவு செய்தது.

4. இந்த அரசு, 2003 ஆம் ஆண்டு நிதிநிலை பற்றிய பொறுப்புடைமைச் சட்டத்தை இயற்றியதோடு பன்னிரண்டாம் நிதிக் குழு பரிந்துரைத்த தேவைகளுக்கேற்ப, 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் அதில் திருத்தங்களையும் செய்துள்ளது. இந்தச் சட்டத்தின் 3(1) பிரிவின்படி, மாநில அரசு, வரவு–செலவுத் திட்ட அறிக்கையுடன் நடுத்தர கால நிதித் திட்டம் குறித்த அறிக்கை ஒன்றையும் சட்டமன்றப் பேரவையில் வைக்க வேண்டும். இச்சட்டத்தின் 3(2) பிரிவின்படி, அனுமானங்களை விளக்கி, ஆண்டாண்டிற்கு உரிய இலக்குகளாக, வரையறுக்கப்பட்ட நிதிநிலை குறியீடுகளைக் கோடிட்டுக் காண்பித்து இந்த நடுத்தர கால நிதித் திட்டத்தை வகுக்க வேண்டும். அதற்கேற்ப, நடுத்தர கால நிதித் திட்டம் ஒன்று இத்திட்ட கால ஆண்டுகளுக்கான இலக்குகளுடன், 2005–2006 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட அறிக்கையுடன், சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டது.

5. நடப்பு நிதிநிலைப் போக்குகளின் அடிப்படையில், 2006–2009 ஆண்டுகளுக்கான திருத்தக் கணிப்புகளுடன் நாளது வரையிலான நடுத்தரக் கால நிதித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படுகிறது. இதனுடன் இணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை–III, 2008–2009 ஆம் ஆண்டுடன் முடிவடையும் காலத்திற்கான நடுத்தரக் கால நிதித் திட்டத்தை விளக்குகிறது.

**நோக்கங்கள்**

6. 2003–2004 ஆம் ஆண்டில் வருவாய்ப் பற்றாக்குறையை, மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 6.6 சதவீதமாக மாநில அரசால் குறைக்க முடிந்தது. 2002–2003 ஆம் ஆண்டிலிருந்த 23.28 சதவீதம் என்ற அளவோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இது ஒரு பெரும் முன்னேற்றமாகும். இந்நிதிநிலைச் சீரமைப்பு, 2004–2005 ஆம் ஆண்டிலும் எவ்வித புதிய வரிகளும் விதிக்கப்படாமலேயே தொடர்ந்தது. 2004–2005 ஆம் ஆண்டில், மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் வருவாய்க் கணக்குப் பற்றாக்குறையின் விகிதம் 2.47 சதவீத அளவிற்கு மேலும் குறைக்கப்பட்டது.





2003 ஆம் ஆண்டு நிதி நிலைப் பொறுப்புடைமைச் சட்டத்தின்படி, 2007–2008 ஆம் ஆண்டு காலத்தில் எய்த வேண்டிய இலக்கான மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் வருவாய்க் கணக்கு பற்றாக்குறை விகிதத்தை 5 சதவீதத்திற்கும் கீழாகக் குறைத்தல் என்ற நிலையை இம்மாநிலம் முன்னதாகவே எய்தியிருப்பதை இது காட்டுகின்றது. இவ்வீதத்தை நமது மாநிலம் மேலும் குறைத்து, 2008–2009 ஆம் ஆண்டு வாக்கில் மாநில அரசின் வருவாய்க் கணக்கு உபரியாக இருக்கச் செய்வதற்கு இந்த நடுத்தரக் கால நிதித் திட்டம் வகை செய்கிறது. இது 12–வது நிதிக் குழு வரையறுத்த இலக்கிற்கு ஏற்பவும் உள்ளது. ஆதாயமற்ற வருவாய்க் கணக்கு செலவுகளைக் கட்டுப்படுத்துதல், கடன் மேலாண்மை மற்றும் வரிச்சீர்திருத்த நடவடிக்கைகளின் மூலமும், வரி செலுத்துவதில் இணக்கத்தை மேம்படுத்துவதன்மூலமும் வருவாய்க் கணக்கு வரவுகளை அதிகரித்தல் ஆகியவற்றின் மூலமும் இந்நிலையை எய்த வேண்டியுள்ளது.

7. 2003–2004 ஆம் ஆண்டில் 3.28 சதவீதமாக இருந்த மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறையின் விகிதம், 2004–2005 ஆம் ஆண்டில் 2.95 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த நடுத்தர கால நிதித் திட்டத்தின் இலக்கு ஆண்டான 2007–2008 ஆம் ஆண்டுக்கு முன்னதாகவே இவ்விலக்கு எய்தப்பட்டுள்ளது. நடுத்தர கால நிதித் திட்டம் இவ்விகிதத்தை 3 சதவீதத்திற்கும் குறைவானதாக, வரும் ஆண்டுகளிலும் நிலைநிறுத்த வகைசெய்கிறது. சொத்துக்களைப் பராமரித்தல் மற்றும் சமூகப் பாதுகாப்பு வளையத்திற்கான ஒதுக்கீடுகளைக் குறைக்காமலேயே வருவாய்க் கணக்கில் பற்றாக்குறையைக் குறைப்பதன் மூலம் இந்த நிதிப் பற்றாக்குறை பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது. அதே சமயத்தில் மூலதனச் செலவுகளும் உயர்த்தப்பட்டுள்ளன.

8. 1999–2000 ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்குப் பற்றாக்குறை நிதிப்பற்றாக்குறையில் 81.75 சதவீதம் என்ற அச்சுறுத்தும் அளவில் இருந்தது. இவ்விகிதம், 2004–2005 ஆம் ஆண்டில் 13 சதவீதத்திற்கு குறைவான அளவிற்குக் குறைக்கப்பட்டுள்ளது. மனிதவள மேம்பாட்டிற்கும், உள் கட்டமைப்புகளுக்குமான செலவுகளுக்குத் தேவையான நிதி ஆதாரங்களை உருவாக்கும் வண்ணம், இது மேலும் குறைக்கப்படும்.

9. ஒவ்வொரு ஆண்டிலும் நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்கள் முந்தைய ஆண்டின், மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 100 சதவீத அளவிற்குக் குறைவாகவோ அல்லது மாநில மொத்த உற்பத்தி

மதிப்பீட்டில் 10 சதவீத அளவிற்குக் குறைவாகவோ, இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்கு அமையப்பெற வேண்டும். ஒவ்வொரு ஆண்டிலும் நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்கள் மீளப்பெறும் சாத்தியக்கூறுகளின் (Risk weighted) அடிப்படையில், முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 75 சதவீதத்திற்கு மிகாமலோ அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 7.5 சதவீதத்திலோ இதில் எது குறைவானதோ அந்த அளவிற்கு இருக்க வேண்டும். 2004–2005 ஆம் ஆண்டில், உத்திரவாதங்களின் நிலுவை, மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 27.34 சதவீதமாகவும், மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 4.12 சதவீதமாகவும் இருந்தது. மீளப்பெறும் சாத்தியக்கூறுகளின் அடிப்படையிலான அரசு உத்திரவாதங்களின் நிலுவை, 2004–2005 ஆம் ஆண்டில், மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 9.37 சதவீதமாகவும், மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 1.41 சதவீதமாகவும் இருந்தது. வரவு-செலவுத் திட்டம்சாராக் கடன்களைத் தொகுநிதியின்கீழ் கொண்டுவந்து, நீக்க அரசு முடிவெடுத்துள்ளதன்மூலம், அரசு உத்திரவாதங்கள் மேலும் குறைக்கப்படும்.

10. இந்த நடுத்தர கால நிதித் திட்டத்தில் கருதப்பட்டுள்ள நிதிநிலைச் சீரமைப்பு, நிதி நிலையை வலுப்படுத்துவதுடன், கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கான மூலதனச் செலவுகளை உயர்த்தியும், சமூக நலத் துறைகளின் ஒதுக்கீடுகளை அதிகரித்தும், பன்னிரண்டாம் நிதிக்குழுவின் வழிமுறைகளின்படி சொத்துக்களைப் பராமரிப்பதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை அளித்தும் செலவினங்களின் தரத்தை மேம்படுத்துவதை வலியுறுத்துகிறது. மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் மூலதனச் செலவின் சதவீதம் 2002–2003 ஆம் ஆண்டில் 1.05 ஆக இருந்தது. 2006–2007 ஆம் ஆண்டின் இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதனை 2.3 சதவீதமாக அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. வருவாய்ப் பற்றாக்குறை ஏறக்குறைய முற்றிலும் நீக்கப்பட்டுள்ள நிலையில், முழு நிதிப் பற்றாக்குறையும் மூலதனச் செலவுகள் குறித்தே இருக்கும்.

### சாதனைகளின் மதிப்பீடு

11. இம்மாநிலம் நிதி இடர்பாடுகளிலிருந்து விடுபட்டு, 2005–2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட அறிக்கையுடன் வைக்கப்பட்ட நடுத்தரக்கால நிதித் திட்டத்தின்கீழ் வகுக்கப்பட்டுள்ள இலக்குகளை எய்தும் என்பதை அட்டவணை–I தெளிவாகக் காட்டுகிறது.





**அட்டவணை-I அண்மைக்கால நிதி நிலைமை**

| கணக்கு ஆண்டு | 2001–2002 | 2002–2003 | 2003–2004 | 2004–2005 | திருத்த மதிப்பீடு 2005–2006 | இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2006–2007 |
|---|---|---|---|---|---|---|
| (ரூபாய் கோடியில்) | | | | | | |
| வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை | 2739* | 4851# | 1565 | 703 | 360 | 207 |
| நிதிப் பற்றாக்குறை | 4739 | 6742 | 5591@ | 5570@ | 5441$ | 5570 |
| (சதவீதத்தில்) | | | | | | |
| மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் வருவாய்ப் பற்றாக்குறை | 14.56 * | 23.28# | 6.60 | 2.47 | 1.09 | 0.6 |
| நிதிப் பற்றாக் குறையில் வருவாய் பற்றாக்குறை | 57.80 * | 71.95# | 27.99@ | 12.62@ | 6.62$ | 3.72 |
| மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை | 3.30 | 4.36 | 3.28@ | 2.95@ | 2.57$ | 2.35 |
| மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் வட்டி செலுத்தியது | 18.67 | 19.84 | 19.82 | 16.71 | 14.27 | 15.46 |
| மூலதனச் செலவு (ரூபாய் கோடியில்) | 1777.91 | 1627.54 | 3589.90@ | 4563.96@ | 4843.18$ | 5334.54 |

ஆதாரம்: இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் நிதிக்கணக்குகள் மற்றும் ஆண்டு நிதிநிலை அறிக்கை 2006–2007

(* 2001–2002 ஆம் ஆண்டுகளில் வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை விபரங்கள் தோராயமாகக் காட்டப்பட்டுள்ளன. ஏனெனில், நிதி ஆண்டு முடிவடைவதற்கு முன்னரே மாநில அரசால் தன்னுடைய செலவுப் பொறுப்புகளை முழுவதுமாகத் தீர்க்க இயலாமல் போயிற்று.)

[2006 ஜனவரி 20

(# தமிழ்நாடு மின்சார வாரியம் மத்திய சேவை நிறுவனங்களுக்கு கொடுக்க வேண்டிய தொகைகளுக்கான ரூபாய் 1962.14 கோடி அளவிற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு உதவித் தொகை வழங்கப்பட்டதால் 2002-2003 ஆம் ஆண்டிற்கான வருவாய்ப் பற்றாக்குறை உயரளவாக உள்ளது. அரசுக்கு இந்தக் கடன்களைக் கொடுத்துத் தீர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதால் இந்த அளவுக்கு அரசின் கடன் பொறுப்புகளும் கூடியுள்ளன. இது நீங்கலாக, 2002–2003 ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளின் பங்காக வருவாய்ப் பற்றாக்குறை 13.86 சதவீதம்.)

(@ 2003–2004 மற்றும் 2004–2005 ஆம் ஆண்டுகளில் உள்ள நிதிப் பற்றாக்குறையில், முந்தைய ஆண்டுகளுக்கான மூலதனச் செலவின் சரிக்கட்டல்கள், முறையே, ரூபாய் 1423.38 மற்றும் 1364.65 கோடி ஆகியவை அடங்கும். இந்தக் கடன் பொறுப்பை அரசு ஏற்றுக்கொண்டுள்ளதால் அரசின் கடன் பொறுப்பு இதற்கிணங்க அதிகரித்துள்ளது. இவை நீங்கலாக, 2003–2004 மற்றும் 2004–2005 ஆம் ஆண்டுகளில் இருந்த மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் நிதிப்பற்றாக்குறையின் வீதம் 2.44 சதவீதம் மற்றும் 1.93 சதவீதமாகும். 2003–2004 மற்றும் 2004–2005 ஆம் ஆண்டுகளில் இருந்த நிதிப் பற்றாக்குறையில் வருவாய்ப் பற்றாக்குறையின் வீதம் 37.56 சதவீதம் மற்றும் 8.83 சதவீதம் ஆகும்.)

( $ வரவு-செலவுத் திட்டம்சாராக் கடன்களிலிருந்து செய்யப்பட்ட ரூபாய் 224.90 கோடி அளவிற்கான முந்தைய ஆண்டுகளுக்கான மூலதனச் செலவின் சரிக்கட்டல், 2005–2006 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் உள்ள நிதிப் பற்றாக்குறையில் அடங்கும். இந்தக் கடன் பொறுப்பை அரசு ஏற்றுக்கொண்டுள்ளதால் அரசின் கடன் பொறுப்பு இதற்கிணையாக அதிகரித்துள்ளது. இது நீங்கலாக, 2005–2006 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் மாநில மொத்த உற்பத்தியில் நிதிப் பற்றாக்குறை வீதம் 2.47 சதவீதமாகும். நிதிப் பற்றாக்குறையில் வருவாய்ப் பற்றாக்குறை 6.90 சதவீதமாகவும் உள்ளன.)



2006 ஜனவரி 20]

## எதிர்கால கணிப்புகள்

### வருவாய்க் கணக்கு வரவுகள்

### மத்திய வரிகளில் பங்கு

12. பன்னிரண்டாவது நிதிக் குழுவின் பரிந்துரைக் கால அளவில் (2005–2010) மத்திய வரிகளில் பகிர்ந்தளிக்கத்தக்க தொகுப்பில் தமிழ்நாட்டின் பங்கு 5.385 சதவீதத்திலிருந்து 5.305 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பகிர்ந்தளிக்கத்தக்க தொகுப்பின் மொத்த அளவு 29.5 சதவீதத்திலிருந்து 30.5 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதால், மாநிலத்திற்குக் கிடைக்கக்கூடிய பங்கு 2000–2005 ஆண்டுகளில் இருந்த 1.598 சதவீத அளவோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் 1.618 சதவீதமாக சிறிதளவு உயரும். நடுத்தர கால நிதித் திட்டத்தின் கணிப்புகள், திருத்தப்பட்ட நிதிப் பகிர்வு கணக்கீட்டு முறையின் அடிப்படையில் அமைந்துள்ளன. மத்திய அரசின் 2005–2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படியான வரிப் பகிர்ந்தளிப்பு, 2005–2006 ஆம் ஆண்டிற்கான மாநிலத்தின் திருத்த மதிப்பீட்டில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டுக்கு வரிப்பகிர்ந்தளிப்பில் 12 சதவீத வளர்ச்சி கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 2007–2008 மற்றும் 2008–2009 ஆம் ஆண்டுகளுக்கு, வரி வசூல் மற்றும் அதனைத் தொடர்ந்த பகிர்ந்தளிப்பில், முறையே 8 சதவீதம் மற்றும் 10 சதவீதம் ஆகிய அளவுகளில் உயர்வுகள் கணக்கில் கொள்ளப்பட்டுள்ளன.

### மாநில அரசின் சொந்த வரி வருவாய்

13. தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தி வருவாயின் விகிதம், நாட்டிலேயே மிக உயர்ந்த அளவாக திகழ்ந்து வருகிறது. இச்சாதனையை, வரிவசூலில் தமிழ்நாடு பன்னிரண்டாம் நிதிக்குழு, பாராட்டியுள்ளது. நாட்டிலேயே முதன்மை நிலை பெற்றிருப்பதாகக் கூறிப் பாராட்டியுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீட்டில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் மாநிலத்தின் சொந்த வரிவருவாயின் பங்கு மேலும் உயர்ந்து 10.5 சதவீத அளவை எட்டியுள்ளது. கடந்த இரு நிதியாண்டுகளில் எவ்வித புதிய வரிகளும் விதிக்கப்படாததைக் கருதும்போது, இச்சாதனை மேலும் பாராட்டுக்குரியதாகிறது. வரிச் சீர்திருத்தம், நடைமுறைகளை எளிமைப்படுத்துதல் மற்றும் ஒளிவு மறைவற்றதாக ஆக்குதல் ஆகியவற்றில்

கவனம் செலுத்தப்பட்டதன் மூலம் இணக்கமான சூழ்நிலையை உருவாக்கி இத்தனிச்சிறப்பு எய்தப்பட்டுள்ளது.

14. மாநில வரிகளைப் பொறுத்தமட்டில், இந்த நடுத்தரக் கால நிதித் திட்டங்களின் கணிப்புகள் தற்பொழுதுள்ள கட்டண வீதங்கள் மற்றும் வரி விதிப்பு முறைகளின் அடிப்படையில் உள்ளன. 2006–2007 ஆம் ஆண்டிலிருந்து மத்திய விற்பனை வரியின் மூலமாகக் கிடைக்கும் வரவுகள், அவ்வரி தற்போதுள்ள 4 சதவீதத்திலிருந்து, 2 சதவீதமாகக் குறைக்கப்படுவதைக் கருத்தில் கொண்டு கணக்கிடப்பட்டுள்ளன. 2004–2005 ஆம் ஆண்டோடு ஒப்பிடும்போது நடப்பாண்டில் விற்பனை வரி வசூலின் வளர்ச்சி வீதம், சுமார் 15 சதவீதம் என்று கருதப்பட்டுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டிற்கான கணிப்புகளில், மொத்த வரவுகளில் 10 சதவீத வளர்ச்சி இருக்குமெனவும், மத்திய விற்பனை வரி விதிப்பு குறைக்கப்படுவதால் நிகர வரவுகள் குறைவாக இருக்குமெனவும் கருதப்படுகிறது.

15. முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப்பதிவுக் கட்டணங்கள் ஆகியவற்றின்கீழ் கிடைக்கும் வரவுகள் நடப்பாண்டில் 12 சதவீதம் வளர்ச்சியைக் காட்டுகின்றன. 2005–2006 ஆம் ஆண்டுக்கான வரவுகள் அதே 12 சதவீதம் வளர்ச்சியுடன் கணக்கிடப்பட்டுள்ளன.

16. ஆயத்தீர்வைக் கொள்கை மாற்றியமைக்கப்பட்டதன் விளைவாக, ஆயத்தீர்வை வரவுகள் 2005–2006 ஆம் ஆண்டில் மிக அதிக அளவான 18 சதவீத உயரளவிற்கு அதிகரிக்கும். ஆயத்தீர்வை வருவாய் ஏற்கெனவே உயரளவில் இருப்பதால், வரும் ஆண்டுகளில் ஆண்டு வளர்ச்சி வீதம் 8 சதவீதம் என்று நடுத்தரக்கால நிதித்திட்டத்தில் கணக்கிடப்பட்டுள்ளது.

17. வாகனங்கள் மீதான வரி வருவாய் நடப்பு ஆண்டில் 11 சதவீதம் அதிகரிக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் இது 8 சதவீதமாக இருக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

**வரி அல்லாத வருவாய்**

18. சேவைப் பணிகளுக்காக வசூலிக்கப்படும் பயனீட்டாளர் கட்டணங்கள், மாநில அரசின் வரவு-செலவுத் திட்டக் கணக்கிற்கு உட்பட்டதல்ல. மாநிலத்தின் வரி அல்லாத வருவாயினங்களில் வளர்ச்சி வாய்ப்பு அதிகமாக இல்லை. கனிமங்கள் குறித்த உரிமைத் தொகைகளிலிருந்து கிடைக்கக்கூடிய வரவுகள் கூட இதற்கான கட்டண வீதங்களை மத்திய அரசு திருத்தி நிர்ணயிக்கவில்லையாயின்





அதிகரிக்காது. பொதுத் துறை நிறுவனங்களுக்கு மாநில அரசு அளிக்கும் கடன்களின் அளவு குறைந்து வரும் நிலை உள்ளதால், வட்டி வரவுகள், நடுத்தரக் கால நிதித் திட்டத்தின் கால அளவில் குறைந்து வரும் போக்கையே காட்டும். இந்த அம்சங்கள் அனைத்தையும் கருத்தில் கொண்டு, மாநில அரசின் வரியல்லாத வருவாய் சுமார் 2 சதவீத அளவிற்கே உயரும் என கணிக்கப்பட்டுள்ளது.

**மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள்**

19. உரிய கோட்பாடுகளின் அடிப்படையிலும், விருப்புரிமை அடிப்படையிலும் பெறப்படும் மானியங்களின் அளவை நிர்ணயிப்பதில் மாநில அரசிற்கு எந்தவித அதிகாரமும் இல்லை. இவ்வினங்களில் கணக்கிடப்பட்டுள்ள வரவுகள் பன்னிரண்டாவது நிதிக்குழு பரிந்துரைத்துள்ள மானியங்களையும் 2005–2006 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஏற்பளிக்கப்பட்டுள்ள அயல்நாட்டு உதவி பெறும் திட்டங்களின்கீழான மானியங்களையும் கருத்தில் கொண்டுள்ளன.

**வருவாய்க் கணக்கில் செலவுகள்**

20. தமிழ்நாட்டில், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில், மாநில அரசின் சொந்த வரி வருவாயின் விகிதம் நாட்டிலேயே உயரளவாக இருப்பதால், வருவாய்க் கணக்கில் செய்ய வேண்டிய திருத்தம் வருவாயினச் செலவுகளின் வளர்ச்சி வேகத்தைக் குறைப்பதையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. சுனாமி நிவாரணப் பணிகள் மற்றும் அண்மைக்கால வெள்ள நிவாரணம் ஆகியவற்றால் அதிகச் செலவினங்கள் ஏற்பட்ட போதிலும், தமிழ்நாடு, வருவாய்க் கணக்கு செலவின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளது. வருவாய்க் கணக்குச் செலவுகளின் வளர்ச்சி வீதம், 2002–2003 ஆம் ஆண்டில் இருந்த 19.16 சதவீதம் எனும் உயரளவிலிருந்து, 2005–2006 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் 14 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

21. சம்பளம், ஓய்வூதியம் தொடர்பான மொத்தச் செலவுகளில் சில கட்டுப்பாடுகளின் மூலம் இச்சரிக்கட்டலை செய்ய முடிந்தது. சம்பளங்கள், ஓய்வூதியங்கள் குறித்த செலவு 1999–2000 ஆம் ஆண்டில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் 102.85 சதவீதமாகவும், 2000–2001 ஆம் ஆண்டில் 93.18 சதவீதமாகவும், 2001–2002 ஆம் ஆண்டில் 88.70 சதவீதமாகவும் உயரளவில் இருந்தது. தற்போது, இவ்வினம் சுமார் 65 சதவீத அளவில் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. மொத்த வருவாய் வரவுகளில் சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்களுக்கான செலவின் சதவீதம்

1999–2000 ஆம் ஆண்டில் 68.78 ஆக இருந்தது. இது, 2005–2006 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் சுமார் 43 சதவீதமாகக் குறைந்துள்ளது.

22. வட்டிப் பொறுப்புகளின் வளர்ச்சி வீதத்தைக் குறைப்பதில் அரசு பெரும் வெற்றி கண்டுள்ளது. மொத்த வருவாய் வரவுகளில் வட்டிப் பொறுப்புகள், சுமார் 20 சதவீதம் என்ற அபாய கட்டத்தை அடைந்திருந்த நிலை, தற்போது விலகத் தொடங்கியுள்ளது. அதிக வட்டிக் கடன்களைக் குறைந்த வட்டிக் கடன்களாக மாற்றியதன் மூலமும் முன்னதாகவே கடன்களைத் திருப்பிச் செலுத்தியதன் மூலமும், கடன்களைச் சிறந்த முறையில் கட்டுப்படுத்தி நிருவகித்ததன் மூலமும், இந்த மாற்றத்தை அடைய முடிந்தது. கடன் பொறுப்புகளை சாத்தியமான அளவில் தொடர்ந்து நிலைநிறுத்துவதைக் கண்காணிப்பதே அரசின் நோக்கமாகும். மாநிலங்களுக்கான கடன் நிவாரணம் குறித்த பன்னிரண்டாம் நிதிக்குழுவின் பரிந்துரைகளைக் கருத்திற் கொண்டு மொத்த வருவாயில் வட்டிப் பொறுப்புகள் 15 சதவீதத்திற்குக்கீழ் கொண்டுவரப்பட்டு நிலைநிறுத்தப்பட வேண்டுமென்று நடுத்தர கால நிதித் திட்டத்தில் கருதப்பட்டுள்ளது.

**பலன்கள்**

23. உயரும் வரி வரவுகள், வருவாய்க் கணக்குச் செலவினங்களின் வளர்ச்சி வேகத்தைக் குறைத்தல் மற்றும் கடன் பொறுப்புகளைச் சிறந்த முறையில் நிருவகித்தல் ஆகியவற்றின் மூலமாக நடுத்தர கால நிதித் திட்டத்தின்கீழ் வகுக்கப்பட்ட இலக்குகளை, மாநிலம் தொடர்ந்து விஞ்சி வருகிறது. இவ்வாறு சீராக்கப்பட்ட நிதிநிலையானது, மூலதனச் செலவுகளுக்கான ஒதுக்கீடுகள் முன் எப்போதுமிராத அளவுக்கு உயர வழிவகுத்துள்ளது. மாநிலத்தின் மூலதனச் செலவு ஒதுக்கீடு, இதற்கு முன் எப்போதும் இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளது. 2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மொத்த மூலதனச் செலவு ரூபாய் 5334.54 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 2000–2001 ஆம் ஆண்டு மூலதனச் செலவைவிட சுமார் 345 சதவீதம் அதிகமாகும்.

24. பன்னிரண்டாம் நிதிக்குழுவின் நெறிமுறைகளின்படி, உருவாக்கப்பட்ட சொத்துக்களின் பராமரிப்பிற்குத் தேவையான ஒதுக்கீடுகளை தமிழ்நாடு வழங்கியுள்ளது. ஒட்டுமொத்த நிதிநிலை சீரடைந்துள்ளதால், சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், கல்வி, சத்துணவு



போன்ற முன்னுரிமைத் துறைகளுக்குப் போதுமான நிதி ஆதாரங்களை அளிப்பதில் கவனம் செலுத்தப்படும்.

25. நடப்பாண்டில் மாநிலத்தின் வரவு–செலவுகளில் காணப்படும் போக்கினைக் கருத்தில்கொள்ளும்போது, நடுத்தரக்கால நிதித் திட்டத்தில் தெரிவிக்கப்பட்ட ஆண்டாண்டிற்குரிய இலக்குகள் எய்தப்படக்கூடியதாக இருப்பதும், மாநிலம் சீரான நிதிநிலைப் போக்கினை அடையும் பாதையில் சென்றுகொண்டிருப்பதும் தெளிவாகிறது.

**2005–2006 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்டத்தினை ஒட்டிய வரவுகள் மற்றும் செலவுகளின் போக்குகள் குறித்த ஆய்வு**

26. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தை (சட்டம் எண் 16/2003) இயற்றியுள்ளது. இச்சட்டத்தின் பிரிவு 6 (2)–ன்படி, நிதித்துறைக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர், வரவு–செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் போக்கு மற்றும் வரவு–செலவுத் திட்ட இலக்குகளை எய்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய தீர்வு நடவடிக்கைகள் குறித்து ஒவ்வொரு அரையாண்டிலும் ஆய்வு செய்து, அத்தகைய ஆய்வின் முடிவை, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு அளிக்க வேண்டும். அத்தகைய ஆய்வின் முடிவை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு அளிக்கும்பொழுது, பின்வருவனவற்றை விளக்கும் விவர அறிக்கை ஒன்றை அமைச்சர் சமர்ப்பிக்க வேண்டும் என்று 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தின் பிரிவு 6 (3) தெரிவிக்கிறது:–

(அ) இந்தச் சட்டத்தின்கீழ் மாநில அரசின் பொறுப்புகளை (obligations) நிறைவேற்றுவதில் காணப்படும் மாறுபாடுகள்;

(ஆ) அவ்வாறு காணப்படும் மாறுபாடுகள் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளதா என்பதையும், உள்ளபடியேயான அல்லது எய்தக்கூடிய வரவு–செலவுத் திட்ட இலக்குகளுடன் ஒப்புடையதாக இருக்கிறதா என்பதற்கான குறிப்புகள், மற்றும்

(இ) மாநில அரசு செயல்படுத்துவதற்குக் கருதியுள்ள சீர்திருத்த நடவடிக்கைகள்.

27. 2005 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வரையிலான காலத்திற்கான, இந்த ஆய்வின் முடிவு சட்டமன்றப் பேரவைக்கு அளிக்கப்படுகிறது.

[2006 ஜனவரி 20

**வருவாய் வரவுகள்**

28. 2005–2006 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில், மொத்த வருவாய் வரவுகள் ரூபாய் 30,251.53 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. தொடக்கநிலை விவரக் கணக்குகளின்படி 2005 ஆம் ஆண்டு செப்டம்பர் வரையில், மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் ரூபாய் 14,915.64 கோடியாக இருந்தது. இந்த வருவாய் வரவுகள், வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 49.30 சதவீதமாகும். கடந்த 2004–2005 ஆம் ஆண்டில் இதே நிகரான கால அளவில், வரவுகள் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 44 சதவீதமாக இருந்தது. 2005–2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் கணக்கிடப்பட்டு, மேலும் திருத்திய மதிப்பீட்டில் அதிகரித்துக் கணிக்கப்பட்ட அளவிற்கு வருவாய் வரவுகள் எட்டப்படும் என்பதேயே இது காட்டுகிறது. மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் குறித்த விவரங்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை—II — 30.9.2005 ஆம் நாள் வரையில் தமிழ்நாடு அரசின் மொத்த வருவாய் வரவுகளின் நிலவரங்கள்**

| | | 2005–2006 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 30–9–2005 வரையிலான தொடக்க நிலை விவரக் கணக்குகள் | வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் சதவீதம் (%) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்) | | |
| 1 | மத்திய வரிகளில் பங்கு | 4,672.46 | 2,160.10 | 46.23 |
| 2 | மாநிலத்தின் சொந்த வரி வருவாய் | 20,650.83 | 11,205.87 | 54.26 |
| 3 | மாநிலத்தின் வரி அல்லாத வருவாய் | 2,101.41 | 997.50 | 47.47 |
| 4 | மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள் | 2,826.83 | 552.17 | 19.53 |
| 5 | மொத்த வருவாய் வரவுகள் | 30,251.53 | 14,915.64 | 49.30 |



2006 ஜனவரி 20]

29. மத்திய அரசிடமிருந்து பெறப்படும் மானிய உதவித் தொகை தவிர, மாநிலத்தின் மற்ற சொந்த வரி வருவாய் வரவுகள் நல்ல வளர்ச்சியடைந்துள்ளன என்பதையும், வகுக்கப்பட்ட இலக்குகளை ஒத்தே உள்ளன என்பதையும் மேற்கண்ட அட்டவணை தெளிவாகக் காட்டுகிறது. மானிய உதவித் தொகையின் பெரும்பகுதி, நிதியாண்டின் இரண்டாம் பாதியில் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு நிதியாண்டின் முதல் பாதியில், மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 23.33 சதவீத வளர்ச்சியைக் காட்டுகிறது.

**செலவுகள்**

30. 2005–2006 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், வருவாய்க் கணக்குச் செலவின வகையில், ரூபாய் 31,655.53 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2005–2006 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளில், வருவாய்க் கணக்குச் செலவின வகையில், ரூபாய் 1,374.62 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொடக்கநிலைக் கணக்குகளின்படி, 2005 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இறுதி வரையிலான வருவாய்க் கணக்குச் செலவு ரூபாய் 13,813.63 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 2005–2006 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்ட செலவினத்தில் 43.64 சதவீதமாகும். இதற்கு முந்தைய நிதியாண்டில், முதல் ஆறு மாதங்களில் ஏற்பட்ட வருவாய்க் கணக்குச் செலவினம் ரூபாய் 12,056.75 கோடியாகும். இவ்வாறாக, வருவாய்க் கணக்கில் செலவு சென்ற நிதியாண்டின் முதல் அரையாண்டில் இருந்ததைக் காட்டிலும் 14.5 சதவீதம் அதிகரித்துள்ளது.

31. 2005–2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மூலதனச் செலவுக்காக ரூபாய் 4,791.64 கோடியும், கடன்கள் மற்றும் முன்பணங்களுக்காக ரூபாய் 154.94 கோடியும் (நிகரம்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளில், மூலதன மற்றும் கடன் செலவு வகைகளில், ரூபாய் 544.63 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொடக்க நிலைக் கணக்குகளின்படி, 2005 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இறுதி வரையில், கடன்கள்–முன்பணங்கள் (நிகரம்) நீங்கலாக, மூலதனச்செலவு ரூபாய் 1,648 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகை, மூலதனச் செலவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மொத்தத் தொகையில் 36.11 சதவீதமாகும்.

## அட்டவணை – III : நடுத்தர கால நிதித் திட்டம்

தற்போதைய விலையில் ரூபாய் கோடியில்

| ஜனவரி, 2006 | 2004–2005 மதிப்பீடு | 2004–2005 கணக்கு | 2005–2006 மதிப்பீடு | 2005–2006 திருத்த மதிப்பீடு | 2006–2007 மதிப்பீடு | 2006–2007 வரவு–செலவு மதிப்பீடு | 2007–2008 (கணிக்கப்பட்டவை) | 2008–2009 (கணிக்கப்பட்டவை) |
|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த வருவாய் வரவு (TRR) | **24038.94** | **28159.34** | **26608.79** | **32653.29** | **31695.17** | **33789.70** | **37502.99** | **40847.77** |
| மாநிலத்தின் சொந்த வருவாய்(SOR) | **18585.27** | **21273.20** | **20283.29** | **24357.23** | **24389.40** | **25676.43** | **28982.06** | **31684.74** |
| வரி (SOTR) | 17159.12 | 19357.04 | 18788.36 | 22163.94 | 22476.42 | 23401.80 | 26935.32 | 29628.85 |
| வரி அல்லாதவை | 1426.15 | 1916.16 | 1494.93 | 2193.29 | 1912.98 | 2274.63 | 2046.74 | 2055.89 |
| மத்திய அரசிடமிருந்து மாற்றப்பட்டவை | **5453.67** | **6886.14** | **6325.50** | **8296.06** | **7305.77** | **8113.27** | **8520.93** | **9163.03** |
| பங்கிடப்பட்ட வரிகள் | 3709.81 | 4236.39 | 4407.26 | 5041.21 | 5233.16 | 5646.56 | 6099.86 | 6709.85 |
| உதவி மானியம் | 1743.86 | 2649.75 | 1918.24 | 3254.85 | 2072.61 | 2466.72 | 2421.07 | 2453.18 |
| மொத்த வருவாய்ச் செலவு | **27433.85** | **28862.68** | **29505.33** | **33013.30** | **33092.46** | **33996.97** | **37592.02** | **39883.48** |
| வட்டியல்லாத செலவு | **25532.17** | **28980.17** | **27252.21** | **33406.21** | **32200.88** | **34099.67** | **37440.86** | **39359.80** |
| சம்பளங்கள்(கல்விக்கான மத்திய அரசின் உதவி உட்பட) | 9145.03 | 8429.51 | 9611.40 | 9551.45 | 10356.72 | 10965.70 | 11443.24 | 11984.79 |
| ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலப் பலன்களும் | 4520.21 | 3919.17 | 5213.42 | 4680.79 | 5313.20 | 5126.64 | 5861.57 | 6293.35 |
| ஊதியம் அல்லாத செயல்பாடுகளும் பராமரிப்புகளும் | 2741.54 | 3608.34 | 2912.58 | 4389.02 | 3746.30 | 4194.92 | 4353.62 | 4571.30 |
| உதவித் தொகைகளும் நிதி மாற்றங்களும் | 5727.75 | 8153.50 | 5940.76 | 9656.19 | 8074.14 | 8439.50 | 9925.86 | 10402.15 |
| ஏனைய வருவாய்ச் செலவினங்கள் | 28.10 | 3.23 | 29.51 | 45.08 | 30.98 | 10.04 | 32.53 | 59.16 |
| மூலதன முதலீடு | 2945.14 | 4563.96 | 3275.14 | 4846.38 | 4475.14 | 5334.74 | 5494.64 | 5694.64 |
| நிகரக் கடன் வழங்கல் | 424.40 | 302.46 | 269.40 | 237.29 | 204.40 | 28.13 | 329.40 | 354.40 |
| நிதி அளவீடுகள் | | | | | | | | |
| முதன்மை உபரி (+)/ பற்றாக்குறை (-) | **-1493.23** | **-820.83** | **-643.42** | **-752.91** | **-505.71** | **-309.97** | **62.13** | **1487.97** |
| வட்டி வழங்கல் | 5271.22 | 4748.93 | 5797.66 | 4690.76 | 5571.12 | 5260.18 | 5975.20 | 6572.72 |
| மொத்த வருவாய் வரவுகளில் வழங்கப்பட்ட வட்டித் தொகை | **21.93%** | **16.86%** | **21.79%** | **14.37%** | **17.58%** | **15.57%** | **15.93%** | **16.09%** |
| வருவாய்க் கணக்கில் உபரி (+)/ பற்றாக்குறை (-) | **-3394.91** | **-703.34** | **-2896.54** | **-360.00** | **-1397.29** | **-207.27** | **-89.03** | **964.29** |
| மொத்த வருவாய் வரவுகளில் வருவாய்க் கணக்கின் உபரி (+)/ பற்றாக்குறை (-) | **-14.12%** | **-2.50%** | **-10.89%** | **-1.10%** | **-4.41%** | **-0.61%** | **-0.24%** | **2.36%** |
| நிதிப் பற்றாக்குறையில் வருவாய்க் கணக்கின் உபரி (+)/ பற்றாக்குறை (-) | **50.19%** | **12.63%** | **44.97%** | **6.61%** | **22.99%** | **3.72%** | **1.51%** | **-18.96%** |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நிதி உபரி (+)/ பற்றாக்குறை (-) சரிக்கட்டப்பட்டவை | -6764.45 | -5569.76 | -6441.08 | -5443.68 | -6076.83 | -5570.15 | -5913.07 | -5084.75 |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பின் நிதி உபரி (+)/ பற்றாக்குறை (-) (சரிக்கட்டப்பட்டவை) | -3.8% | -2.9% | -3.3% | -2.6% | -2.6% | -2.4% | -2.3% | -1.8% |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பு (GSDP) | 179309.17 | 188921.00 | 194550.45 | 211591.52 | 232784.96 | 236982.50 | 258310.93 | 281558.91 |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பின் ஆண்டு வளர்ச்சி | 8.0% | 12.2% | 8.5% | 12.0% | 9.0% | 12.0% | 9.0% | 9.0% |
| தொகுக்கப்பட்ட கணக்கு * | | | | | | | | |
| தொகுக்கப்பட்ட வருவாய் உபரி (+)/ பற்றாக்குறை (-) | -3879.82 | -1808.84 | -2273.92 | -1745.93 | -2223.30 | -1406.12 | -859.43 | 704.84 |
| தொகுக்கப்பட்ட உபரி (+)/ பற்றாக்குறை (-) | -8245.80 | -8131.94 | -7090.95 | -8324.91 | -8202.84 | -8566.65 | -8308.47 | -7175.20 |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பைவிட அதிகமாக தொகுக்கப்பட்ட உபரி (+)/ பற்றாக்குறை (-) | -4.60% | -4.30% | -3.64% | -3.93% | -3.52% | -3.61% | -3.22% | -2.55% |

* இதில் மாநில வரவு-செலவுத் திட்டத்துடன் தமிழ்நாடு மின்வாரியத்தின் நிதி செயல்பாட்டினையும் குறிக்கும்.

இவை, சரிக்கட்டப்பட்ட எண்கள் என்பதால் இந்த மதிப்பீடுகள் நிதிக் கணக்குகள் மற்றும் ஆண்டு நிதி விபர அறிக்கையுடன் பொருத்தமாக இருக்காது.



*பிற்பகல் 6–15*

## 4. முன்பண மானியக் கோரிக்கைகள், 2006-2007 பேரவையில் வைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006–2007 ஆம் ஆண்டின் செலவுகளுக்கான முன்பண மானியக் கோரிக்கைகள். மாண்புமிகு நிதி அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளை பேரவைமுன் வைக்கிறேன்.

**2006-2007 ஆம் ஆண்டு உடனடிச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**

| வ. எண் | கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1. | மாநிலச் சட்டமன்றம் | 8,52,88 | — | — |
| 2. | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 8,86,58 | — | — |
| 3. | நீதி, நிருவாகம் | 93,61,20 | — | — |
| 4. | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 263,25,44 | 9,15,72 | 13,75 |
| 5. | வேளாண்மைத் துறை | 443,76,22 | 29,91,38 | — |
| 6. | கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்' | 102,40,59 | 22,85,23 | — |
| 7. | கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம் | 48,34,58 | 2,20,72 | — |
| 8. | கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை—பால்வளம் | 6,93,13 | — | — |
| 9. | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 144,86,82 | 23,75,45 | — |

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | வணிக வரித் துறை—வணிக வரிகள் | 226,29,90 | — | — |
| 11. | வணிக வரித் துறை—முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு | 61,54,36 | — | — |
| 12. | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 1,047,27,65 | 3,67,71 | 169,63,78 |
| 13. | எரிசக்தித் துறை | 608,81,17 | 13,75,00 | 22,17,64 |
| 14. | சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 81,91,22 | 66,60,06 | — |
| 15. | நிதித் துறை | 250,48,24 | 1 | 9,97,45 |
| 16. | கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் | 226,75,00 | — | 5,39,63 |
| 17. | கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கதர், கிராமத்தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் | 25,24,90 | — | — |
| 18. | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 905,00,94 | 47,22,14 | — |
| 19. | உயர் கல்வித் துறை | 448,02,31 | 6,24,11 | — |
| 20. | நெடுஞ்சாலைகள் துறை | 621,45,85 | 1,319,98,28 | — |
| 21. | உள் துறை—காவல் | 791,13,07 | 74,28,14 | 1,10,00 |
| 22. | உள் துறை—தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 42,39,23 | 11,55,00 | — |
| 23. | உள் துறை—சிறைச்சாலைகள் | 40,49,72 | 1,95,67 | — |
| 24. | உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் | 27,55,69 | — | — |
| 25 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 52,13,70 | 17,21,50 | 59,67,50 |
| 26 | தொழில் துறை | 23,70,92 | 13,79,95 | 27,50,00 |



| | | | | |
|---|---|---|---|---|
| 27 | செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் | 17,28,18 | — | — |
| 28 | செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா | 17,42,73 | 5,85,50 | — |
| 29 | செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு | 31,76,45 | 1 | — |
| 30 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 10,26,15 | — | — |
| 31 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 109,50,26 | 79,04 | — |
| 32 | சட்டத் துறை | 5,41,27 | — | — |
| 33 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 425,72,30 | 333,36,82 | 89,10,92 |
| 34 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 15,24,79 | — | — |
| 35 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 69,07,43 | 4,09,85 | — |
| 36 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை | 21,16,85 | — | — |
| 37 | பொதுத் துறை | 140,21,58 | 1 | — |
| 38 | பொதுப் பணித் துறை—கட்டடங்கள் | 59,32,89 | 104,33,32 | — |
| 39 | பொதுப் பணித் துறை—பாசனம் | 334,96,63 | 261,58,72 | — |
| 40 | வருவாய்த் துறை | 646,30,25 | 2 | — |
| 41 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 1,304,75,16 | 480,87,66 | — |
| 42 | பள்ளிக் கல்வித் துறை | 2,563,96,25 | 82,50,00 | 3,02 |
| 43 | சிறுதொழில்கள் துறை | 24,62,25 | 2 | — |

| | | | | |
|---|---|---|---|---|
| 44 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 416,75,54 | 1 | — |
| 45 | தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு | 20,78,71 | 66,02 | — |
| 46 | தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை | 17,22,36 | 27,50 | — |
| 47 | போக்குவரத்துத் துறை | 154,72,02 | 6 | — |
| 48 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 16,73,29 | 2 | — |
| 49 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 2,828,28,79 | — | — |
| 50 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 152,98,27 | — | — |
| | **பெருமொத்தம்** | 16,005,31,71 | 2,938,50,65 | 384,73,69 |

## 5. அறிவிப்பு

### இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2006–2007 வெட்டுத் தீர்மானங்கள்–அளிப்பது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் பேரவைக்கு அளிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கை தொடர்பாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 186 (2)–ன்கீழ் வெட்டுத் தீர்மானங்களை பேரவை உறுப்பினர்கள் முன்மொழியலாம். எனினும், 13–1–2006 ஆம் நாளன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க கீழ்க்காணும் முக்கிய மானியக் கோரிக்கைகளுக்கு மட்டும் வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கலாம்:



1. உள் துறை – காவல்
2. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை
3. தொழில் துறை
4. வேளாண்மைத் துறை
5. உயர் கல்வித் துறை
6. பள்ளிக் கல்வித் துறை

அவ்வாறு கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள், மேற்கூறிய மானியக் கோரிக்கைகள் மீது தலா 5 வெட்டுத் தீர்மானங்கள் வீதம் 21–1–2006 அன்று சனிக்கிழமை பிற்பகல் 3–00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் சேர்ப்பிக்கலாம்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (21–01–2006) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 6-16 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

26. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் பணி விதிகள் இயற்றியது குறித்து பொது (மஉ)த் துறையின் 13–6–2005 ஆம் நாளிட்ட 612 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1993 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் (மத்திய சட்டம் 10/1994) 41 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

27. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

[2006 ஜனவரி 20

28. 2004–2005 ஆம் ஆண்டிற்கான அரசு ரப்பர் கழகத்தின் இருபத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

29. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

30. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கிராபைட் நிறுவனத்தின் எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

22. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எண்பத்தி ஆறாவது அறிக்கை. (2003–2006)

23. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எண்பத்தி ஏழாவது அறிக்கை. (2003–2006)

24. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எண்பத்தி எட்டாவது அறிக்கை. (2003–2006)

25. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எண்பத்தி ஒன்பதாவது அறிக்கை. (2003–2006)

26. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று தொன்னூறாவது அறிக்கை. (2003–2006)

27. மனுக்கள் குழுவின் நூற்று முப்பதாவது அறிக்கை. (2003–2006)

28. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்து இரண்டாவது அறிக்கை. (2003–2006)

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227004.
சென்னை-600 008
நூலகம்
N214,32/66
D

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.